உ

சிவமயம்

# குமரகுருபரன்

S. Balasubramanian.

| மலர் 26 | ஆண்டு மலர் தை மீ 1975-ஆம் | இதழ் 1 |
|---|---|---|

18.1.75



ஆண்டு மலர் 50 பைசா வருடச் சந்தா ரூ. 5-00

த. 3128

# குமரகுருபரன்


## ஆசிரியர் குழு.

1. திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.

2. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M.A., B.O.L.
ஒப்புபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸ்பால், திருப்பனந்தாள்.

3. திரு பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A..
ஒப்புபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

4, திரு. டி. எச். விவேகானந்தம்பிள்ளை அவர்கள் [J. P.]
B A. L. T. ஒப்புபெற்ற அசிஸ்ட்டண்டு கமிஷனர், சென்னை–86

5. Dr. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A Phd.
அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம். மதுரை–2

**K. சுப்பிரமணிய பிள்ளை,**
கௌரவ நிர்வாக ஆசிரியர்.

T-UN-447

திருச்செந்திலாண்டவன் துணை



# குமரகுருபர சுவாமிகள்

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை



திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் 20 ஆவது அதிபர்


ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

(அருள் ஆட்சிக்காலம் 1941-1972)

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை



திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் 21 ஆவது அதிபர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
அவர்கள் [16-5-1972 முதல்]

உ

திருச்செந்திலாண்டவன் துணை

# பொங்கி மகிழ்வோமே!

திருமதி. வசந்தா ஏ. பி. எஸ். மணி அவர்கள்,

அசோக்நகர், சென்னை—83.

திங்களின்று பன்னிரண்டு சென்றதென்ன தாயே
தென்னவர்கள் தரும் விருந்தை அருந்திடுவாய் நீயே
மங்களங்கள் மனைகளெங்கும் முழங்கிடுமாம் தாயே
மனமினிக்கும் மென் கவிதை கேளு கொஞ்சம் நீயே

தங்கம் நிகர் நல்லுழவர் உன்னுயிராம் தாயே
தரணிக்கு செல்வமென சொன்னவளும் நீயே
எங்களுக்கும் ஞாயிறுக்கும் சொந்தமான தாயே
எந்த எவர் ஏர் உழவர் சிந்தை புகும் நீயே

வங்கத்திரை வழங்குமிங்கு வழிவழியாய் தாயே
வண்ணமிகு நல்லமுத்தை கொண்டுவந்தாய் நீயே
கங்கையென இன்பமிங்கு கரைபுரளும் தாயே
கன்னலொடு நெல்மணியாய் காட்சிதந்தாய் நீயே

குங்குமமும் கொடிமலரும் கொண்டவள்நீ தாயே
கொஞ்சுமெழில் கொத்துமஞ்சள் மாலையணி நீயே
சங்கடங்கள் உன்சன்னதியில் சங்கமமாம் தாயே
சர்க்கரைப்பால் பொங்கலிட்டோம் சாப்பிடதை நீயே

அங்கமெலாம் நெய் மணத்தை அள்ளிவரும் தாயே
அடுத்து வரும் திருநாளை எண்ணிசெல்லு நீயே
தங்குவது இல்லையிங்கு தவறியும்நீ தாயே
திங்களொன்று தயவுடனே தங்கிடுவாய் நீயே

பங்கமிது பண்டங்களும் பறக்கும்விந்தை தாயே
பரிகசித்து குசலம் பேசும் கொடுமையைப்பார் நீயே
பொங்கிடுது பாலின்று உனைக்கண்டு தாயே
பொங்கலோ பொங்கலென்று பொங்கி மகிழ்வோமே!

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை




மலர் 26 | ஆனந்த ௵ தை மீ 1௳ [14-1-75] | இதழ் 1

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

## "குமரகுருபரன்"

## இருபத்தாறுவது ஆண்டுமலர்

## தோற்றுவாய்

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர், — குமரகுருபரர்.

"குமரகுருபரன்" திங்கள் இதழ் இருபத்தைந்து ஆண்டுகள் தமிழிலக்கியம், சைவ சமயம் சார்ந்த கட்டுரைகளைத் தாங்கி நின்றுநன்கு வளர்ந்து, வாசகர்களுக்கு நல்விருந்து

நல்கி பொங்கல் நன்னாளாகிய இன்று (14-1-1975) இருபத்தாறுவது ஆண்டு தொடக்கம் எய்திப் பேரெழிலுடன் போதருவதைக் கழிபேரு வகையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகவாம் பேரறிவாளர்; ஒத்ததறிவார்; நயனுடையார்; பெருந் தகையார் கடனறி காட்சியர் என்ற போற்றத்தக்க அருட்பெருங் குணங்களுடன் திகழ்ந்து, ஊருணிநீர் நிறைந்தாற் போலவும், பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தாற் போலவும், மருந்தாகித் தப்பா மரம் போலவும் ஒப்புரவுகள் ஒல்லும் வகையான் ஓவாதே ஆற்றிப் பெருங் கொடையாளராக விளங்கியருளியவர்களும், முனிபுங்கவரும் ஆகிய பெருந்தவச் செல்வர், ஸ்ரீ காசிமடத்தின் 20-ஆவது அதிபராக எழுந் தருளியிருந்து ''குமரகுருபரனைத்'' தோற்றுவித்தும், பத்திரிகைக்கு ஒரு அச்சகம் இன்றியமையாததெனத் திருவுளங் கொண்டு ஒரு அச்சகமும் நிறுவி, அச்சகத்திற்கு வேண்டிய இயந்திரச் சாதனங் களும் அச்செழுத்துக்கள் முதலான சகல தளவாடச் சாமான்களும் அமைத்துக் கொடுத்ததோடு ஷை அச்சகத்திற்கெனக் காலி நிலமும் வாங்கி, அதில் சகல வசதிகளுடன் கூடிய புதுக்கட்டிடமும் கட்டிக் கொடுத்தருளிய பேரன்பு என்றும் மறக்கற்பாலது அன்று. அம் மட்டோ! அச்சகம் தளரா வளர்ச்சியுடனும் சிறப்புடனும் விளங்கப் பன்னிரு திருமுறைப் பதிப்புநிதி அறக்கட்டளையும் ஏற்படுத்தி ஷை நிறுவனங்களெல்லாம் நிரந்தரமாக வளர்ந்து வருவதற்கான சாஸ்வத நிதிகளும் தனித்தனி வகுத்தருளி பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து பல்லாற்றானும் பேணிப் புரந்தருளிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பரீதாபி ஆண்டு வைகாசித் திங்கள் வளர்பிறை சஷ்டியில் (18-5-72) வாரணாசியில் பரிபூரணம் எய்தி, ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் திரு வுளப் பாங்கின் வண்ணமே ஆதி குமரகுருபர சுவாமிகளைப் பின் பற்றிக் கங்கையில் ஜல சமாதியானதும் அன்பர்கள் அனைவரும் அறிந்ததே.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் முதலாண்டு குருபூஜை விழா அன்னம்பாலிப்பு-திருமுறைவிழா 6-6-73ல் ஸ்ரீ குமரகுருபர சுவாமி கள் அவதாரத் தலமாகிய ஸ்ரீவைகுண்டத்திலும், குமரப்பெருமான் திருவருள் பாலித்த திருச்செந்தூரில் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் குருபூஜை விழா, அன்னம்பாலிப்பு-திருமுறைவிழா 27-5-74 லும் நடைபெற்று மூன்றாவது ஆண்டான நாளது வருஷம் வைகாசித் திங்கள் வளர்பிறை சஷ்டியில் திருமுறைக் கொடை வள்ளலாகத் திகழ்ந்த ஸ்ரீலஸ்ரீ அருள்நந்திசுவாமிகள் அவர்கள் தோன்றியருளிய அரியநாயகிபுரத்திலும் (மூன்று வருடங்களுக்கு ஒரு முறையாக ஷை யிடங்களில் முறையே) குருபூஜை விழாவும், மாகேசுவர பூஜை விழா வும், திருமுறை விழாவும் நடைபெற விருக்கின்றது. ஷை வகைக்கு

குமரகுருபரன் சங்கம் ரூ. 10,000 மூலதனத்தில் ஒரு அறக்கட்டளை யும்நிறுவி, ஆவணப் பதிவுமாகியிருக்கிறது.

அவர்கள் அருள்வழி நின்றெழுகும் ஸ்ரீ காசிமடத்தின் 21-வது அதிபரான ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் அரவணைப்பிற்கும் அருள் நோக்கிற்கும் இலக்கியமாகிய தற்கொப்பவே இத்திங்கள் இதழின் வளர்ச்சிக்கு ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்களும் ஆவன புரிந்தும், அறிவுரைகள் அவ்வப்போது வழங்கி கியும் அன்புடனும் ஆர்வத்தோடும் உதவிகள் பல புரிந்தும், அருட் செங்கோல் நடாத்தியருளும ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் திருமுன்னர் இவ் இருபத்தாருவது ஆண்டுமலரைப் பணிவன்பு மலராகத் திசை நோக்கிய வணக்கங் களுடனும் சமர்ப்பணம் செய்து கொள்கிறேன். ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்களும் ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தி சுவாமிகளைப் போலவே அறக் கட்டளைகளை நிறுவுவதிலும், பேணுவதிலும், இலக்கிய சமயவளர்ச்சி களைப் போற்றுவதிலும், ''குமரகுருபரன்'' வளர்ச்சியிலும் மிகுந்த ஈடுபாடும் பேரார்வமும் உடையவர்களாய் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்ருர்கள். அவர்கள் ஆட்சியில் முதல் அறக்கட்டளை யாக ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பரிபூரணம் எய்திய வைகாசித் திங்கள் சுக்கில பட்சம் பூசநட்சத்திரத் தில் ஸ்ரீ காசி குமாரசாமி மடத்தில் ஆண்டுதோறும் சாதுக்களுக்கு பண்டாரா நடத்துவதற்கான நிதிவகுத்தருளி அறக்கட்டளையும் நிறுவியுள்ளார்கள். அதனைத் தொடர்ந்து பற்பல அறக்கட்டளை களும் நிறுவப்பெற்று வருவதும் அன்பர்களறிந்ததே.

இவர்கள் ஸ்ரீ காசி மடத்தின் அருளாட்சியை ஏற்றபின்பு சென்ற விஜயதசமி (17—10—1972) வெளியீடாகப் பதினேராம் திருமுறை யின் இரண்டாம் பதிப்பு வெளியிடப் பெற்றுள்ளது. இந்த நூற்ருண் டின் தொடக்கத்தில் வெளிவந்ததும், பல ஆண்டுகளாகப் பதிப்பில் இல்லாததும் ஆகிய திருக்குறள்-மணக்குடவர் உரை திருக்குறள் பதிப்பு நிதி வெளியீடாக 6—9—73ல் வெளியாகியுள்ளது.

திங்கள் தோறும் 'குமரகுருபரனில்' வழக்கமாக வெளிவரும் இலக்கிய, சமயக் கட்டுரைகளோடு அருள் நூல்களின் நுண்ணிய நலங்களையெல்லாம் அன்பர்களுக்கு வாரி வழங்குதற் பொருட்டு பேராசிரியர்கள் திரு. கு. சுந்தரமூர்த்தி, திரு. தா. ம. வெள்ளை வாரணம் அகியவர்களைக் கொண்டு தேவாரப் பதிகங்களுக்கு உரை யெழுதி வெளியிடச் செய்தருளியுள்ளார்கள்.

ஸ்ரீ ஆதிகுமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த செய்யுட்கள் சொல்லின்பத்தை விளைவிப்பன; பொருட்செறிவு உடையன; கம்பீர மான நடையுடையன, இயற்கை வருணனைகள் செறிந்தன, அவற்

றினூடே சிவபக்தி மிளிர்வன, படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்ப மூட்டுவன. தமிழினிடத்தே தெய்வத் தன்மையைக் கண்ட குமர குருபர சுவாமிகள் அதனைத் தெய்வத் தமிழ் என்றும் பாராட்டுகின்றார். எனவே குமரகுருபர சுவாமிகளின் நூல்களை யாவரும் எளிதில் கற்று அறிந்து கொள்வதன் பொருட்டு, அவர் நூல்களைப் பற்றிய விளக்கவுரை, உரைநடை முதலியன வெளிவருவதை வாசகர்கள் நன்கு அறிவர்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய நூல்களை ஒவ்வொன்ருக எடுத்துப் பொழிப்புரை எழுதுபவர்கள் திரு; பாலகவி, வயினகரம் வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் (தத்புருஷதேசிகர்) ஆவார். அவர்களுடைய உரைநடையும் தொடர்ந்து வரும்.

இம்மலருக்குக் கட்டுரைகள் எழுதிய திரு, வே. இராமநாதன் செட்டியார், திருமுருக கிருபானந்தவாரியார், திரு; தெ. முருகசாமி திரு கு. சுந்தரமூர்த்தி, திரு; ஸ்ரீராமநாமப்பரதேசியென்ற புதுக்கோட்டை ஸ்ரீராமகதாரத்ன, V. தியாகராஜன், திரு, புலவர்: பி, ரா. நடராசன், திரு, அரங்கமுத்துமணி, பேராசிரியர், திரு: இ. எஸ். வரதராஜய்யர், திருமதி ஆர். பார்வதி அம்மாள், திரு. கோவிந்தசாமி, திரு, P. S. இராமமூர்த்தி, திருமதி, ப. உமாதேவி, திரு, சிக்கல்; சி. சானகிராமன், திரு, அ. சுவாமிநாதன், திரு, நா. சங்கரராமன், திரு, எ. மாணிக்கம், திரு, K. ஸ்ரீதரன், திரு, பி. ரா. நடராசன், திரு, P. திருஞானசம்பந்தம், திரு, கு. சோ. முருகன் திரு, தா ம. வெள்ளைவாரணம், திருமதி; வசந்தா ஏ. பி. எஸ். மணி ஆகியவர் களுக்கும் செந்திலாண்டவன் திருவருள் மல்குக.

சந்தா நேயர்கள் தொடர்ந்து சந்தாவைச் செலுத்திக் குமரகுருபரனை வளர்க்கும் பணியில் பங்கு கொண்டு செந்திலாண்டவன் திருவருட் பேறடைவாராகுக.

குமரகுருபரன் திங்கள் தோறும் உரிய காலத்தில் வெளிவருவதற்கு கட்டுரைகளை எப்பொழுதும் உதவிவரும் அன்பர்களுக்கும், குமரகுருபரனின் வாசகர்கள் அவ்விதழைப் படித்துச் மேன்மேலும் அறிவு பூத்துத்துலங்க வேண்டுமென்னும் நோக்கததுடன், உதவும் ஆசிரியர் குழுவினருக்கும், உரியகாலத்தில் அச்சுப்பணியை நிறைவு செய்துவரும் குமரகுருபரன் அச்சகப் பணியாளர்களுக்கும் இதழ்களைக் குறித்த காலத்தில் அனுப்பி உதவிவரும் கலைக்கோவில் சிப்பந்திகளுக்கும், திருச்செந்திலாண்டவன் திருவருள் துணை முன்னிற்க!

வளர்க குமரகுருபரன்! வளர்க நற்சைவம்! வாழிய நற்செந்தமிழ்!

இங்ஙனம்.

ஸ்ரீவைகுண்டம்.
14—1—75

K. சுப்பிரமணிய பிள்ளை,
கௌரவ நிர்வாக ஆசிரியர்

## உள்ளுறை


| வரிசை எண் | கட்டுரையாளர் | பக்கம் |
|---|---|---|
| 1 | குமரகுருபரன் இருபத்தாருவது ஆண்டுமலர் தோற்றுவாய் | i |
| 2 | அருளும் பொருளும்<br>சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர், பாலகவி திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் தேவகோட்டை. | 1 |
| 3 | அதனையிங்கு அனுப்புவாயே<br>திருப்புகழமிர்தம் ஆசிரியர், பக்த திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் சென்னை. | 4 |
| 4 | வாழ்வும் சமயமும்<br>திரு. புலவர் தெ. முருகசாமி பி. ஓ. எல். அவர்கள் இராமசாமி தமிழ்க் கல்லூரி (விரிவுரையாளர்) காரைக்குடி. | 6 |
| 5 | பெரிய புராணத்தில் காணும் இலக்கணக் குறிப்புக்கள்<br>தருமபுர ஆதீனப் புலவர் சித்தாந்தநன்மணி கு. சுந்தரமூர்த்தி, எம். எ. முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி திருப்பனந்தாள். | 10 |
| 6 | அருள்மொழி அமுது<br>திரு. ஸ்ரீராமநாமப்பரதேசி அவர்கள் 3119 இரண்டாம்வீதி புதுக்கோட்டை–1 (திருச்சி மாவட்டம்) | 13 |
| 7 | அலங்கார நாயகன் 7<br>திருமதி. ஆர். பார்வதி அம்மாள் தமிழாசிரியை, நாமக்கல். | 17 |
| 8 | கம்பன் காட்டும் சிவகருணை<br>திரு ஸ்ரீராமகதாரத்ன: V. தியாகராஜன் அவர்கள், புதுக்கோட்டை–1 | 21 |
| 9 | பேராசிரியர், இ. எஸ். வரதராஜய்யருக்கு<br>24-12-74ல் பூனாவில் நிகழ்ந்த சதாபிஷேகத்தில் டாக்டர்; சாமிநாதய்யர் நூலகத்துப் பணியாற்றும் மு. கோ. ராமன் பாடிய வாழ்த்துப்பாக்கள் | 25 |

10 அறுமுகனின் அருள்மிகு தலங்கள்
அறுபத்தாறு 27

திரு. புலவர், பி. ரா. நடராசன் அவர்கள்
தமிழாசிரியர், பிஷப்ஈபர் உயர்நிலைப்பள்ளி புத்தூர்–திருச்சி 17.

11 பொங்கற் சிந்தனைகள் 32

திரு. அரங்க; முத்துமணி அவர்கள் துணைப்பதிவாளர்
அரியலூர்.

12 முருகன் அருள் 33

வித்துவான், திரு. கோவிந்தசாமி அவர்கள் தமிழாசிரியர்
திருமுக்கூடல் (அஞ்சல்) செங்கற்பட்டு மாவட்டம்.

13 பூமே! பூமே! பூமே! 41

அருணகிரிதாசன் திரு. P. S. இராமமூர்த்தி அவர்கள்
டால்மியாபுரம்.

14 கந்தன் தந்த அகவாழ்வு 48

திருமதி, ப. உமாதேவி அவர்கள் (ஆசிரியை)
9/49 திரௌபதி அம்மன் கோயில் தெரு அரியாங்குப்பம்
புதுவை-7.

15 நலந்தரும் நாமம் 56

செந்தமிழ்ச் செல்வன் புலவர் திரு சிக்கல் சானகிராமன்
அவர்கள், சிக்கல் (அஞ்சல்) நாகை (வட்டம்)

16 குறள் கூறும் (உடைமைகள்) 59

திரு. அ. சுவாமிநாதன் அவர்கள் துணை அஞ்சலகத் தலைவர்
அரியாங்குப்பம் 605007

17 இந்துமதம்–ஒரு தத்துவ விளக்கம் 64

வித்துவான் திரு. நா. சங்கரராமன் பி. ஏ. அவர்கள்
மாஞ்சோலை, அம்பாசமுத்திரம் வட்டம், நெல்லை மாவட்டம்

18 "ஒருவரையும் நம்புகிலேன்" 66

திரு. புலவர்: எ. மாணிக்கம் அவர்கள்
"முருக நிலையம்" விசூர்.

19 கல்வெட்டுக்களில் விளக்கு அறம் 71

திரு, K. ஸ்ரீதரன் M. A. அவர்கள், தஞ்சாவூர்–7

20 செய்ந்நன்றி மறவா சீலர் 77
திரு. புலவர்: பி. ரா. நடராசன் அவர்கள், தமிழாசிரியர்
பிஷப்ஈபர் உயர்நிலைப்பள்ளி புத்தூர்-திருச்சி 17.

21 இருவினை யொப்பு 84
திரு. P. திருஞானசம்பந்தம் அவர்கள்
கிராம அதிகாரி செஞ்சி.

22 உள்ளம் கவர் கள்வன் 88
திருமதி. ப. உமாதேவி அவர்கள் ஆசிரியை
9/49 திரௌபதி அம்மன் கோவில் தெரு அரியாங்குப்பம்
புதுவை-7.

23 'தள்ளல் அறமாமோ' 94
திரு. கு. சோ. முருகன் அவர்கள்,
சர்வசன உயர்நிலைப் பள்ளி, கோயமுத்தூர்-641004.

24 மூன்றும் திருமுறையின்
முதற்பாடல்கள்-உரை 95
திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

பன்னிருதிருமுறை பதிப்பு நிதி வெளியீடு:

# பெரிய புராணம்

## மூலம் மட்டும் (புதிய பதிப்பு)

ஸ்ரீலஸ்ரீ ஆதிகுமரகுருபர சுவாமிகள் 286-ம் ஆண்டு
மாகேசுவரபூசை வெளியீடு

750 பக்கங்கள் கொண்டது: வெள்ளைத்தாள்

விலை ரூ. **6—75**

20 பிரதிகளுக்கு குறையாமல் வாங்குவோர்க்கு
20% கழிவு உண்டு.

பாக்கிங் செலவு தபால், ரயில் கட்டணம் வேறு

கிடைக்குமிடம்:-

K. சுப்பிரமணியன், குமரகுருபரன் சங்கம்,
ஸ்ரீவைகுண்டம், 628601 (திருநெல்வேலி ஜில்லா)

தியாகராஜ விலாசம், 53. பிள்ளையார் கோயில் தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை திருவல்லிக்கேணி
சென்னை-5

சிவ சிவ]

# அருளும் பொருளும்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் பாலகவி
**திரு, வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,**
தேவகோட்டை

மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் உறுதியாகப் பெறுதற்குரியன அருளும் பொருளுமாகிய இவ்விரண்டுமேயாகும். ''அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க், கிவ்வுலகம் இல்லாகி யாங்கு'' என்பது திருக்குறள்.

அருளுடையாரிடத்துப் பொருளும், பொருள் படைத்தாரிடத்தில் அருளும் எளிதில் வந்து கூடுதற்கு வாய்ப்பு உண்டு. பொருள் என்பதில் காட்சிப் பொருளும், கருத்துப் பொருளுமாகிய எல்லாம் அடங்கும். ''இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமில் இன்பத்து அழிவில் வீடும், நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன'' என்பார் பரிமேலழகர், வடமொழியில் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று குறிக்கப் பெறுகின்ற புருஷார்த்தங்களே, தமிழில் அறம், பொருள், இன்பம், வீடு எனக் குறிக்கப் பெற்றன.

தமிழ்ச் சான்றோர்கள் அறம் பொருளின்பம் வீடாகிய நான்கையுமே பொருளில் அடக்கிப் பேசியுள்ளார்கள். பொருளதிகாரத்துக்கு இலக்கணம் கூறுகின்ற நச்சினார்க்கினியர், ''பொருளாவன அறம் பொருளின்பமும் அவற்றது நிலையின்மையும் அவற்றினாகிய வீடுபேறுமாம்'' என்பார். இவ்வாறு பொருளென்னும் சொல் எல்லாவற்றையும் குறிக்கும். இயைபுடையதாயிருப்பினும், உலகியலிற் பெறத்தக்கனவாகிய அறமும் இன்பமும் ஒழிந்த செல்வத்தையே சிறப்பாகக் குறித்துக் கொண்டிருக்கின்றதாதலின். அதனைப் பின்பற்றிப் பொருளைச் செல்வப் பொருளாகவே கொண்டு சில கருத்துக்களைச் சிந்தனைக்குக் கொண்டு வருவோம்.

"அருள்" என்பது, தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை. அது அன்பிலிருந்து முகிழ்த்து வருவது. அன்பு என்பது, வாழ்க்கைத் துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார்களிடத்துக் கொள்ளும் காதல், முதலில் தம்மைச் சார்ந்தவர்களிடத்துக் கொண்ட காதல், நாளேற ஏறத் தொடர்பு பற்றாது அனைத்துயிர்களிடத்திலும் சென்று சேரும். இதனாலேயே "அருள்" என்னும் குழந்தை "அன்பு" என்னுந் தாயாற் பெறப்படுவது என்று திருவள்ளுவர் கூறினர்.

எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செய்கின்ற ஒருவனுக்கு, இறைவன் பால் அன்பு செய்வது எளிதில் கைகூடி நிற்கும். "ஈசனுக் கன்பில்லார் அடியவர்க் கன்பில்லார், எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பிலார்" என்பது சிவஞான சித்தியார். இதில் தம்மைச் சார்ந்தாரிடத்து உண்டாவதாகிய அன்பு இல்லாத பொழுது மற்ற உயிர்களிடத்துஉண்டாவதாகிய அருள் இருக்க மாட்டாது என்பது, குறிப்பால் உணர்த்தப்பட்டது. உயிர்களிடத்துவைக்கின்ற இரக்கமாகிய அருள்எல்லா மக்களுக்கும் வேண்டப் பெறுவதென்பதை எல்லாச் சமயங்களும் ஏற்றுக் கொள்ளுமேனும், சைவ சமயத்திற் போல, ஆண்டவனருளைப் பெறுதற்கு அது வாயில்" என்று சொல்லமாட்டா.

தெய்வப் புலமைத் திருவள்ளுவர் பெருமான் அருளின் இன்றியமையாமையை "அருளுடைமை" என்ற அதிகாரத்திலும், பொருளின் இன்றியமையாமையைப் "பொருள் செயல் வகை" என்ற அதிகாரத்திலும் வலியுறுத்திக் கூறியுள்ளார். இவ்விரண்டு அதிகாரங்களிலுமுள்ள குறட்கருத்துக்களை உற்று நோக்குவார்க்கு இவற்றது தொடர்பு நன்கு தெரியும்.

"செல்வங்கள் பலவற்றுள்ளும் சிறந்த செல்வம் அருட் செல்வமே. பொருட் செல்வம் இழிந்தவரிடத்தும் இருப்பதாகும். நல்ல நெறியிலே நின்று ஆராய்ந்து அருளுடையராயிருங்கள். எல்லாவற்றாலும் ஆராய்ந்தாலும் துணையாவது அருளொன்றே, இருள் சேர்ந்த துன்ப உலகிற் செல்லுதல், அருள் சேர்ந்த நெஞ்சை உடையவர்களுக்கு இல்லை. உயிர்களைப் பேணி அருளாள்பவர்களுக்குத் தன்னுயிர் அஞ்சுவதற்குரிய தீவினைகள் இல்லையாகும். அருளுடையவர்களுக்குத்

துன்பம் உண்டாகாது. அதற்கு இவ்வுலகத்தில் வாழ்பவர்களே சான்றுவார்கள். அருளைத் துறந்து கொடுமை செய்பவரைப் பொருளை நீங்கி மறந்தவரென்று உலகம் சொல்லும். பொருளில்லார்க்கு இவ்வுலக இன்பம் இல்லையானால் போல அருளில்லார்க்கு வீட்டுலக இன்பம் இல்லை. பொருளில்லாதார் ஒரு காலத்தில் அதனை உடையராதல் கூடும். அருளில்லாதவர் என்றும் இல்லாதவரே'' என்பன அருள் பற்றித் திருவள்ளுவர் கூறிய அருங்கருத்துக்களாகும்.

பொருளல்ல வரையும் பொருளாக மதிக்கச் செய்வது பொருளே. எல்லா நலங்களும் உடையவராயினும் செல்வமில்லாதவரை அனைவரும் இகழ்வர், அது உடையவரை யாவரும் உயரச் செய்வர். பொருளென்னும் நந்தா விளக்கு எண்ணிய தேயத்துச் சென்று பகையை அறுக்கும். திறமறிந்து நல்வழியில் ஈட்டப்பட்ட பொருள் அதனின் முன்னதாகிய அறத்தையும் பின்னதாகிய இன்பத்தையும் நல்கும். அருளோடும் அன்போடும் வாராத பொருளீட்டம் கொள்ளத்தக்கதன்று. தானே வந்துற்ற பொருளும் சுங்கப் பொருளும் பகைவர் திறைப் பொருளுமே அரசர்க்குரியன அன்புத் தாய் பெற்ற அருட்குழவி பொருளென்னும் செவிலியால் நன்கு வளரும். கைப் பொருளுண்டாகச் செய்பவனது தொழில் குன்றேறி யானைப்போர் கண்டதை ஒக்கும் பகைவர் தருக்கை அறுக்கும் கூரிய படைக்கலமாகிய பொருளை அனைவரும் ஆக்கிக் கொள்ளல் வேண்டும். பொருள் படைத்தவருக்கு மற்ற அறமும் இன்பமும் எளிமையானவை'' என்று பொருள் செயல் வகையில் பொய்யில் புலவர் புகன்றுள்ளார்.

மேலைத், தவத்தளவேயாகுமாம் தான் பெற்ற 'செல்வம்' என்பது ஔவையார் திருவாக்கு, தவத்தின் பயனாக வருவது செல்வமாயினும் அது நிலையற்றதென்பதை அனைவருமறிவர். "ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம்'' என்பது அவர் திருவாக்கே. நிலையற்றதாகிய உடம்பைத் துணைக் கொண்டு நிலையுற்றதாகிய முத்தியின்பத்தை அடைதல் அறிவுடைமை, அதுபோலவே நிலையற்றதாகிய பொருளைப் பயன்படுத்தி நிலையுற்றதாகிய அருளை அடைய முற்படல் வேண்டும்.

**நலமே தழைக**

# "அதனையிங்கு அனுப்புவாயே"

திருப்புகழமிர்த ஆசிரியர்
**பக்த திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள்**
சென்னை.

-O-

நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தருக்கு ஆயிரம் பொன் அடங்கிய உலவாக்கிழியருளிய தலம் திருவாவடுதுறை.

அத்தலத்திலே சென்ற நூற்றாண்டிலே சைவ சித்தாந்த ஞானபானுவாக விளங்கி, குருபீடத்தில் எழுந்தருளி அருட் செங்கோலைத் தாங்கி ஞான அரசாட்சி செய்தவர் மேலகரம் சுப்ரமண்ய தேசிகர் அவர்கள்.

**தமிழ் விநோதர்**

அவர் எப்பொழுதும் தமிழ்ப் புலவர்கள், இசைப் புலவர்கள் முதலியவர்களுடன் அளவளாவி, தமிழ் விநோதராக இருந்தார்.

தேசிகர் தாமே பலருக்குத் தமிழ் நூல்களைப் பாடஞ் சொல்லுவார். வேறு பல புலவர்களைக் கொண்டும் பயிற்றுவிப்பார்.

வடக்கே போஜராஜனுடைய சபையில் எப்படி, காளிதாசர், பவபூதி. தண்டி, பாரவி முதலிய புலவர்கள் பலர் நிரம்பியிருப்பார்களோ, அதுபோல தேசிகருடைய சபை இடையறுது புலவர்கள் நிரம்பிய வண்ணம் இருக்கும்: புலவர்களின் தரம் அறிந்து பரிசில் வழங்குவார்.

அக்காலத்தில் அவரிடம் பரிசில் பெருத பாவாணர்களே இலர். தமிழ்க் கடலாகவும், அள்ளி வழங்கும் தாதாவாகவும் அவர் புகழ் பெற்று இருந்தார்.

ஒருநாள் மாயவரம் முன்சீப்பு வேதநாயகம் பிள்ளையவர்கள் திருவாவடுதுறை மடத்திற்கு வந்தார். அவர் கிறிஸ்துவர், இவர் சைவ மடாதிபதி, ஆனல் தமிழ்ப் பற்று

உள்ளவர்க்கு இச்சிறு தடை என்ன செய்யும்? தமிழாகிய தனி வெள்ளம் கரைபுரண்டு ஓடும்போது சாதி, சமயம், மதம் முதலிய உப்பு மூட்டைகள் யாவும் கரைந்துவிடும் அல்லவா!

நீதிபதியும் ஞானநிதியும் ஒன்றுகூடி, உள்ளங் கலந்து, உணர்வு கலந்து உயிர்கலந்து பகல் முழுவதும் உரையாடிக் கொண்டிருந்தார்கள். மணி போனதே தெரியவில்லை.

தேசிகரிடம் நீதிபதி பிரியா விடைபெற்று, வண்டியில் ஏறி மாயூரத்தை நோக்கிப் புறப்பட்டார்.

வேகமாகச் செல்கின்ற காளைமாட்டு வண்டியில் சென்று மாயூரம் சேர்ந்தார்.

மறுநாட் காலையில் எழுந்தார், ஒருமுக்கியமான பொருள் திருவாவடுதுறை மடத்திலேயே நின்று விட்டது. அது இல்லாமல் இங்கே ஒரு வேலையும் நடக்கவில்லை மிகவும் அல்லல்பட்டார்.

உடனே ஒரு கடிதம் எழுதினர்; வசனமாகவா? இல்லை. பாடத் தெரிந்தவர் அவர்.

**சுருதியோர் உருக்கொண் டென்ன**
**சுப்பிர மணிய மேலோய்!**
**கருதிஇன் னெருகால் உன்னைக்**
**காணலாம் எனும் அவாவால்**
**பொருதிஎன் மனம்பின் ஈர்க்கப்**
**பொறையுறும் வண்டி பூட்டும்**
**எருதுகள் முன்னே ஈர்க்க**
**என்பதி அடைந் திட்டேனே.**

வேதமே ஒரு வடிவு கொண்டது போன்ற சுப்ரமணிய தேசிக மாமணியே! இன்னும் ஒருமுறை உம்மைக் காணலாம் என்று என் மனம் பின்னே ஈர்க்கவும், வண்டியில் கட்டிய எருதுகள் முன்னே பிடித்து ஈர்க்கவும் இப்படி முன்னுக்கும் பின்னுக்கும் தள்ளாடிய வண்ணம் இங்கு வந்து சேர்ந்தேன்

"ஐயனே! நேற்றிரவே என் ஊர் வந்து சேர்ந்தேன்; ஆனல் என் உள்ளம் அங்கேயே நின்றுவிட்டது. மனம் அங்கும் உடல் இங்குமாக இருந்தால் என்ன வேலை செய்ய

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# "வாழ்வும் சமயமும்"

திரு புலவர். தெ முருகசாமி பி. ஓ. எல் அவர்கள்.
இராமசாமி தமிழ்க்கல்லூரி, (விரிவுரையாளர்)
காரைக்குடி–1

சமயம் என்பது மனித வாழ்க்கையின் எல்லையிலிருந்து பிரித்தெடுக்க முடியாத ஒன்ருகும். பிறப்பு ஒத்த எல்லா மனித வாழ்விலும் காணப்பெறும் உயிர்ப்பான சில அடிப் படை உணர்வுகள் சமய நெறிகளாக வகுக்கப்பட்டுள்ளன. என்றும் மாருத இவ்வுணர்வுகள் மனித வாழ்விற்குக் காரண காரியத் தொடர்ச்சியாய் வந்து கொண்டிருப்பதால் சமயம் என்ற வாழ்வின் குறியீட்டு இயக்கம் தொன்று தொட்டு பல நூற்ருண்டுகளாக உலகெங்கிலும் சிறப்புற்று வருகின்றது. இதை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் நன்கு அறியலாம்.

அறுவடையாகும் நெல்லின் ஒரு கூறுதான் விதை நெல் லாகப் பாதுகாக்கப் படுகின்றது. அவ்விதை நெல்லே அடுத்த

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

முடியும்? ஆதலால் என் மனத்தை இங்கு அனுப்பி வைக்கு மாறு வேண்டுகின்றேன்.

**சூர்வந்து வணங்கு மேன்மைச் சுப்பிர மணியத் தேவே**
**நேர்வந்து நின்னைக் கண்டு நேற்றிராத் திரியே மீண்டு**
**ஊர்வந்து சேர்ந்தேன்: என்றன் உளம் வந்து சேரக் காணேன்**
**ஆர்வந்து சொலினுங் கேளோன்: அதனையிங் கனுப்புவாயே.**

(ஆர்–நிரம்பிய; வந்து–காற்று)

''எங்கும் நிறைந்த வாயுதேவன் கூறினுலும்'' என்பது மற்ருெரு பொருள்.

தேசிகருடைய உயர்வும், அவரிடம் ஈடுபட்டுள்ள வேத நாயகருடைய பண்பும் இந்த திருப்பாக்களால் புலனுகின்றன. ஆ! ஆ! என்ன அன்பு! ஆழங்காண முடியாத அருங்கடல் போன்ற அன்பன்ருே!

விளைச்சலைத் தருகின்றது. விதை நெல் காரணமாக விளைச்சலாகிய காரியமும் விளைச்சலாகிய காரியத்திலிருந்து விதை நெல்லாகிய காரணமும் தம்முள் முரண்பாடின்றித் தொன்று தொட்டு மாறிமாறி வருவது போலவே மனிதவாழ்வில் காணப் பெறும் சில நடைமுறைகளே அறம் அல்லது நீதி என்றும் சட்டம் அல்லது ஒழுங்கு என்றும் சமூகத்தைக் கட்டிக் காக்கும் சமய உணர்வுகளாக மாறிமாறி வந்து கொண்டிருக்கின்றன.

மனித வாழ்விற்குத் தொடர்பில்லாத எந்தக் கருத்தும் உலகில் இல்லை. அங்ஙனம் தொடர்புடைய எந்தக் கருத்தும் மனிதனால் சிறப்படையாமலும் இல்லை. சமயம், அரசியல், கலை, மருத்துவம் முதலிய மனித வாழ்வோடு ஒட்டிய கருத்துக்கள் அனைத்தும் சமயநெறி முறைகளான அச்சுக்களால் இயங்குகின்றன. இந்த அடிப்படையில்தான் சமயம் என்று தனித்து பேசப்படும் ஓர் இயக்கம் நாட்டில் அரும்பி, மலர்ந்து, மணம் பரப்பி வருகின்றது.

சமம், சமைதல், சமையல், சமயம் என்னும் சொற்கள் பக்குவப்படும் ஒரு நிலையை உணர்த்தும் ஒருபொருள் குறித்த பல சொற்களாகும். ஒழுங்கற்ற ஒன்றைச் சரி செய்வதைச் சமப்படுத்துதல் என்பர். வலிய காய், அரிசி முதலிய உணவுப் பொருள்களை மென்மையாக்கி உண்ணுமாறு பக்குவப்படுத்துவதைச் சமையல் என்று கூறுவர். ஆண்மைக்குத் துணையாக வேண்டிப் பூப்பெய்திப் பக்குவமடையும் பெண்மை நிலையை உலகில் சமைந்ததாகக் கூறுவது எளிய உலக வழக்காகும். இவ்வாறு மனநலம் பக்குவமடைவதைச் சான்றோர் 'சமயம்' என்ற குறியீட்டுச் சொல்லால் குறித்து வந்தார்கள் என்று கருதலாம்.

உண்மையான சில அடிப்படைகள் என்றும் மாறுவதில்லை. அன்பு, அறம், அருள் ஆகிய உணர்வுகளை மறந்து விட்டு சமயச் சடங்குகளில் ஈடுபடுவதென்பது ஆகுல நீர பிறவாய் அமைந்த போலிச் சமயமாகக் கருதப்படுமேயன்றி உண்மையான சமய வாழ்வாகக் கருத முடியாது.

**''குறிக ளும்மடை யாளமும் கோயிலும்<br>நெறிக ளும்மவர் நின்றதோர் நேர்மையும்<br>அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்<br>பொறியி லீர்மன மென்கொல் புகாததே''**

என்று திருநாவுக்கரசர் பொறிபுலன்கள் ஒன்றாக மனஉணர்வு களைப் பழித்துரைத்தார். எனவே வாழ்க்கையின் எல்லாத் துறையிலும் மனம் தூய்மையடைவதே சமயத்தின் முதற் படியாகும்.

இங்ஙனம் மனம் தூய்மையடைய வேண்டின் ஒவ்வொரு வரும் தம்மைத் தாமே முதலில்யறிந்து கொள்ளுதல் வேண்டும். இதனைத் திருநாவுக்கரசர்,

**மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்**
**பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்**
**தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி இட்டுச்**
**செம்மையுள் நிற்ப ராகிற் சிவகதி விளையு மன்றே!"**

என்று மனந்தூய்மையான எளிவந்த சமய வாழ்க்கையை விளக்கினார்.

தன்னைத்தான் அறியும் பக்குவநிலை ஒருவர்க்கு இயல்பாய் அமைவது அரிதாகும். உணர்த்த உணர்தலும் சூழ்நிலையால் உணர்தலும் மிக எளிதாகும். உணர்த்த உணர்ந்த உயிர் உணர்த்திய அப்பக்குவ நிலையையடைவதால் மனம் தெளி வடைகின்றது. அத்தெளிவே வாழ்வின் எல்லாப் பகுதியிலும் பரவி உண்மைச் சமயத்தை விளக்கிக் காட்டுகின்றது எனலாம்.

பாவைப் பாடல்களின் உட்கருத்து மேற்கண்ட சமய அடிப்படையைக் கொண்டதாகும். உறக்கத்தினின்றும் விழித் தெழுந்து ஆண்டவனை வணங்கி வழிபட வேண்டும் என்று நன்கு தெளிவடைந்த ஒரு பெண், உறங்குகின்ற அதாவது மனந் தெளிவடையாத மற்றொருத்தியை எழுப்பி அங்ஙனம் தன்னைப் போல உணர்வு தெளிவடையச் செய்து நீராட அழைத்துச் சென்றதாகப் பாவைப் பாடல்கள் அமைந்துள்ள தால் உயிர் உணர்த்த உணரும் தன்மையது என்று கூறலாம்.

மாணிக்கவாசகருக்கு இறைவன் திருப்பெருந்துறையில் ஒரு நாள்தான் வெளிப்பட்டார். அவ்வொரு நாளிலும் கண்ட ஒருகண நேரக் காட்சியே அவரை இறைவனோடு தன் வய மாக்கி விட்டது எனில் உயிர், தானே உணரும் தன்மையை விட உணர்த்த உணரும் தன்மையையே இயல்பாய்க் கொண்டுள்ளது என எளிதின் உணரலாமன்றோ! பேரின்ப

நிலையடையும் நெறிக்கு இங்ஙனம் கூறப்பட்டதெனினும் நடைமுறை உலக வாழ்வின் எல்லாப் பகுதிகளையும் பிறர் உணர்த்த உணரும் நிலையில்தான் பெரும்பாலும் மனித வாழ்வு அடங்கியுள்ளதை வெளிப்படையாகக் கண்டு தெளியலாம்.

'ஆன்மா சார்ந்ததின் வண்ணம்' என்பதும் ஓர் சமயக் கருத்தாகும். அதாவது உயிர் சூழ்நிலைக்கேற்ற மாறுதலை இயல்பாகப் பெறுகிறது என்று சமயம் கூறுகிறது. இக்கருத்து மனித வாழ்வில் மிக எளிமையாகக் காணப்படுகின்ற ஒன்றாகும்.

சிறப்பாக வாழ்ந்து வரும் ஒத்த தலைவன் தலைவியரின் வாழ்க்கையில் வறுமை குடிகொள்கின்றது. இதனால் தலைவியின் பெற்றோர் பொருள் கொடுத்து உதவ முற்பட்டு வர, அப்பொருள்களைத் தலைவி விரும்பவில்லை. தான் வளர்த்த மகள் இங்ஙனம் கொடுப்பதை மறுக்கின்றாளே என்று எண்ணிய தந்தை வருந்திக் கூறுகின்றார்.

**''ஏவல் மறுக்கும் சிறுவினை யாட்டி**
**அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள் கொல்?**
**கொண்ட கொழுநன் குடிவறன் உற்றென**
**கொடுத்த தந்தை கொழுஞ் சோறு உள்ளாள்**
**ஒழுகநீர் நுணங்கறல் போல**
**பொழுது மறுத்து உண்ணும் சிறுமது கையாளே''** *நற்றிணை 110.*

நீரின் மேற்புறத்தில் காணப்படும் அலைஅலையான வடிவங்கள் நீரின் அடியிலுள்ள மணலினும் காணப்படுதல் போல செல்வப் போக்கில் வாழ்ந்த தலைமகள் கணவனின் வறுமை வாழ்விற் கேற்ப தன் வாழ்வை அமைத்துக் கொண்டாள் எனில் அது சூழ்நிலையில் விளைந்த, கணவனின் எண்ணத்தோடமைந்த சமய வாழ்க்கையாமன்றோ!

மேற்கண்ட குடும்ப வாழ்வில் காணும் பிணக்கற்ற ஒத்துப் போகின்ற பண்பே சமயம் என்ற தனிநெறிக்கு ஆணி வேராகும். சமயநெறியாகக் கூறப்படும் 'ஆன்மா சார்ந்ததின் வண்ணம்' என்பதற்கும் இம்மனித வாழ்வின் பண்பிற்கும் என்ன வேறுபாட்டைக் கூறஇயலும்! இவ்வாறான ஆண்மைப்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# பெரிய புராணத்தில் காணும் இலக்கணக் குறிப்புக்கள்

தருமபுர ஆதீனப் புலவர், சித்தாந்த நன்மணி
கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ.,
முதல்வர், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

திருமுறைகளில் பன்னிரண்டாவதாக வைத்து எண்ணப் படுவது பெரிய புராணமாகும். இவ்வருமையான இலக்கியம் நவில்தொறும் இன்பம் நல்குவதாகும். இதனைப் பல்வேறு கோணங்களில் ஆய்ந்து காணலாம். அவற்றுள் இலக்கண நெறியில் நின்று எண்ணிக்காண்பது இக்கட்டுரையின் நோக்க மாகும்.

இடைச் சொற்கள் பலவற்றுள் ஒகாரம் என்பது ஒன்று. இது பிரிநிலை, வினா, எதிர்மறை, ஒழியிசை, தெரிநிலை, சிறப்பு ஆகிய ஆறு பொருளில் வரும் என்பர் தொல்காப்பியர். இவ் வறு வகைக்கும் எடுத்துக்காட்டுத் தரும் உரையாசிரியர்கள் பெரிதும் ஒன்றுபட்டே காட்டுவார்கள். பெரிய புராணத்தில் இத்தகைய ஒகார இடைச் சொல்லைச் சேக்கிழார் பெருமான் பெய்து, அது எதிர்மறையிலும். பிரிநிலையிலும் வருமாறு காட்டியுள்ளார்.

**மண்ணினின்மிசை வான் பொய்த்து நதிகள் தப்பி**
**மன்னுயிர்கள் கண்சாம்பி உணவுமாறி**
**விண்ணவர்க்குஞ் சிறப்பில் வரும் பூசையாற்ற மிக்க**
**பெரும் பசி உலகில் விரவக்கண்டு**

---

(முன் பக்கத தொடர்ச்சி)

பெண்மை இயக்கமே பெண்ணின் நல்லாளுடன் பெருந்தகை இருக்கும், அடையாளங்களாக மாறுகின்றன.

எனவே சமயம் என்பது வாழ்வு முழுவதும் தழுவிய ஒன்று என்பதும் அது தனக்கும் பிறருக்குமாக வாழும் நம்பிக்கையையூட்டுவது என்பதும் அந்நம்பிக்கையே ஒருவரை வானுறையும் தெய்வத்துள் கொண்டுய்க்கும் என்பதும் இக் கட்டுரையால் அறியலுறும் கருத்துக்களாகும்.

**பண்ணமரு மொழியுமையாள் முலையின் ஞானப் பாலரு**
**வாயருடன் அரசும் ''பார்மேல்,**
**கண்ணுதலான் திரு நீற்றுச் சார் பினோர்க்குங் கவலை**
**வருமோ''**

என்று கருத்திற் கொண்டார்.

திருவிழிமிழலையில் மழை யின் மை யால் ஏற்பட்ட வறட்சியைக் கண்ட திரு ஞானசம்பந்தர் இதனாலாய தீங்கு திரு நீற்றுச் சார்புடையோர்க்கும் வருமோ என்கின்றார். இங்கு வரும் ஓகாரம் எதிர்மறைப் பொருளில் நின்று 'வாராது' என்பதை வலியுறுத்துகின்றது. திரு நீற்றுச்சார் பினோர்க்கும் வருமோ என்றது பிற சார்புடை யோரினும் பிரித்து நிற்றலின் பிரிநிலையு மாயிற்று. இங்ஙனம் ஓகாரம் இரு பொருளிலும் வருமாறு அமைத்த திறம் காண்டற்குரியது. இது மட்டுமன்று. இப்பாடலில் வான் சிறப்பில் கூறப்பெற்ற திருக்குறட் கருத்துக்கள் பலவும் அமைந்துள்ளன. இப்பாடல் மழையின்மையால் நாட்டில் ஏற்படும் தீங்குகளைத் தொகுத்துக் கூறுகின்றது, மண்ணின் மிசை வான் பொய்த்தலின் நதிகளில் நீரில்லை. உயிர்கள் பலவும் மடிந்தன, திருக்கோவில்களில் நிகழ்த்தப் பெறும் விழவும், பூசனையும் நிகழவில்லை. மக்கள் பெரும் பசியால் வாடினர். இத்தீங்குகள் அப்படியே வான் சிறப்பில் கூறப்பட்டனவாகும்.

'நதிகள் தப்பி' என்றார் இவர். திருவள்ளுவர் 'நெடுங் கடலும் தன் நீர்மை குன்றும்' என்பர். 'மன்னுயிர்கள் கண் சாம்பி' என்றாரிவர், திருவள்ளுவர் ''விசும்பில் துளி வீழினல் லால் மற்றாங்கே பசும்புல் தலை காண்பதரிது'' என்பர் ஓரறி உயிரும் நிலைபெறாது என்பது கருத்து. 'விண்ணவர்க்கும் சிறப்பில் வரு பூசை யாற்ற' என்றாரிவர். திருவள்ளுவர் ''சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்குமீண்டு'' என்பர். திருவள்ளுவர் சிறப்பொடு பூசனை எனக் கூறிய கிடக்கை முறையை அப்படியே இவரும் பின்பற்றியுள்ளார். மண்ணின் மிசை வான் பொய்த்தலின் மிக்க பெரும்பசி உலகில் நிலவியது என்றாரிவர். திருவள்ளுவர் ''விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து உள் நின்று உடற்றும் பசி'' என்பர். இவ்வருமையும் நினைந்தின்புறுதற் குரியதாகும்.

இடைச் சொற்களுள் ஓகாரம் என்பதைப் போன்றே ஏகாரம் என்பதும் ஒன்று. இது தெளிவு, வினா, பிரிநிலை, எண், ஈற்றசை ஆகிய ஐந்து பொருளில் வரும் என்பர் தொல்காப்பியர். இவ்விடைச் சொல்லையும் சேக்கிழார் பெய்து காட்டுகின்றார்.

ஆதிமந்திரம் அஞ்செழுத் தோதுவார் நோக்கும்
மாதிரத்தினும் மற்றை மந்திர விதி வருமே
பூதி சாதனர் மடத்தில் தாம் புனைந்த சாதனைகள்
சாதியா வகை கண்ட மண் குண்டர்கள் தளர்ந்தார்.

மதுரைத் திருமடத்தில் ஞானசம்பந்தர் எழுந்தருளியிருந்த பொழுது சமணர்கள் தம் மந்திர விதியால் அத்திரு மடத்திற்குத் தீ வைக்க முயன்றனர். அம்முயற்சி பயனுறாமைக்குக் காரணம் கூறுவாராகச் சேக்கிழார் இப்பாடலைக் கூறுகின்றார். திருவைந்தெழுத்தை இடையறாது ஓதி உய்யும் அன்பர்கள் இருக்கும் இடத்திற்கு மட்டுமல்ல; அவர்கள் நோக்கும் திக்கில் கூட மற்றைய மந்திர விதிகள் தம் வலிமையற்றுப் போகும் என்பது இதன் கருத்தாகும். இதைக் கூற வருகின்றவர்

ஆதி மந்திரம் அஞ்செழுத் தோதுவார் நோக்கும்
மாதிரத்தினும் மற்றை மந்திர விதி வருமே

என்று கூறுகின்றார். இங்கு வரும் ஏகாரம் வினாப் பொருளில் வருகின்றது. எனவே மற்றை மந்திர விதிகள் திருவைந்தெழுத்தாகிய மந்திர நெறிக்கு முன் நிற்காது என்பது கருத்தாகின்றது.

இங்ஙனம் ஓகார, ஏகார இடைச் சொற்களைப் பயன் படுத்தி இலக்கண நெறிகளைத் தெரிவிப்பது மட்டும் ஆசிரியர் கருத்தன்று. இது ஒரு இலக்கிய அமைப்பில் காணும் இன்பமே. எனவே இங்கு இதனினும் மேலாக ஆசிரியர் அறிவுறுத்துவது ஒன்றுண்டு. நாட்டில் ஏற்படும் தீங்குகளைப் பசி, பிணி, பகை என முத்திறப்படுத்துவர். திருநீற்றுச் சார்புடையோருக்குப் பசியும், பிணியும் வாரா என்பது ஓகார இடைச்சொல்லால் உணர்த்திய உண்மைப் பொருளாகும், திருவைந்தெழுத்தை ஓதி வழிபடுவாருக்கு எத்துணைப் பெரிய

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# அருள் மொழி அமுது

**திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,**
***3119, கீழ இரண்டாம் வீதி.***
**புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.**

## 18. மின்னின்ற செஞ்சடையார் அருள்

புண்டரீகம் என்றால் தாமரை 'பூ' பொன் முதலான மங்கல வார்த்தைகளில் கதையை ஆரம்பித்தல் மரபு. புண்டரீகம் என்ற சொல்லில் ஆரம்பித்த போதிலும் இவ்விடத்தில் புலி என்ற பொருள் கொண்டு புலிக் கொடியை இமைய மலையில் நாட்டின சோழர் பரம்பரை எனக்கூறி வீரரான ஒரு நாயனாரின் கதையை ஆரம்பிக்கின்றார். திருநீற்றுக்கு ஏற்றம் கொடுக்கும் நாயனார் கதை. திருநீற்றுக்கும் பெருமை யளித்ததால் நாயனாரின் ஊரான எயினனூர் எண்திசை களிலும் பெருமை பெற்றது என்றார். இவர் பிறந்தது சான்றார் குலம். இதுவே தற்காலத்தில் சாணார் என வழங்குகின்றது. வீரத்தின் அடையாளமாக நெற்றிப் பட்டமும் ஏனாதி மோதிரமும் அரசரிடம் பெற்றதால் இவர் ஏனாதி நாதர் என அழைக்கப் பெற்றார். நாதர் என்றதால் இவர் சேனாதிபதி போன்ற ஒரு பதவியுள்ளவர் எனக் கொள்ளலாம். திருநீறணிந்த அடியார்களைச் சிவபெருமானாகவே எண்ணி வழிபட்டுத் தொண்டு செய்தார். அரச குலத்திற்கு வாள்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பகையாயினும், எத்துணைச் சிறிய தீங்கையும் இழைத்து விட முடியாது என்பது ஏகார இடைச் சொல்லால் உணர்த்திய உண்மைப் பொருளாகும்.

இங்ஙனம் மொழி இலக்கண அறிவோடு வாழ்விலக்கண நெறியையும் ஒருங்கிணைத்துக் கூறும் திறம் சேக்கிழாருக்கே கை வந்த திறமாகும். இத்திறத்தில் இந்நூலை முழுமையாக எண்ணிப் பார்க்க இக்கட்டுரை ஒரு தூண்டு கோலாகுமேல் அதுவே இதன் பயனாகும்.

பயிற்றுவிக்கும் தொழில் செய்தார் அதில் வரும் ஊதியத்தைச் சிவனடியார்கட்கே செலவு செய்தார்.

காந்திஜியை இந்தியன் போற்றிப் புகழுவது இயற்கை, ஆனால் எந்த வெள்ளையன் இந்திய நாட்டை அடிமையாகக் கொண்டு ஆண்டானே. அந்தத் தேசத்தில் ஒரு அறிஞனை பெர்னார்ட்ஷா "நல்லவனுயிருப்பது மிக அபாயகரமாக வுள்ளது" (It is too dangerous to be good) என் காந்திஜி கொல்லப்பட்ட போது கூறினன். எதிரியான வெள்ளையனே "நல்லவர்" எனக் கூறுமாறு காந்திஜி விளங்கினர். அது போல எதிரிகளும் போற்றும்படி நடக்கும் நல்லவராகிய ஏனுதி நாதருக்கு அவர் தொழில் பங்காளியாக அதிசூரன் (தன்னைத் தானே இவ்வாறு அழைத்துக் கொண்டான் என்பர்) ஒருவன் இருந்தான்.

**நள்ளார்களும் போற்றும் நன்மைத் துறையின்கண்**
**எள்ளாத செய்கை இயல்பின்ஒழுகு நாள்**
**தள்ளாத தங்கள் தொழில் உரிமைத் தாயத்தின்**
**உள்ளான் அதிசூரன் என்பான் உளனுனன்.**

தன்னையே பெருமையாக எண்ணி வந்த அதிசூரன் தனக்கு அதிக ஊதியம் கிடைக்காது ஏனுதி நாதருக்கே ஊதியம் அதிகமாக வருவது கண்டு, பொருமை காரணமாக அவரிடம் பகைமை கொண்டான். சூரியனெதிரில் சந்திரனின் ஒளி குறைவது போல ஏனுதிநாதர் எதிரில் தன் பெருமை குறைவதால் தன் சுற்றத்தாரையும் ஊரில் சிலரையும் அழைத்துக் கொண்டு அவர் மீது போர் செய்யப் புறப்பட்டான். அவர் வீட்டில் சென்று அவரை வலுச் சண்டைக்கழைத்தான். எவ்விதமான காரியத்திற்கும் செல்லாது தனது குகையில் உறங்கும் புலி போன்று தன் வீட்டுளிருக்கும் நாயனரை ஒரு நரி வலுச்சண்டைக்கு அழைப்பது போல் அழைத்தான். "யாரது?" எனப்பதில் குரல் கொடுத்த நாயனரும் போருக்கான உடையணிந்து தயாராக வந்தார். அதிசூரன் துணைவர்களை அழைத்து வந்தான், நாயனருக்கோ அவரிடம் வாட்போர் பயிலும் காளைகளும், முன்னமே பயின்றவர்களும் தாமாகவே துணையாக வந்து சேர்ந்தனர்.

**புறப்பட்ட போதின்கண் போர்த் தொழில்கள் கற்கும்**
**விறற் பெருஞ்சீர்க் காளையர்கள் வேறிடத்து நின்றார்**
**மறப்படை வாட் சுற்றத்தார் கேட்டோடி வந்து**
**செறற்கரும் போர் வீரர்க்கு இருமருங்குஞ் சேர்ந்தார்கள்.**

''நாம் இருவரும் போர் புரிவோம். வென்றவர்களுக்கு வாள் வித்தை அரசர்குலத்திற்கு கற்பிக்கும் உரிமையையும் ஊதியமும் கைக்கொள்ளுவோம்'' என்றான் அதிசூரன். ''எனக்குச் சண்டை வேண்டாம். உனக்கு வேண்டுமென்றால் நான் தயார்'' எனக்கூறி, தானாகவே பகை பாராட்டிய அதிசூரனை, நேரில் தன்னிடம் இவ்வாறு வந்து கூறியமை குறித்து மகிழ்ந்தார்.

போர் மூண்டது. யுத்தக்களத்திற்கு யுத்தம் என்றதும் காகம் வரும். கழுகு பின்னால்தான் வரும், காகங்கள் நிறைந்த போர்க்களத்தில் சில காட்சிகள் வருணிக்கப்படுகின்றது. வாட்படை வீரர்களின் கை அறுபட்ட பின்னும், கைகளிலிருந்து வாள்களை இறுகபற்றிக் கொண்டு கைகள் துடித்தன வேல்கள் ரத்தத்தில் நீராடின. இருவீரர்கள் போர் புரிந்தனர், ஒருவன் மற்றவனது தொடையுடன் அறுந்து விழுமாறு வாளை எறிந்தனன், தொடை அறுந்து விழுந்தவன், தான் விழுமுன்னே தன் தொடைகளை அறுத்தவனின் மார்பினில்தான் வாளைப் பாய்ச்ச இருவரும் இறந்தனர்.

**நீளிடை முடுகி நடந்தெதிர் நேரிருவரி லொரு வன்றொடர்**
**தாளிரு தொடையற முன்பெயர் சாரிகை முறைமை தடிந்தனன்**
**வாளொடு விழுமுடல் வென்றவன் மார்பிடை யறமுனை றிந்திட**
**வாளியினவனு மெறிந்தனன்: ஆயினர் பலருள ரெங்கணும்.**

வீரப்போர் புரிந்து இவ்வாறு பலரும் இறந்தனர், ஒருவரையொருவர் வேலினால் குத்திக் கொண்டு உயிர் நீங்கிய பின்னும் ஒருவருக்கு ஒருவர் நேராக நின்று கொண்டேயிருந்தனர். இறந்த வீரர்களைக் கண்டு உயிருடனிருப்பதாக எண்ணிக் காகங்கள் பக்கத்தில் வர அஞ்சின. தனது படையை நிறுத்தி ஏனாதிநாதர் வெகுண்டு முன் வந்தார். அவர் அனேகரைக் கொல்ல, சிலர் ஓடி ஒளிந்தனர். அதுபோது அதிசூரன் வந்தான். அவரிடம் தோற்றுப் புறமுதுகு காட்டி ஓடி அவரை வஞ்சனையால் வெல்ல எண்ணினான். ''நாம் நம்

காரியத்திற்காக ஊராரைக் கொல்ல வேண்டாம். நாமிருவரும் தனிந்து வாட்போர் செய்வோம்'' எனச் செய்தியனுப்பினன். நாயனர் இணங்கித் தயாராக நின்றார்நாயனர் திருநீறு பூசிய வரைக் கொல்லமாட்டார் என அறிந்து, ஒருநாளும் திருநீறு பூசாதவன். இன்று நெற்றியில் வெண்ணீறு (திருநீறு என்னது வெண்ணீறு என்று கவிஞர் கூறும் நயம் காண்க!) பூசி, மனத்தில் கறுப்பான எண்ணத்துடன் (**மனத்தினுட் கறுப்பு வைத்து** என்ற மெய்ப்பொருள் நாயனர் புராணத்தை இங்கு நினைவு கூர்க்.

**வெண்ணீறு நெற்றி விரவப் புறமபூசி**
**உண்ணெஞ்சில் வஞ்சக் கறுப்புபுடன் கொண்டு**
**வண்ணச் சுடர்வாள் மணிப்பலகை கைக்கொண்டு**
**புண்ணியப் போர் வீரர்க்குச் சொன்ன இடம் புகுந்தான்.**

அதிசூரனை ''**வஞ்சகக் கறுப்பன்**'' என்று கூறிய கவிஞர் **புண்ணியப் போர் வீரர்** என நாயனரைக் குறிப்பது காண்க. அதிசூரன் போர் புரியும் போது, தன் நெற்றியிலுள்ள நீறை அவர் காணுது மறைத்துக் கொண்டவன். தன்னை நாயனர் கொன்று விடுவார் எனத் தோன்றியதும், திடீரென்று நெற்றியை அவர் காணும்படி செய்த போது நாயனர் திடுக்கிட்டார் ''இவரிடம் முன் காணுத திருநீறு காணப்படுகின்றதே. இவர் அடியாராகி விட்டாரோ''. என எண்ணி நிராயுதபாணியை சிவனடியார் கொன்ருர் என்ற கெட்ட பெயர் அவருக்கு வரக்கூடாது'' என எண்ணி போர் புரிவது மாதிரியே போக் குக்காட்ட, அப்பாதகனும் தான்நினைத்த '**அப்பரிசே செய்தான்**' என்ற மெய்ப்பொருள் நாயனர் திருக்கதையைப் போலவே கூறுகிருர் கவிஞர். சிவனடியாரைக் கொன்ருன் எனக்கூற மறுக்கின்றது நாவல்லவரான சேக்கிழார் பெருமானின் திரு நாக்கு. உலகத்தவருக்கு நாயனரின் பெருமை தெரியாது. அவரது பெருமை தெரிந்த இறைவர் தோன்றினர்.

**அந்நின்ற தொண்டர் திருவுள்ளம் ஆரறிவார்?**
**முன்னின்ற பாதகனும் தன்கருத்தே முற்றுவித்தான்:**
**இன்னின்ற தன்மை யறிவார் இவர்க் கருள**
**மின்னின்ற செஞ்சடையார் தாமே வெளிநின்ருர்.**

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# அலங்கார நாயகன் 7

திருமதி ஆர். பார்வதி அம்மாள்,
தமிழாசிரியை. நாமக்கல்.

## குறிஞ்சிக் கிழவன்

அருணகிரியார் அலங்காரத்தில் முதற்பாட்டில் விநாயகரையும், பின்பு முருகனுடைய பெருமையினால் தாம் அடைந்த பேற்றையும், முருகன் தன்னுடைய வேலினால் கிரௌஞ்ச சங்காரம் செய்த கதையையும், சூரபத்மனை வதம் செய்ததையும், சொன்னார், இது புராணமாக இருந்தால் முருகனுடைய அவதாரம் திருவிளையாடல்கள் என வரிசையாக வரும். இது தோத்திர நூல், முருகனை அன்பினால் நினைந்து வியந்து பாடும் நூல். அதனால் நிகழ்ச்சிகளை முன் பின்னாக மாற்றிச் சொல்கிறார்.

அருணை முனிவருக்கு முன்பே பல பெரியார்கள் முருகனது பெருமையைப் பாடியுள்ளனர். நக்கீரர் திரு

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

எதிரியின் கை வாளால் பாசமறுத்து இறைவர் நாயனாருக்கு அருளினார். அதிசூரன் நரகஞ் சென்றான். வெறுத்தோ விருப்புடனோ உண்டாலும் மருந்து நன்மை பயக்குமென்பர் குமரகுருபர சுவாமிகள். அதுபோல் திருநீறு நன்மைபயக்கும் எனினும் நோய் முற்றியவனுக்கு எந்த மருந்தும் பயன் தராதது போல அதிசூரனுக்கு திருநீறு வேலை செய்யவில்லை. மரணத்தருவாயில் மருந்தை வாயில் விட்டால் உட்புகாதது போல, நீறும் அவனுக்குப் பயன்தராது ஒழிந்தது என்கின்றார் எங்கள் கொங்கு நாட்டுப் பெரியாராகிய ஸ்ரீலஸ்ரீ சம்பந்த சரணாலய அடிகள்.

வாழ்க சிவநெறி! வளர்க சைவம்!
ஏனாதிநாத நாயனார் திருவடிகளே சரணம்!
**“ஏனாதி நாதன்றன் அடியார்க்கு மடியேன்”**
சேக்கிழார் பெருமான் திருவடிகளே சரணம்!

முருகாற்றுப்படையின் முடிவிலே "பழமுதிர் சோலை மலை கிழவோனே" என்று பாடியுள்ளார். கிழவன் என்ற சொல் லுக்கு உரியவன் என்று பொருள்.

> "செல்லான் கிழவன் இருப்பின் நிலம் புலந்து
> இல்லாளின் ஊடி விடும்"

என்று வள்ளுவர் சொல்லுகிறுர். மலைகளுக்கு உரியவன் முருகன். அவன் மலையாண்டி. மலையும் அதனைச் சார்ந்த இடமும் குறிஞ்சி நிலம் எனப் பெயர் பெறும். குறிஞ்சி காலத்தினுல் பழமையானது, முதன்மையானது, உலகம் தோன்றுவதற்கு முன்னுல் எங்கே பார்த்தாலும் தண்ணீர் நிரம்பியிருந்தது. உலகம் தோன்றிய போது முதலில் மலைதான் தன் தலையை நீட்டியது, முதலில் தோன்றிய மலைக்கு தெய்வம் முருகன் எனத் தமிழர் வைத்தனர். முருக வழிபாடு பழங்காலம் தொட்டே தமிழ் நாட்டில் இருந்து வருகின்றது. "சேயோன் மேய மைவரை உலகமும்" என்று தொல்காப்பியம் சொல்கிறது. "விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ" என திரு முருகாற்றுப் படையில் வருகிறது என்றும் இளையவனுக குழந்தையாக முருகன் இருக்கிறுன். இவனைக் குறிஞ்சிக் கிழவன் எனச் சொல்லலாமா? குழந்தை என்பதற்குறிய இலக்கணங்கள் மூன்று உண்டு. தொட்டில் விளையாட்டு, பால் குடித்தல் அழுகை, இம்மூன்றும் முருகனிடத்தில் உள் ளன. இந்தப் பச்சிளம் குழந்தையை கிழவன் என்கிறுர்களே எனச் சமத்காரமாக இப்பாட்டிலே சொல்கிறுர்.

> "திருந்தப் புவனங்கள் ஈன்றபொற் பாவை
> திரு முலைப்பால் அருந்தி"

உமாதேவியாரின் மார்பிலே ஊறிய பாலை அருந்தியவன் முருகன். அவன் பால் குடிக்கும் குழந்தையாக இருப்பவன்

> "சரவணப் பூந்தொட்டில் ஏறி"

அவன் சரவணப் பொய்கையிலே மலர்ந்திருக்கிறதாமரை யாகிய தொட்டிலில் படுத்து விளையாடினுன், தூங்கினுன். ஆகவே அவன் தெட்டிலில் படுக்கும் குழந்தையாக உள்ளவன்.

> "அறுவர் கொங்கை விரும்பி அழும்"

தனக்குப் பால் கொடுப்பதற்காக காத்திகை மாதர் களாகிய ஆறுபேரும் வரவில்லையே என அழுதான் உயர்ந்த

இமய மலையில் அழகான சரவணப் பொய்கையில் தாமரை மலர் ஆகிய தொட்டிலின் மீது படுத்து அழும்போது அந்த அழுகை ஒலி மலைகளில் முட்டி மோதி எதிரொலிக்கிறது. சூரன் என்னும் அசுரனுடைய காதில் இந்த ஒலி பட்டவுடன் தன்னைக் கொல்ல யமன் வந்து விட்டானே என ஓ. ஓ. ஓ. என அலற ஆரம்பித்து விடுகிறான். அந்தக் குழந்தை விம்மி, விம்மி அழுதது. **''அறுவர் கொங்கை விரும்பிக், கடல் அழக், குன்று அழச், சூர் அழ, விம்மி அழும் குருந்தை''**

ஒரு முறை அழ ஆரம்பித்தவுடனே கடல் அழ ஆரம்பித்து விட்டது. மறுமுறை அழுதவுடன் மலை அழுதது. அடுத்த முறை அழுதவுடன் சூரபன்மன் அழ ஆரம்பித்து விட்டான். இந்தப் பாட்டில் **''திருந்தப் புவனங்கள் ஈன்ற பொற்பாவை திருமுலைப் பால் அருந்தி''** என்னும் பகுதி முருகனது ஒரு திருவிளையாடலைக் குறிக்கின்றது. **''சரவணப் பூந்தொட்டில் ஏறி''** என்பது இரண்டாவது திருவிளையாடல் **''அறுவர் கொங்கை விரும்பி''** என்பது மூன்றாவது திருவிளையாடல். **''கடலழக் குன்றழ, சூரழ விம்மி அழும் குழந்தை''** என்பது நான்காவது திருவிளையாடல்.

**''திருந்த புவனங்கள் ஈன்ற பொற்பாவை''**

பாவை என்பது பதுமை. எம்பெருமாட்டி எப்போதும் எழில் பொருந்திய முகத்தோடு வாட்டம் இன்றி மெருகு குலையாமல் பொன்னிறம் பெற்றவளாக இருக்கிறாள். அதனால் அவளை பொற் பாவைஎன்கிறார். மகா திரிபுர சுந்தரியாகிய பராசக்தியை,

**''உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்**
**மதிக்கினற மாணிக்கம் மாதுளம்போது மலாக்கமலை**
**துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோய மென்ன,**
**விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே''**

என்று அபிராம பட்டர் பாடுகிறார். அந்த பொற்பாவைதான் இந்த புவனங்கள் எல்லாவற்றையும் ஈன்றாள், அவள் தனக்கு ஒரு பயனைக் கருதிப் பெறவில்லை உயிர்கள் திருந்த வேண்டும் ஒழுங்கு பட வேண்டும் என்று ஈந்தாள், படைத்தாள். எம்பிராட்டிக்கு அழகழகான ஆயிரம் நாமங்கள் இருந்தாலும்

அந்த நாமங்களுக்கெல்லாம் முதன்மையாக லலிதா சகஸ்ர நாமத்தில் ஸ்ரீ மாதா என்ற நாமத்தை வைத்துள்ளார்கள். எல்லா உயிர்களுக்கும் மா தா வா க விளங்குபவள் எம் பெருமாட்டிதான். தான் படைத்துக் கொடுத்துள்ள இந்தப் புவனத்தில் உயிர்கள் தனுவாகிய உடலைப் பெற்று. அதில் அமைந்துள்ள கரணங்களைப் பெற்று. அதனுல் இன்பதுன்ப போகங்களை எல்லாம் பெற்று ஞானத்தைப் பெற்று திருந்தி உய்ய வேண்டும் என்பது உலகன்னையின் விருப்பம் அவள் உயிர்கள் திருந்த புவனங்களை ஈன்ருள்.

**"திருந்த புவனங்கள் ஈன்ற பொற்**
**பாவை திருமுலைப் பால்**
**அருந்திச் சரவணப் பூந்தொட்டில்**
**ஏறி அறுவர் கொங்கை**
**விரும்பிக் கடல்அழக் குன்றழச்**
**சூர் அழ விம்மி அழும்.**
**குருந்தைக் குறிஞ்சிக் கிழவன் என்று**
**ஓதும் குவலயமே"**

என்றும் இளையவனுய் சதா பால ரூபத்தோடு இருக்கிற குழந்தையை, இளங்குருந்தை, பச்சிளம் பாலகனை. கிழவன் எனக்குவலயம் சொல்லுகிறதே இது என்ன பேதமை என்று பாடும் இப்பாட்டில் அருணகிரியார் ஆண்டவனது அவதாரத் தையும் அவனது திருவிளையாடல்களையும் மிக அலங்காரமாகப் புலப்படுத்தியுள்ளார்.

# கம்பன் காட்டும் சிவகருணை

திரு, ஸ்ரீராமகதாரத்ன; V. தியாகராஜன் அவர்கள்,
புதுக்கோட்டை-1

நம் நாட்டுப் பெருமக்கள் எந்தவிதமான பேதமுமின்றி கடவுளை வணங்கினர். பெரும் புலவர்கள் இறைவனை வணங்கும் போது தெய்வத்தின் பெயர் குறிப்பிடாமல் படைத்தல் காத்தல் அழித்தல்கள் ஆகியவற்றை விளையாட்டாகச் செய்யும் தெய்வத்தை வணங்குகின்றேன் என்றார்கள்.

**ஆக்குமாறு அயனும்: முதல் ஆக்கிய உலகம்**
**காக்குமாறு செங்கண் நிறை கருணையங் கடலாம்;**
**வீக்குமாறு அரனும்: அவை வீந்தநாள் மீளப்**
**பூக்கும் மாமுதல் எவன்அவன் பொன்னடி போற்றி.**

என்று வில்லி தனது பாரதத்தைத்தொடங்குகின்றார். கம்பரும் அதே முறையில்,

**உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்**
**நிலைபெறுத்தலும் நீக்கலு நீங்கலா**
**அலகிலா விளையாட் டுடையாரவர்**
**தலைவரன் னவர்க்கே சரணுங்களே.**

என் சமரச பாவத்தோடு இறைவனை வணங்கித் தனது இராமகாதையைத் தொடங்குகின்றார்.

வாலி சிறந்த சிவபக்தன், தினமும் தவறாது சிவபூசை புரிந்த சிறப்புடையவன். ''சிவபெருமானைத் தவிர வேறு எவரையும் வணங்கி அறியாத தந்தையே''

**பஞ்சின் மெல்லடியாள் பங்கன் பதயுகம் அலாது யாதும்**
**அஞ்சலித்து அறியாச் செங்கை ஆணையாய்!**

என்று அங்கதனும், ''அம்மையப்பனுன சிவபெருமானே, எல்லாத் திக்குகளிலும் சென்று கொண்டு வந்த நல்ல மலர்களால் முப்போதும் வழிபடுவீரே! இப்படிப் பேசாமலிருக்க உம்மால் எப்படி முடிகின்றது?'' என,

**அணங்கார் பாகனை ஆசைதோறும் உற்று**
**உணங்கா ஒண்மலர் கொண்டுளஎன் பொடும்**
**இணங்கா காலம் இரண்டொ டொன்றினும்**
**வணங்கா தித்துணை வைக வல்லையோ?**

எனத் தாரையும், வாலி மறைந்ததும் கவன்று கதறியதிலி ருந்தே, வாலியினது சிவபூசையின் பெருமையையும் பக்தியையும் அறிகிறோம். ஞானசம்பந்தர் வடகுரங்காடு துறைத் தேவாரத்தில்,

**கோலமா மலரொடு தூபமும் சாந்தமுங் கொண்டு போற்றி**
**வாலியார் வழிபடப் பொருந்தினர் திருந்து மாங்கனிகளுந்தி**
**ஆலுமா காவிரி வடகரையடை குரங்காடுதுறை**
**நீலமாமணி மிடற்றடிகளை நினைய வல்வினைகள் வீடே.**

**நீலமாமணி நிறத்தரக்கனை யிருபது கரத் தொடொல்க**
**வாலினல் கட்டிய வாலியார் வழிபட மன்னு கோயில்**
**ஏலமோடிலை யிலவங்கமே இஞ்சியே மஞ்சளுந்தி**
**ஆலியா வருபுனல் வடகரையரை குரங்காடு துறையே.**

எனச்சிறப்பித்துப் பாடுகிறார். வாலிசிவபக்தன். சிவபெருமான் தருமமூர்த்தி, தரும தேவதையையே நந்தியாகக் கொண்டு அமர்பவர். தருமம் தவறினவரை சிவபெருமான் தக்கவாறு தண்டிப்பார். எனினும் பக்தனது அன்பையும் அறிந்து உதவு பவர். வாலி சிவபக்தனை போதிலும், தம்பியின் மனைவியை, தனக்கு மகளாக எண்ணவேண்டிய ருமை என்ற பெண்ணைத் தீண்டி மனைவியாகக் கொண்டான். இராமபிரானது பாணத் திற்கு இலக்காகி மடிந்தான் வாலி, எனினும் சிவபெருமானை வணங்கிய அவனது கரங்கள், இராமபிரானது கணையையும் தன் மார்பில் ஊடுருவா வண்ணம், சிறிது நேரம் பிடித்து நிறுத்தின.

**வெற்றி வீரனதடு கணையவன் மிடல் உரத்தூடு**
**உற்றதப் புறத்துருத முன்உறு வலிக் கரத்தால்**
**பற்றி வாலினும் காலினும் பிணித்தகப் படுத்தான்**
**கொற்ற வெங்கொடு மறலியும் சிரதலம் குலைந்தான்.**

இதிலிருந்து சிவபக்தியின் பெருமையையும், சிவபெருமானது நடுநிலையையும் அறிகிறோம்.

இராவணனது சிவபக்தியும் பிரசித்தமானது, அப்பர் சுவாமிகள் தனது தேவாரத்தில் திருநாரையூர்ப் பதிகத்தில்

அந்தணனை மார்க்கண்டனைக் காத்து, யமனை அழித்து, இராவணனைத் தண்டித்து வரந்தந்ததை,

**மீளாத ஆளென்ன உடையான் தன்னை**
**வெளி செய்த வழிபாடு மேயினானை**
**மாளாமை மறையவனுக்கு உயிரும் வைத்து**
**வன்கூற்றின் உயிர்மாள உதைத்தான் தன்னை**
**தோளாண்மை கருதிவரை யெடுத்த தூர்த்தன்**
**தோள்வலியுந் தாள்வலியுந் தொலைவித் தாங்கே**
**நாளொடு வாள்கொடுத்த நம்பன் தன்னை**
**நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே.**

*அப்பர்–6–74–10*

என்று சிறப்பித்துப் பாடினார். இராவணன் மாற்றான் மனைவியான சீதாபிராட்டியின் மீது கடும் மோகம் கொண்ட போது கூட "கடலிடைத் தோன்றிய நஞ்சைத் தனது திருக்கழுத்தில் நிறுத்திய சிவபெருமான் அதே கடலில் தோன்றிய நிலவை இதுவும் ஒரு நஞ்சு என எண்ணித் தலையிலணிந்தார் போலும்"

**தாதுண் சடிலத்தலை வைத்தது தண்தரங்கம்**
**மோதும் கடலிற்கு இடைமுந்து பிறந்த போதே**
**ஓதும் கடுவைத்தான் மிடற்றின் ஒளித்த தக்கோன்**
**ஈதும் கடுவாம் எனஎண்ணிய எண்ணம் அன்றே.**

என்று சந்திரனைப் பழித்தான் என்பது கம்பன் காவியம். இராமபிரானுடன் போர்புரிந்த போது இராவணனது தலைகளும் கைகளும் அறுபட்டன. "மாண்டு போனவன் தனது தவத்தினால் மீண்டும் உயிருடன் எழுந்தது போல் வெட்டப்பட்ட தலை மீண்டும் முளைத்தது"

**இறந்த தோர்உயிர் உடன் தருமத் தீட்டினால்**
**பிறந்துள தாமெனப் பெயர்த்தும் ஓர்தலை**
**மறந்தில தெழுந்தது மடித்த வாயது**
**சிறந்தது தவமலால் செயலுண் டாகுமோ?**

என்று இராவணனின் தவமே அவனுக்கு உதவியது என்கிறார் கம்பன். இராமபாணம் இராவணனது கையை அறுத்ததும், கணநேரத்தில் கையும் முளைத்ததாம்.

**கொற்றவன் சரமபடக் குறைந்து போனகை**
**பற்றியே கிடந்தது சிலையைப் பாங்குற**

மற்றொர்கை பிடித்தது போல வவ்வியது
அற்றகை பிறந்தகை யார தோர்குவார்?

சிவபெருமானை வணங்கிய தலையையும் கையையும் சிவபெருமானின் அருள் காத்தது, ஆனால் இராவணன் சீதையை அசோக வனத்தில் சிறை வைப்பதற்கு முன் தன் இருதயத்தில் சிறை வைத்தான். ''மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம் நீண்ட எயிலுடை இலங்கை நாதன் இதயமாம் சிறையில் வைத்தான்'' என்கிறான் கம்பன். சிவபெருமானைச் சிந்தையில் வைத்தவன் அதே சிந்தையில் சீதையை வைத்தான். இராம பாணம் சிவமில்லாத நெஞ்சுடையவனைச் சவமாக்கி விட்டது.

எவ்வளவு பக்திபுடையவராயிருந்த போதிலும், முறை தவறினவரை சிவபெருமான் தண்டித்து விடுவார் என்பதைக் காட்ட இன்னொரு சம்பவமும் நிகழ்ந்தது. இராம பாணத்துடன் சக்கரப் படையும் சேர்ந்து இராவணனைக் கொன்றது என்கிறது கம்பன் வாக்கு.

அக்கணத்தில் அயன்படை ஆண்தகைச்
சக்கரப்படை யோடுந் தழீஇச் சென்று
புக்கதக் கொடியோன் உரம்; பூமியும்
திக்கனைத்தும் விசும்பும் திரிந்தவே.

திருமால் சிவபெருமானது பூசைக்காக ஆயிரம் மலர்களை எடுத்து அருச்சித்து போது, ஒரு மலர் குறைய, தனது கண்ணையே தோண்டிச் சிவபெருமானுக்குப் பூசை செய்ய, மகிழ்ந்த சிவபெருமான். திருமாலுக்குக் கண்ணை மீண்டும் அருளி, தாமரைக் கண்ணன் (பத்மாக்ஷன்) எனப் பெயர் தந்து, சக்கரப்படையும் அருளினார் என்பது வரலாறு. முறை திறம்பிய இராவணனை இராமபிரான் சிவனருளாற் கிடைத்த சக்கராயுதத்தாலே கொன்றார் என்று அறிகிறோம்.

இதிலிருந்து தன்னை வணங்கக் கூடியவருக்குச் சிவபெருமான் கருணை புரிந்து வரமளித்த போதிலும், அவர்கள் நீதி தவறினால் தண்டனையும் அளிக்கும் நடுநிலையுள்ள நேர்மையான **அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டோ** என எண்ணி மகிழ்ச்சியடைகிறோம். நேர்மையின் உருவங்களான இராமனும் சிவனும் நம்மை நேர்மையுடன் வாழ அருளுமாறு வேண்டுவோமாக!

ஸ்ரீ சீதாராமர் துணை
– திருச்சிற்றம்பலம் –

சிவ சிவ]

# பேராசிரியர், இ. எஸ். வரதராஜய்யர்க்கு

24—12—74ல் பூனவில் நிகழ்ந்த சதாபிஷேகத்தில்

டாக்டர்; சாமிநாதய்யர் நூலகத்துப் பணியாற்றும்

மு. கோ. ராமன் பாடிய

## வாழ்த்துப்பாக்கள்

1. செய்ய தமிழில் பெரும் புலமை
திகழச் சிற்றம்பல மிளிரும்
துய்ய அண்ணுமலை யரசர்
தோமில் கல்விக் கழகத்தே
வையம் சிறக்கத் தமிழ் வளர்த்த
வரதராஜப் பேராசான்
தெய்வக் கவிஞன் சிறப் பெல்லாம்
சிறியேன் வகுத்தற் கியலுமோ.

2. தொல்காப் பியமாம் தமிழ்த் தொன்மை
துலங்கும் நூலின் வளம் தோய்ந்து
பல்காற் பயின்றே உலக மெலாம்
பரிவோ டந்நூற் சுவையுணர்
அல்காப் புகழ்சேர் ஆங்கிலத்தில்
ஆக்கி அளித்த பெருந்தகையாம்
பல்காப்பியங்கள் பயனுகர்ந்த
பனவர் வரதராஜையன்.

3. சொல்லும் பொருளும் சுவை யொழுக
தூய தமிழில் பலகவிதை
கல்லும் கனியக் கற்கண்டும்
கைக்கப் பாடும் பெருங் கவிஞன்
புல்லும் பிறவிக் கடல் கடக்கப்
போந்த புணையாம் காஞ்சி
நல்ல சங்கரா சார்யர்
நற்ருள் பரவு மெய்ச் சீடன்.

4. உலக அரங்கில் தமிழ் மகட்கே
உரிய தாகத் தாபித்தே
விலக லில்லாப் புகழார்ந்த
விமலன் சாமிநாதப் பேர்

இலகும் தமிழ்நூற் கோயிற்கண்
எம்மான் கம்பன் நூற்பதிப்பைத்
திலகமாக முற்றுவித்த
திறலான் வரதராஜையன்.

5. எண்ப தாண்டு நிறைவு விழா
இனிதே காணும் செயலு ணர்ந்தேம்
பண்ப தார்ந்த பெரும்புலவ
பாரில் வளங்கள் பலபெற்றே
நண்பர் சுற்றம் மற்றுமுள்ளோர்
நாளும் போற்றப் பல்லாண்டு
கண்படாத பெரும் வாழ்வு
கவின வாழி வாழியே.

6. ஒன்றும் அறியேன் காந்தியின் மேல்
உரைத்த பிள்ளைத்தமிழ் கேட்டே
அன்று மழலைத் தாயுவக்கும்
அன்பால் எளியேன் தமிழினையும்
நன்று நன்றென்றே கூறி
நயந்தோர் பாட்டு மளித்த குணக்
குன்றே யணையாய் நன்றியுடன்
கூறும் வாழ்த்தும் ஏற்றருளே.

7. இறைவன் அருளும் எழிற் காஞ்சி
இலகு காம கோடிப்பேர்
நிறையும் பீடத்தணி புரியும்
நிமலன் அருளும் கூடியின்றே
பிறை யாயிரமே கண்டுவக்கும்
பீடார் வரதராஜப் பேர்
மறையோன் சரணம் திசை நோக்கி
வணங்கி நாளும் உய்குவமே.

சிவ சிவ]

# அறுமுகனின் அருள்மிகு தலங்கள்

## அறுபத்தாறு

திரு. புலவர் பி. ரா. நடராசன் அவர்கள்
தமிழாசிரியர், பிஷப் ஈபர் உயர்நிலைப் பள்ளி,
புத்தூர் – திருச்சி. 17.

---

### 3. தஞ்சாவூர் மாவட்டம்

(மலர் 25 இதழ் 12ன் தொடர்ச்சி)

1. சுவாமிமலை 2. எட்டிகுடி 3. எண்கண் 4. சிக்கல் 5. கீழ்வேளூர் 6. வைத்தீஸ்வரன் கோயில் 7. கொண்டல் 8. திருமயிலாடி 9. கந்தன்குடி 10. திருவிடைக்கழி 11. பெரம்பூர்.

4. **சிக்கல்:** தஞ்சை நாகப்பட்டினம் இரயில் மார்க்கத்திலும் பஸ் மார்க்கத்திலும் உளது. தஞ்சையிலிருந்து சிக்கல் 45 மைல், நாகப்பட்டிணத்திலிருந்து சிக்கல் 3 மைல். நாகப்பட்டிணத்திலிருந்தும், திருவாரூரிலிருந்தும் டவுன் பஸ் வசதி உண்டு. பெரிய கோயில். உற்சவருக்கே சிறப்பு. திருமுருகனுக்குரிய பன்னிரு ஆயுதங்களில் முதலாவதான 'சக்தி' எனப்படுவதைச் சிக்கல் சிங்காரவேலன் தம் கையில் கொண்டுள்ளான். கந்தசட்டி விழா வெகுச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சம்காரத்தின் பின் வேலவன் திருமேனியில் வியர்வை காணப்படுகிறது. இதனுல் 'வியர்வை சிந்தும் வேலவன்' என அழைப்பர். இவ்வற்புதத்தை இன்றும் காணலாம். முருகன் கிழக்கு நோக்கியுள்ளான். (இக்கோயிலிலிருந்து 1பர்லாங் சென்றுல் பொரவாச்சேரி கிராமம் வரும், அவ்வூரில் குளக்கரையிலுள்ள முருகன் கோவிலில் எட்டிகுடி, எண்கண் கோயில்களிலுள்ள முருகனின் திருமேனியைவிட மிகப் பெரியதாகவுள்ள அதிஅற்புதமானத் திருமேனியினைக் கண்டு வணங்கலாம்.) அறநிலைய ஆட்சிக்குட்பட்ட கோயில், திருப்புகழ் பெற்ற தலம், தங்கும் வசதி இல்லை.

திருப்புகழ் (பின் பன்னிருவரிகள்)

**வன்னி யொத்த படைக்க லாதிய**
**துன்னு கைக்கொ ளரக்கர் மாமுடி**
**மண்ணி லற்று விழச்செய் மாதவன்** **மருகோனே**

மன்னு பைப்பணி யுற்ற நீள்விட
மென்ன விட்டு முடுக்கு சூரனை
மல்லு டற்று முருட்டு மார்புற அடைவாகச்

சென்னி பற்றி யறுத்த கூரிய
மின்னி ழைத்த திறத்த வேலவ
செய்ய பொற்புன வெற்பு மானனை மணிமார்பா

செம்ம னத்தர் மிகுத்த மாதவர்
நன்மை பெற்ற வுளத்தி லேமலர்
செல்வ சிக்கல் நகர்க்குள் மேவிய பெருமாளே.

5. **கீழ்வேளூர்:** திருவாரூரிலிருந்து நாகப்பட்டினம் செல்லும் இரயில், பஸ் மார்க்கங்களில் உளது. கீழ்வேளூர் தாண்டியே சிக்கல் செல்ல வேண்டும். கீவளூர் என்ற பெயர் வழக்கும் இவ்வூருக்கு உண்டு. திருவாரூரிலிருந்து டவுன்பஸ் வசதி உண்டு. அஞ்சுவட்டத்தம்மன். திருக்கோயில் என்ற பெரிய கோயிலில் முருகன் எழுந்தருளியுள்ளான். மேலுலகில் கந்தன் இருக்கும் தலம் கந்தபுரியான மேல் வேளூராம். இம் மண்ணுலகில் எம்பெருமான் கந்தவேள் விரும்பி அமர்ந்த இடமாதலால் இவ்வூர் கீழ்+வேள்+ஊர் கீழ் வேளூர் எனப் பெயர் பெற்றது. முருகன் சன்னதி இறைவன் சன்னதிக்குச் செல்லும் முன் உளது, இச்சன்னதிக்கு முன்னே தாயானவள் காளி வடிவத்துடன் தம்மகவின் தவத்திற்கு ஊறு நேரா வண்ணம் பாதுகாவலைப் புரிகின்றாள். அப்பெரு மாட்டியே அஞ்சுவட்டத்தம்மன். கந்தவேள் பாலசுப்பிரமணியனாய் ஒற்றை முகத்துடன் தன்னந் தனியனாய் வடக்கு பார்த்து தவக்கோலத்தில் நிற்கின்றான். முருகனின் மீது அந்தகக் கவி வீரராகவ முதலியார் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார் எனக்கூறு கின்றனர். அறநிலைய ஆட்சிக்குட்பட்ட கோயில் தங்கும் வசதி இல்லை.

6. **வைத்தீசுவரன் கோயில்:** மாயவரம் சிதம்பரம் இரயில், பஸ் மார்க்கங்களில் உளது. (சிதம்பரம், சீர்காழி, வைத்தீசுவரன் கோயில் என்ற மூன்று தலங்களையும் நாம் இரயிலினும் பஸ் மூலம் மிகஎளிதாகச் சென்று தரிசிக்கலாம்.) மாயவரத்திலிருந்து வைத்தீசுவரன் கோயிலுக்கு டவுன் பஸ் வசதி உண்டு, வெளியூர் பஸ்களும் உண்டு புள்ளிருக்கு

வேளூர் என்ற பெயரும் இத்தலத்திற்கு உண்டு. சடாயு, சம்பாதி பறவைகளும் இருக்கு வேதமும் முருகனும் சூரியனும் பூசித்த தலமாதலின் இப்பெயர் பெற்றது என்பர். ஸ்ரீ செல்வ முத்துக்குமரன் தன் பெயருக்கு ஏற்ப இத்திருக் கோயிலில் அருள்பாலிக்கிறான். இக்கோயிலில் சண்முகநாதர் சன்னதியும் உண்டு. ஆனால் ஸ்ரீ செல்வமுத்துக் குமரனே மிகப் பிரசித்தி பெற்றவன் ஸ்ரீ சண்முகரும் செல்வ முத்துக்குமரனும்கிழக்கு நோக்கி உள்ளனர். ஸ்ரீ செல்வ முத்துக்குமரனே மூலவராகவும் உற்சவராகவும் உள்ளான். மாதக் கார்த்திகைகளில் முத்துக்குமரன் தனி மண்டபத்தில் எழுந்தருளி விசேட அபிஷேகங்களைப் பெறுவான். அப்போது தென்திசை பார்த்து வீற்றிருப்பான். அறுமுகனை ஒரு முகமுடையவனாகக் காண விரும்பிய தாயின் மனம் மகிழ ஒரு முகத்துடன் மிகப் பேரெழிலுடன் முருகன் இத்தலத்தில் தோன்றினான் என்பர். சிக்கல் சிங்கார வேலனையும், ஸ்ரீ செல்வ முத்துக்குமரனையும் வார்த்தவர் ஒரே சிற்பி என்பர். குமரகுருபர சுவாமிகள் முத்துக்குமரன் மீது 'முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்' பாடியுள்ளார். அருணகிரியார் பாடலும் உண்டு, கோயிலினுள் திருக்குளம் உளது. இதில் நீராடினால் பல பிணிகள் நீங்கும். இக்குளத்தில் மக்கள் உப்பு, மிளகு, வெல்லம் முதலியவற்றைப் போட்டுத் தம் குறைபோக்கி முறை பெறுவர். திருக்கோயில் மிகத் தூய்மையாக உளது. தருமையாதீனத்தின் நல்லாளுகைக்குட்பட்ட கோயில்களில் இதுவும் ஒன்று. தங்கும் வசதி குறைவு,

**திருப்புகழ்:**

உரத்துறை போதத் தனியான
உனைச்சிறி தோதத் தெரியாது
மரத்துறை போலுற் றடியேனும்
மலத்திருள் மூடிக் கெடலாமோ
பரத்துறை சீலத் தவர்வாழ்வே
பணிததடி வாழ்வுற் றருள்வோனே
வரத்துறை நீதர்க் கொருசேயே
வயித்திய நாதர் பெருமாளே.

7. **கொண்டல்;** இரயில் வசதி இல்லை, பஸ் வசதி உண்டு. சீர்காழியிலிருந்து மேற்கே $3\frac{1}{2}$ மைல். சீர்காழி, திருவெண்காடு, மாயூரம், கும்பகோணம் முதலிய ஊர்களி

லிருந்து பஸ் வசதி உண்டு. சிறு கிராமம், அழகான சிறிய கோயில், கோயிலின் பக்கத்தில் சிறுகுளம் உளது, கோயிலின் நுழைவு வாயிலுக்குப் பின் அழகிய நன்முறையிலான கருங் கல் மண்டபம். கொண்டல் கோமகன் ஒரே முகத்தினனாய் கிழக்கு நோக்கி வள்ளி தேவசேனாசமேதனாய் நின்ற கோலத் தில் காட்சி தருகின்றான். தைப்பூசம் வெகு சிறப்பாய் நடை பெறும். சித்திரா பௌர்ணமி, பங்குனி உத்திரமும் விசேடம். தணிகைமணி செங்கல்வராய பிள்ளை அவர்கள் திருப்புகழில் வரும் 'கரியவனநகர்' எனப்படும் ஊர் இக்கொண்டலே என்பர். தனியார் கோயில், (சீர்காழி நகரின் உட்பிரிவான தென்பாதியில் கதிர்காம சுவாமிகளால் ஏற்படுத்தப்பட்ட தண்டபாணிக் கோயிலையும் காணலாம்) தங்க வசதி இல்லை.

8. **திருமயிலாடி:** சீர்காழியிலிருந்து சிதம்பரம் செல்லும் இரயில் பஸ் மார்க்கங்களில் உளது. சிதம்பரத்திலிருந்து தெற்கே 3வது ஸ்டேஷன் சீர்காழி ஸ்டேஷனிலிருந்து வடக்கே 2வது ஸ்டேஷன் திருமயிலாடி. சிதம்பரத்திலிருந்து சீர்காழி வரும் டவுன் பஸ்களிலும் ஏறி புத்தூர் அல்லது திருமயிலாடி 'ஸ்டாப்பிங்'கில் இறங்கி மெயின் ரோட்டிலி ருந்து கிழக்கே 1 மைல் சென்றால் ஸ்ரீசுந்தரேச சுவாமி திருக் கோயிலை அடையலாம், திருமுருகன் சன்னதி மிக விசேடம் திருமயிலாடி புகைவண்டி நிலையத்தில் ஸ்ரீசுந்தரேச சுவாமி தேவஸ்தான சார்பில் உள்ள ஓர் அறிவிப்புப் பலகையில் முருகன் எங்குமிலாது இக்கோயிலில் மட்டும் வடதிசை பார்த் துள்ளான்'' என்று காணப்படுகிறது. பெரும்பான்மையான மக்களும் திருமயிலாடியில் மட்டும் முருகன் வடதிசை பார்த்துள்ளான் என்கின்றனர் இதனால் ஒரு திரைப்படக் கவிஞரும் 'எங்குமிலாது திருமயிலாடியில் வடதிசை நோக்கி நின்றவனே' என்றும் பாடலை இயற்றிவிட்டார். கருத்துத் தவறானது. முதல் படைவீடான திருப்பரங்குன்றம்; முருகனின் மண்ணுலகக் கந்தபுரியான கீழ்வேளூர். குன்றத் தூர், மாகரல் முதலிய தலங்களிலும் முருகன் வடதிசை பார்த்தே உள்ளான். பாலமுருகனாய் தனித்து தவக் கோலத்தில் வடதிசை பார்த்து நின்றுள்ளான். 'யோக சுப்பிரமணியன்' என்ற திருநாமம் முருகனுக்கு உண்டு.

கந்தசட்டி விழா மிக விசேடம். பாடல்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அறநிலைய ஆட்சித் துறைக்குட்பட்ட கோயில் தங்கும் வசதி கிடையாது.

9. **கந்தன்குடி:** இரயிலில் வரவேண்டுமானால் மாயவரத்திலிருந்து காரைக்கால் செல்லும் மார்க்கத்தில் அம்பகரத்தூர் ஸ்டேஷனில் இறங்கி தென்மேற்காக 4 பர்லாங்கு வர வேண்டும். பஸ் வசதி அதிகம். கும்பகோணம் வழி பேரளம் காரைக்கால்; மாயவரம்வழி பேரளம் காரைக்கால்; நன்னிலம் வழி பேரளம் காரைக்கால் முதலிய பஸ்களில் ஏறி கந்தன் குடி செல்லலாம். மாயவரத்திலிருந்து பேரளத்திற்கு டவுன் பஸ் உண்டு. பேரளத்திலிருந்து கந்தன்குடி 4 மைல் கிழக்கே உள்ளது. பேரளத்திலிருந்து காரைக்கால் மெயின் ரோடில் கந்தன்குடி ஊருக்குச் செல்லும் ஆர்ச்சின் உள்ளே ½ மைல் செல்ல கந்தன்கோயிலைக் காணலாம். கந்தன்குடி கொண்ட ஊர். கொண்டலில் விளங்கும் திருக்கோலம் போன்றே இங்கும் வள்ளி தேவசமேதனாய்க் கிழக்குத் திசை பார்த்துள்ளான். எல்லாக்கோயில்களிலும் முருகனுக்கு எதிரே மயில் காணப்படும். ஆனால் இங்கு கந்தனுக்கு எதிரே ஐராவதம் நிற்கிறது. தன் மகளான தெய்வயானையின் தவத்திற்கு ஊறு நேராவண்ணம் தந்தையார் காவல் புரிகிறாரும். தெய்வயானைக்குத் தனி சன்னதி உளது. (தெய்வயானைக்குத் தனித்துள்ள சன்னதிகளை பெரம்பூர், திருவிடைக்கழி ஆகிய ஊர் முருகன் கோயில்களில் காணலாம்) கந்தன் கையிலுள்ள வஜ்ராயுதம் தனிப்பெருமை கொண்டு ஒளி வீசுகிறது. மாதக் கார்த்திகைக்கு மக்கள் திரளாக வருகின்றனர். சித்திரா பௌர்ணமி மிக விசேடம். அருணகிரியார் பாடியதலம். தனியார் கோயில். தங்கும் வசதி இல்லை.

—

(தொடரும்)

# பொங்கற் சிந்தனைகள்!

திரு. அரங்க; முத்துமணி அவர்கள்,
துணைப்பதிவாளர் – அரியலூர்.

வெண்பா

வையம் படைத்திட்ட 'வாழ்முத''லாம் பேரிறைவன்
உய்ய நமக்கே உவந்தளித்—செய்ய பொருள்
கன்னல், கதலி, கழனிகளில் செந்நெல்லும்
இன்பம் விளைக்கும் இனிது.

இனிதாம் பொருட்கள் இறைவன் கருணைத்
தனிமைபோல் இல்லத்தில் தங்கி—நனிபோற்றப்
பொங்கற் புதுநாளாய்ப் பூத்தது கண்டிட்டோம்,
தங்கிடுக இன்பம் தழைத்து!

தழைத்து வளர்க தமிழ் போன்ற வாழ்வு!
உழைக்கின்ற எண்ணம் உயர்க!-செழிப்பில்
அறமே வளர்க! அகிலத்தில் அன்பின்
உறைவிடம் நெஞ்சாம் உணர்.

உணருக மெய்ப்பொருளை: உண்மைச் சமயம்
வணங்க வழிகாட்டும்: வாழ்வில்—மணமலராய்
என்றும் திருமுறைகள் இன்ப மணம்வீச
குன்றாத வாழ்வுதனைக் கொள்!

கொள்ளும் சுவைவாழ்வில் கோலத் திருமுருகன்
அள்ளி வழங்கும் அருளதனுல்—துள்ளிவரும்,
இன்பம் அருவியென் யென்றென்றும் தான்பாய
மன்பதை வாழும் மகிழ்ந்து!

# முருகன் அருள்

**வித்துவான் திரு. கோவிந்தசாமி அவர்கள்**
**தமிழாசிரியர் திருமுக்கூடல் (அஞ்சல்)**
செங்கற்பட்டு மாவட்டம்

நன்னிலம்... தன் பெயருக்கேற்ப நல்ல விளைநிலங்களைத் தன்னகத்தே கொண்டு வளமிக்க சிற்றூராய்த் திகழ்ந்தது. செந்நெற்பயிர் செழித்து வளர்ந்திருந்தது. மா, பலா, வாழை போன்றவை முக்கனிகளைத்தந்த வண்ணமிருந்தன. தென்னை, கமுகு போன்ற மரங்கள் அடர்ந்து அவ்வூரை அழகு செய்தன. அங்கு வசித்த மக்கள் நற்பண்பு மிக்கவர்களாக மிளிர்ந்தனர். இறையுணர்வும் அவர்களிடையே இருந்தமையால் தீய நெறியில் செல்ல அஞ்சினர். வஞ்சனை, களவு ஆகியவை அங்கு இல்லை. பொய்மை அகன்று வாய்மை நிலவியது. ஒரு சிலரைத் தவிர பெரும்பான்மையோர் அங்கு எளிய நிலையில் இருந்தனர். எனினும் வறுமை என்பது அவர்களிடம் தலை காட்டவில்லை. செல்வமிக்கவர்களும் அவர்களுடைய நலனைத் தம் நலனாகக் கொண்டமையால் ஏழைகள் ஏழைகளாக இராமல் நன்னிலையிலேயே இருந்தனர்.

வளம் பல நிறைந்த நன்னிலத்தில் குறையென்பதே இல்லையா? எனின் ஒரே ஒரு குறைதான் அங்கு இருந்தது. மக்கள் விரும்பித் தொழும் முருகப் பெருமானுக்குக் கோயில் ஒன்று இல்லையே என்ற குறையைத் தவிர வேறெதுவும் இல்லை. ''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது ஆன்றோர் மொழியாதலின் தம் ஊரில் கோயில் ஒன்றை உருவாக்குவது என்ற முடிவுடன் மக்கள் அனைவரும் முனைந்து நின்றனர். கோயில் கட்டுவதற்கென ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து நன்னாள் ஒன்றில் கடைகால் அமைக்க மண்ணை அகழ்ந்தனர். ஓரிடத்தில் ஏதோ ஒரு பொருள் இருப்பது போல் தோன்றியதால் மிகவும் விழிப்போடு

மண்ணை அப்புறப்படுத்தினர் அங்கு அவர்கள் கண்ட காட்சி... முருகப் பெருமான் வள்ளி தெய்வயானை ஆகியோருடைய சிலைகளைக் கண்டனர். கந்தவேளின் உருவச்சிலை கிடைத்தது நாம் பெற்றபேறு எனக்கருதி அகமிக மகிழ்ந்த மக்கள் கோயிலை உருவாக்கும் திருப்பணியில் தீவிரமாக ஈடு பட்டனர்.

நன்னில மக்கள் அனைவரும் இத்தகைய முயற்சியில் ஈடு பட்டிருந்தபோது அவ்வூரைச் சார்ந்த ஒருவன் மட்டும் மக்களுடன் சேர்ந்து பணிபுரியாமல் விலகியிருந்தான். அவனை அணுகிக் கோயில் கட்டும் பணியில் ஈடுபடுமாறு ஊர்மக்கள் வற்புறுத்தினர். அதற்கு இசைய மறுத்த அவன்... ஏனய்யா உங்களுக்கு வேறு வேலையே இல்லையா? தமிழ் நாட்டில் இருக்கும் கோயில்கள் போதாதென்று இங்கொன்று வேண்டுமா? காலத்தையும், பொருளையும் வீணாக்காமல் வேறு தொழிலைச் செய்யுங்கள். இறைவன் என்று ஒருவன் இருக்கிறானா? எனக்கு நம்பிக்கை இல்லை. அதனால் உங்களுடன் நான் சேர இயலாது என்றான்.

முருகய்யா... என்று ஊர்ப் பெரியவர் ஒருவர் அவனை அழைத்தார்.

அவ்விதம் அழைக்காதீர்கள். என் பெற்றோர் முருகன் மீது கொண்ட பக்தியால் முருகையன் என்று எனக்குப் பெயர் வைத்து விட்டார்கள். நான் அப்பெயரை விரும்பவில்லை. அதனால் என் பெயரைக் குணசேகர் என்று மாற்றி அமைத்துக் கொண்டேன். இனி முருகய்யா என்று அழைக்காதீர்கள்.

என்னப்பா இது. குமரனுக்குக் கோயில் கட்டக்கருதி - மண்ணைத் தோண்டினோம். அந்த இறைவனே வள்ளி தெய்வயானையுடன் சிலை வடிவில் இங்கு எழுந்தருளியிருக்கிறார். அவருக்குக் கோயில் கட்டினால் அது நம் ஊருக்கே பெருமையல்லவா? மக்கள் அனைவரும் சேர்ந்து செய்யும் ஒரு செயலில் நீ கலந்து கொள்ளாமல் விலகியிருப்பது நல்லதா என்றார் பெரியவர்.

எது நல்லது எது தீயது என்று எனக்குத் தெரியும். அறியாமையில் ஆழ்ந்து கோயில் கட்டும் பணியில் ஈடுபட்டுள்ள உங்களுக்காக நான் பரிதாபப் படுகிறேன். பயனுள்ள பணியில் ஈடுபடாமல் இப்பணியில் ஈடுபட்டு விட்டீர்களே என்று வருந்துகிறேன்.

நாங்கள் ஈடுபட்டிருக்கும் பணி பயனுள்ள பணி அல்ல என்பது உன் எண்ணமா?

ஆமாம். பயனற்ற செயல். முருகனுவது தெய்வமாவது... இதெல்லாம் வீணான நம்பிக்கை...

தமிழ்த் தெய்வமான முருகன் மீது உனக்கு நம்பிக்கை – இல்லையென்றால் அதற்காக இப்படியெல்லாம் பேசாதே... உன் பெற்றோர் மட்டும் இன்று உயிருடன் இருந்திருப்பின் கோயிற் பணிக்குப் பொருளையும் அளித்து எங்கள் மனம் போல் நடந்து கொண்டிருப்பார்கள். முருகப் பெருமான் மீது எல்லையற்ற அன்பு கொண்டிருந்த அவர்களுக்கு மகனாகப் பிறந்த நீயா இவ்விதம் பேசுவது. நீ எங்களுக்குப் பொருள் தர வேண்டாம், எங்கள் பணியைப் பற்றிக் குறை சொல்லாமலிருந்தால் அதுவே போதும் அந்த முருகன் நாளையே உன் மனதை மாற்றினாலும் வியப்பில்லை.

என்னையா... முருகன் என்ன... அந்த முருகனை ஈன்ற முக்கண்ணனே, வந்தாலும் என் மனதை மாற்ற முடியாது. நான் கடவுள் நம்பிக்கையற்றவன் என்று கூறியவாறு தன்னைச் சூழ்ந்திருந்த மக்களை விட்டு விலகி விரைவாகச் சென்றுவிட்டான்.

செல்வத்தில் சிறந்த இவனே இவ்விதம் கூறிவிட்டானே. நம் திருப்பணி தொடர்ந்து நடைபெறுமா என்றான் ஒருவன் ஐயத்துடன்.

தன் மனதை இறைவனாலும் மாற்ற முடியாது என்கிறானே... அவனன்றி ஓரணுவும் அசையாது. இறைவனால் முடியாத செயலும் உண்டா? அந்த மாயோன் மருகன் நினைத்தால் இவன் இத்திருப்பணியில் உடனடியாக ஈடுபடுவான்... என்றார் ஒரு பெரியவர்.

நம் பணி நிறைவேற வேண்டுமே... அதற்கு வழி.

நம்மால் முடியுமட்டும் செய்து கொண்டேயிருப்போம். பிறகு வடிவேல் முருகன் விட்டவழி என்றூர் ஒருவர்.

திருப்பணி நாள் தோறும் தொடர்ந்து நடைபெற்ற வண்ணமிருந்தது. வேண்டிய பொருள் அனைத்தும் வந்து குவிந்த வண்ணமிருந்தது. கோயிற்பணி நிறைவேறி குட முழுக்கு செய்ய ஒரு நன்னுளையும் சான்றேர்கள் குறிப் பிட்டனர். அந்த நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது

குடமுழுக்கிற்குப் பெரும் பொருள் செலவாகுமே, என்ன செய்வது என்று மக்கள் கவலையில் ஆழ்ந்திருந்தனர் முருகா– எங்கள் பணி இனிது நிறைவேற நீதான் அருள் புரிய வேண்டும் என வள்ளி மணுளனிடம் முறையிட்டனர்.

அவர்கள் நிலையை உணர்ந்தும் உணராதவன் போலிருந்த முருகையன் அவர்களை அலட்சியமாக நோக்கி விட்டு கோயில் கட்டுகிருர்களாம் கோயில்... வேலையற்றவர்கள் எனக்கூறிச் சிரித்தவாறு சென்று கொண்டிருந்தான்.

ஒரு நாள் தன் நண்பன் ஒருவனைச் சந்திக்க வெளியூர் சென்றுன், நெடுந்தொலைவு செல்ல வேண்டியிருந்ததால் அதிகாலையில் புறப்பட்டுச் சென்று நண்பனைச் சந்தித்து விட்டுத் திரும்பினுன். விரைவாகத் திரும்பியும் கதிரவன் தன் ஒளிக் கதிர்களைக் கடுமையாக வீசிய வண்ணமிருந்ததால் தொடர்ந்து நடக்க அவனுல் முடிய வில்லை, வழியிலிருந்த ஆலமரம் ஒன்றின் கீழ் அமர்ந்து தன் களைப்பைப் போக்கிக் கொண்டான்?

அவனுடைய மனம் இறைவனைப் பற்றிச் சிந்திக்க முற் பட்டது.

எல்லாம் இறைவன் செயல் என்கிருர்கள். ஆவதும் அழிவதும் அவனுல் என்கிருர்கள். முருகனே சிறந்த தெய்வம் எனக் கொண்டாடிப் போற்றுகிருர்கள். இதெல்லாம் என்ன நம்பிக்கையோ... அறிவற்ற மக்கள் அறியாமையில உழல் கிருர்கள். பக்தி என்ற போர்வையில் வீண் பொழுதைப் போக்குகிருர்கள்... என்றுதான் இவர்கள் மனம் மாறுவார்

களோ... பரிதாபத்திற்குரியவர்கள்... இறைவன் இருக்கிருன் என்ருல் எங்கு இருக்கிருன், எப்படி இருக்கிருன் அனைவரும் அவனுடைய மக்கள் என்ருல் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடு உள்ளதே ஏன்? தன் மக்கள் அனைவரையும் சமமாகக் கருதாமல் மேல் கீழ் என்று பலவகையாகப் பாகு படுத்தியிருக்கும் செயல் ஏன்? வீணே இறைவன் செயல் என்று சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். போகட்டும். இதோ இப்பெரிய ஆலமரத்தைப் பார்க்கும் போதுஓர் அரசனுடைய படைகள் அனைத்தும் இங்குத் தங்கி இளைப்பாறலாம் எனத் தோன்றுகிறது. இதன் கிளைகள் அடர்ந்தும், படர்ந்தும் உள்ளன. ஆனல் இந்த மரத்தில் உள்ள பழம் எவ்வளவு சிறியது. கீழே பூமியில் படர்ந்திருக்கும் கொடியில் எவ்வளவு பெரிய பூசணிக்காய் காய்க்கிறது. படைப்பது எப்படி - எதனை எப்படி படைக்க வேண்டுமென்று தெரியாதவனுக்குப் பெயர்— இறைவன். விசித்திரமாக உள்ளது. இல்லாத இறைவனை இருப்பதாகக் கூறும் மக்களைப் பற்றி எண்ணும் போது அம்மக்கள் வீணே இறைவனை நம்பி காலம் போக்கு கிருர்கள்எனக் கருத வேண்டியுள்ளது. இதுஎன்ன உலகம்... என்ன மக்கள்...

வெறுப்புடன் தனக்குத்தானே கூறிக்கொண்டான்... முருகையன். குளிர்ந்த காற்று வீசியதால் தோள் மீதிருந்த சிறிய துணியைக் கீழே விரித்துப் படுத்தான். இறைவன் என்று ஒருவன் இல்லை. இருப்பதாகக் கூறுவது பொய் என்று கூறியவாறு ஆலமரத்தின் கிளைகளைப் பார்க்க முற்பட்டான்.

அடுத்த நிமிடம்... அவன் நெற்றியின் மீது ஆலின் பழம் ஒன்று விழுந்தது, கல் ஒன்று தன் மீது விழுந்ததைப் போன்றே இருந்தமையால் வலியினுல் துன்புற்ற முருகையன் நெற்றியைக் கைகளால் பிடித்துக் கொண்டே எழுந்து நின்ருன்.

அவன் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது.

இந்தச் சிறிய பழமே எனக்கு அதிக வலியை உண்டாக்கி விட்டது. இப்பெரிய மரத்தில் பூசணி அளவு பெரிய பழம்

இருந்து அது என் மீது விழுந்திருந்தால் இந்நேரம் என்னிலே என்ன ஆகியிருக்கும். இறைவன் இருக்கிறான். எதனை எப்படிப் படைக்க வேண்டும் என்பதை உணர்ந்துதான் படைத்திருக்கிறான். நான்தான் அதனை உணர்ந்து கொள்ள வில்லை. அறியாமையில் மூழ்கி மனம் போனபடி நடந்து கொண்டேன். பரிதாபத்திற்குரியவன் நான்தான். முருகா... உன்னை இப்போது நம்புகிறேன். என் மனதையே மாற்றி விட்டாய். உன் பெருமையை உணராமலிருந்ததற்காக வருந்துகிறேன். முருகா... முருகா...

ஐயா என்ற குரல் கேட்டுத் தன்னுணர்வு பெற்ற முருகையன் எதிரே சிறுவன் ஒருவன் நிற்பதைக் கண்டு யாரப்பா நீ என்றான்.

என் பெயர் முருகன். முருகா... முருகா என்று நீங்கள் அழைக்கும் குரல் கேட்டது. இந்த வழியே சென்று கொண் டிருந்த நான் என்னைத்தான் அழைக்கிறீர்கள் எனக்கருதி இங்கு வந்தேன். தனிமையிலிருக்கும் நீங்கள் யாரென்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய பெயர் முருகையன். நம் இருவருடைய பெயர்களும் ஒரே பெயராகவும், பொருத்தமாகவும் உள்ளது.

பெயர் பொருத்தம்தான்... ஆனால்

என்ன?

நான் முருகனடியார்களில் ஒருவன். அந்தச் செந்தில் வேலனுக்குத் தொண்டாற்றுவதே என் பணி. அவனுடைய பெயரைச் சொல்லி மகிழ்வதுதான் எனக்கு இன்பம். உங்க ளுக்குத் தெய்வ நம்பிக்கை உண்டா?

இப்போதுதான் உண்டாகியிருக்கிறது.

மகிழ்ச்சி. இதோ திருநீறு... பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறி தன்னிடமிருந்த திருநீறை முருகையனிடம் அளித்தான் சிறுவன்.

முருகையன் திருநீறைப் பெற்று முருகா எனக் கூறிய வாறு நெற்றியில் அணிந்து கொண்டான்.

சிறுவன் புன்னகையுடன் அவனை நோக்கி விட்டு... இந்த நூலையும் பெற்றுக் கொள்ளுங்கள் எனக் கூறி ஓர் நூலை அவனிடம் அளித்தான்.

நூலைப் பெற்ற முருகையயன் இது... எனக்கா... என்றான்.

ஆமாம்... உங்களுக்குத்தான்... என் நினைவாக வைத்துக் கொள்ளுங்கள்... என்றான் சிறுவன்.

குமரேசசதகம் என்ற பெயருடைய அந்நூலைப் பிரித்துப் பார்த்த முருகையயன் ஓர் பாடலைப் படிக்க முற்பட்டான்.

''பூமிகோ ராறுதலை யாய்வந்து சரவணப்
பொய்கை தனில் விளையாடியும்
புனிதற்கு மந்திர வுபதேச மொழி சொல்லியும்
போதனைச் சிறையில் வைத்தும்
தேமிக்க அரிகரப் பிரமாதி கட்குஞ்
செயிக்க முடியா வசுரனைத்
தேகங் கிழித்து வடிவேலினு லிறுகூறு
செய்தமரர் சிறைத விர்த்தும்
நேமிக்கு ளின்பரிட றுற்ற சமயந்தனி
னைக்க முன் வந்துதவியும்
நிதமு மெய்த்து ணையாய் விளங்கலா லுலகிலுனை
நிகரான தெய்வ முண்டோ
மாமிகக தேன்பருகு பூங்கடம் பணியும் வரை
மார்பனே வள்ளிகணவா
மயிலேறி விளையாடு குகனே புல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே''

பாடலைப் படித்து முடித்து விட்டுச் சிறுவனை நோக்கினான். அங்கே சிறுவன் இல்லை. சுற்று முற்றும் நோக்கினான். சிறிது தொலைவு ஓடி முருகா... முருகா என்று அழைத்தான், அவன் கூக்குரலின் எதிரொலியாக முருகா... முருகா என்ற ஒலி அடிக்கடி கேட்டது. சிறுவன் தன் பார்வையிலிருந்து எப்படி மறைந்தான் என்றே அவனுக்குப் புரியவில்லை. வந்த சிறுவன் யார்? அந்த முருகப்பெருமானாக இருந்தால்... என்று அவன் நினைத்த போதே அவனுடைய மெய் சிலிர்த்தது. முருகா... முருகா எனக்கூறியவாறு தன் ஊரை நோக்கி நடந்தான் முருகையன்.

நன்னிலம் ஊரினுள் ஓரிடத்தில் மக்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி முருகப் பெருமான் கோயிலுக்குக் குடமுழுக்கு செய்வதற்குரிய வழிகளை ஆராய்ந்து கொண்டிருந்தனர்.

இன்னும் ஒரு கிழமைதான் உள்ளது இன்று வரை தேவையான பொருள் சேரவில்லை. குடமுழுக்கு குறித்த நாளில் நடைபெறுமா என்றான் ஒருவன்.

முருகன் அருள் இருந்தால் நிச்சயம் நடைபெறும், நம் நிலையை அந்த முருகன் அறியாதவரா. எப்படியும் நமக்குப் பெரும் பொருள் கிடைக்கும். குடமுழுக்கு இனிது நடைபெறும்... என்றார் பெரியவர் ஒருவர்.

எங்களுக்கும் அந்த நம்பிக்கை உள்ளது. அதனால்தான் பொறுமையுடனிருக்கிறோம் என்றனர் சிலர்.

குடமுழுக்கு செய்ய எவ்வளவு செலவாகும் என்ற குரல் கூட்டத்தின் ஒரு புறத்திலிருந்து எழுந்தது. அவ்விதம் கேட்டவர் யார் என்று குரல் வந்த திசையை நோக்கினர், அடுத்த நிமிடம் அங்கிருந்தோர் கண்கள் வியப்பால் மலர்ந்தன.

நெற்றியில் திருநீறு மிளிர முருகனடியானைக் காட்சி அளித்த முருகையனைக் கண்டதும்... முருகையா... நீயா! எங்களால் நம்பவே முடியவில்லையே என்றனர்,

நானேதான். சேவற் கொடியோனை, அசுரர்குலமறுத்த ஆறுமுகனை இல்லையென்று கூறியவன். இறைவனே இல்லையென்று வாதாடியவன். நான் மனம் மாறிவிட்டனே். என் தவறை உணர்ந்து விட்டேன். என்னைத் திருத்தி ஆட்கொண்ட முருகன்தான் எனது தெய்வம். கோயிலுக்குக் குடமுழுக்கு செய்ய ஆகும் செலவு அனைத்தும் என்னுடையது. இதோ பெற்றுக் கொள்ளுங்கள் ஆயிரம் ரூபாயை, மேற்கொண்டு எவ்வளவு தேவையெனினும் கேளுங்கள் தரத் தயாராயிருக்கிறேன் என்று கூறித் திருப்பணித் தலைவரிடம் ஆயிரம் ரூபாயை அளித்தான் முருகையன்.

திருப்பணித்தலைவர் முருகையனிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டார். அங்குக் குழுமியிருந்த மக்கள் அனைவரும் முருகா... எல்லாம் உன்னுடைய அருள் என்றனர்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

சிவ சிவ]

# பூமே...! பூமே...! பூமே...!

அருணகிரிதாசன்
திரு, P. S. இராமமூர்த்தி அவர்கள்,
டால்மியாபுரம்

---

பக்தர் கணப்ரிய நிர்த்த நடித்திடு
பட்சி நடத்திய குகபூர்வ
பச்சிம தட்சிண உத்தர திக்குள
பக்தர்கள் அற்புத மெனவோதும்
சித்ர கவித்துவ சந்த மிகுத்தத்
திருப்புகழைச் சிறிது அடியேனும்
செப்பென வைத்து உலகில் பரவத்
தெரிசித்தவ னுக்ரக மறவேனே.

– அருணகிரிநாதசுவாமிகள்

''சித்தத்தைக் கெடுக்கும் சுத்தமிலாச் சஞ்சிகைகளைப் படித்துக் காலத்தை வீணாக்காதே!... மூடா! காலை நேரத்தில் கடவுளை நினைத்துப் பாடப் புத்தகங்களைப் படித்து முன்னுக்கு வர வழிதேடடா......!'' என்று தந்தையின் கோபக் குரலைச் செவி

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

குறித்த நாளில் குடமுழுக்கு விழா நடைபெற்றது. பூமியிலிருந்து கண்டெடுத்த முருகப்பெருமான், வள்ளி, தெய்வயானை உருவச்சிலைகளைக் கோயிலில் பிரதிட்டை செய்து மகிழ்ந்தனர். முருகா... முருகா என்ற மக்களின் ஒலி எழுந்து எங்கும் பரவியது. நன்னிலம் என்றுமில்லாத அளவிற்கு மகிழ்ச்சிக் கடலிலாழ்ந்தது. ஒருவர் தன் இனிய குரலில் பாடி இறைவனை வழிபட்டார். அனைவரும் அப் பாடலைக் கேட்டுத் தம்மை மறந்த நிலையில் நின்றனர். வாழ்வின் பயனை உணர்ந்தனர்.

**''ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகன் வாழ்க வெற்பை
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞைவாழ்க யானை தன் ளணங்கு வாழ்க
மாறிலாவள்ளி வாழ்க வாழ்க சீரடியா ரெல்லாம்''**

---

யுற்ற தனயன் சற்று பற்களைக் கடித்து முணு முணுத்தான்! "நீ எனக்கு உபதேசம் செய்ய வேண்டாம்......! நேரம் கிடைத்த போது நானே பாடங்களைப் படிப்பேன்..." என்று துடிப்போடு பதில் மொழிந்த தனயன், தொடர்ந்து காலை நேரத்தில் காதல் கதைகளைப் படிக்க ஆரம்பித்தான்!

பிறக்கும் பொழுது பூமே...! பூமே...! என்று ஊமை போல் வாய் உளறி அழுது கொண்டிருந்த குழந்தைக்கு பேசுவதற்குக் கற்றுக்கொடுத்த தந்தையையே தூக்கி எறிந்து பேசுகிறான் தனயன்! ஒவ்வொரு குடும்பத்திலும் நடைபெறும் பிள்ளைகளின் அசட்டுத்தனமான புரட்சியே இது!

குடும்பத்தில் மட்டுமா! மக்கள் சமுதாயத்தையே எடுத்துக் கொள்வோம். பற்பல புரட்சிக் கொள்கைகளைப் புகுத்த முயற்சிக்கும் மனிதர்களைப் பாரெங்கும் காணலாம். இவர்களில் நல்லவர்களும் அல்லாதவர்களும் உண்டு என்று உறுதியாகக் கூறலாம்.

'புரட்சி' என்ற போர்வையில் புகுந்து கொண்டு பொய்ப் பித்தலாட்டங்களைச் செய்யும் புல்லர்கள் எத்தனையோ பேர்! நாட்டுச் சேவை என்று நடித்து நாட்டையே கொள்ளையடிக்கும் கொள்ளைக் கூட்டத்தினர் எண்ணில் அடங்கா, மக்களுக்குத் தொண்டு செய்பவன் என்று பறை சாற்றித் திரிந்து பண மூட்டைகளைப் பாதாளத்தில் பதுக்கும் பகல் கொள்ளைக்காரர்கள் ஏராளம்! மட்டரகமான அடுக்கு மொழிகளாலே. அலங்காரப் பேச்சுகளினாலே மக்களிடையே, மனக்குழப்பத்தைத் தோற்றுவிக்கும் மடசாம்பிராணிகள் எத்தனையோ பேர்! ஏட்டிலே எழுதி நாட்டைக் கெடுப்போர் எத்தனையோ பேர்! நாடகம் நடத்தி நச்சுக் கொள்கைகளைப் புகுத்தி நாட்டை நாசமாக்குவோர் ஏராளம்! ஏராளம்!

"கண் தெரியா கற்சிலைக்கு கனகாபிஷேகமா!" "பேசத் தெரியா பொம்மைகளுக்குப் பிரம்மாண்டமான ஆலயங்களா!" "வாயில்லாப் பொற்சிலைக்கு நெய்ப் பொங்கல் நிவேதனமா!"

இதைப் போன்று இன்னும் எத்தனையோ! நினைக்க நினைக்க உள்ளம் குமுறுகிறது! எரிகிறது! சீறுகிறது! யாருக்கு... ஆறுமுகப் பெருமானை வழிபடும் அன்பர்களுக்கு!

கூலிக்கு மாரடிக்கும் இந்தக் கோமாளிகள் பால் நாம் குற்றம் காணமுடியாது! சிறு பிராயத்திலே பூமே...! பூமே...! என்று ஊமை போல் உளறிக் கொண்டிருந்த இந்த உதவாக் கரைகளுக்கு ஊனமற்ற உடலைக் கொடுத்து பேசவும் நாவைக் கொடுத்த பேரருளாளன் ஆறுமுகப் பெருமானின் எல்லையிலாக் கருணையே காரணமாகும். "பூமே...! பூமே...!" என்று உளரும்படி ஊமையாகவே விட்டிருந்தால் இன்று இத்தீவட்டிகள் துள்ளிக் குதிப்பார்களா? இறைவனை எள்ளி நகையாடுவார்களா? காசுக்காக கடவுளையும் ஏசுவார்களா? கடவுட் சிலைகளைத்தான் உடைப்பார்களா அல்லது சிலைகளைத் திருடி சிங்கார மாளிகை அமைப்பார்களா?

மக்கள் விரோதிகளின் இந்த விபரீத, அநாகரீகமான, அராஜகமான போக்குகளைக் கண்டு, மக்களின் நல்வாழ்வுக்காக உழைக்கும் உத்தம தியாகிகள், உயர்ந்தோர்கள் மனம் புழுங்குகிறார்கள். அடியார்கள், அருளாளர்கள் அச்சம் கொள்கிறார்கள். நல்லோர்கள் மனம் புண்பட, நாட்டிலே அநாகரீகச் செயல்களை வளர விட்டால் நாடு உருப்படாது. மழை பெய்யாது! பஞ்சம், பட்டினி, கொலை, கொள்ளை, தீவைப்பு இவைகளால் தேசம் நாசமாகிவிடும்.

அருளாளர்களின் ஆசிகளைப் பெறு எந்த அரசாட்சியும், அழிந்து போய்விடும்! இறைவனுக்கும் ஏழைகளுக்கும் துரோகம் நினைக்கும் ஈனர்கள் நெஞ்சம் நிலைகுலைந்து பைத்தியமாகத் திரிவர்!

மேலே நீங்கள் படித்தவையெல்லாம் அணுகுண்டுகளே! தெய்வ நம்பிக்கை கொண்ட நல்லோர்கள், தூயவர்கள் ஆகியவர்களின் உள்ளக் கொதிப்பே அணுகுண்டுகளாக வெளியே சிதறுகின்றன!

எடுத்துக் கொண்ட தலைப்புக்கு ஏற்ப இனிகட்டுரையைத் தொடருவோம். பதரை நீக்கிய அரிசியைத்தான் பொங்கலன்று பானையில் போட்டு பொங்கலாக்கி இறைவனுக்குப் படைத்து மகிழ்கின்றோம். பதர்களாகிய இத்தீயவர்களை, அறவே மறந்து உலகத்தை உய்விக்கத் தோன்றிய அருளாளர். ஒருவரைப் பற்றி இப்பொங்கல் பெருவிழா நன்னாளில் சிந்தித்து நீங்கா

நலம் பெறுவோம். அந்த நல்லாரை நினைக்கும் போதே நெஞ்சத்தில் குறைவில்லா இன்பம் கங்கையைப் போல், காவிரியைப் போல் பெருக்கெடுத்தோடத் துவங்குகிறது என்றால் மிகையாகாது.

வாழையடி வாழையாக வந்தத் திருக்கூட்ட மரபில் தோன்றி, திருச்செந்தூர் திருமுருகப் பெருமான் மீது அளவு கடந்த பக்தி கொண்டு, திருத்தொண்டு புரிந்து வந்த அவர்கள், குலம் விளங்க தங்களுக்கு ஓர் புத்திரன் இல்லையே என்று ஏங்கினர். திருச்செந்தில் சேவகன் சந்நிதி முன்நின்று தங்கள் குறைகளை எம்பெருமானிடம் முறையிட்டு கண்ணீர் மல்கிக் கரங்களைச் சிரம்மேல் கூப்பி பல விரதங்களை மேற்கொண்டார்கள். நாட்கள் பல சென்றன.

அன்பர்களின் குறைகளைத் தீர்க்கத் தோன்றி திருச்செந்தூரில் குடிபுகுந்த திருமுருகப் பெருமான் திருவருள் பெருக்கத்தால், அவர்களுக்குப் புத்திரபாக்கியம் ஏற்பட்டது. அழகு நிரம்பிய ஆண்மகவு ஒன்றைப் பெற்றார்கள். குறை தீர்த்தக் குமரனுக்கு விழாக் கொண்டாடி மகிழ்ந்தார்கள். குமரப் பெருமானின் குறைவிலாக் கருணையால் கிடைத்த அக் குழந்தைக்கு அப்பெருமானின் திருநாமத்தையே வைத்து "குமரகுருபரா...குமரகுருபரா" என்று அன்புடன் அழைத்து வளர்த்து வந்தனர் பெற்றோர்கள். குழந்தையல்லவா! இன்னும் பேச்சு வரவில்லை! பெற்றோர்களையும் பெரியோர்களையும் கண்டவுடன் முல்லைச் சிரிப்பைக் காட்டி 'பூமே...! பூமே...!' என்று ஊமைபோல் பேசி மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவான் குழந்தை குமரகுருபரன்!

ஒரு வயது......இரண்டு வயது; இவ்வாறாக வயது ஐந்தை எட்டினார் செல்லக் குழந்தை குமரகுருபரன், வருடங்கள் சென்றனவே தவிர குமரகுருபரன் வாக்கு வளர்ச்சி பெறவில்லை. வயதிற்குத்தக்க வாக்கு இல்லாமல், முன்போல் 'பூமே...! பூமே...!' என்றே ஊமை போல் பேச்சு சுத்தமில்லாமல் இருந்தார் குமரகுருபரன். இரண்டு வயதிலேயே எதிர்ப் பேச்சுகள் பேசும் மழலைச் செல்வங்கள் அக்கம் பக்கத்திலிருக்க, நம் செல்லக் குழந்தை குருபரன் ஐந்து

வயதை எட்டியும் நன்கு பேசாமல் ஊமையாகி விட்டானே என்று ஏங்கிஏங்கி இளைத்தார்கள் பெற்றோர்கள்.

'அருட்கடலே! ஆறுமுகப் பெருமானே! உன் அருளின் எல்லை இதுதானா? உன் திருவடிகளைத் துணை கொண்ட அடியார்கள் ஏமாற்றமடைய விடலாமா? ஏகநாயகா! லோக நாயகா! பாபநாசகா! உன்னை இந்த உலகவாசிகள் ஏசிடார் களா' என்று கூறி கண்ணீர்ப் பெருக, அலறிக் கொண்டே குமரகுருபரனை அணைத்துக் கொண்டு, திருச்செந்தில் திரு முருகப் பெருமான் திருச்சந்நிதியை அடைந்தார்கள். ஊமைத் தனம் நீங்க, அன்ன ஆகாரமில்லாமல் ஒரு மண்டலம் கடும் விரதங்களை அனுட்டித்து வந்தார்கள் பெற்றோர்கள். சோர் வுற்ற நிலையிலே பலமுறை திருச்சந்நிதியை வலம் வந்து முருகப் பெருமானிடம் முறையிட்டார்கள்.

குழந்தைக் குமரகுருபரனோ, கோபுரத்திலும் சுவற்றிலும் இருக்கும் சிற்பங்களைக் காட்டி 'பூமே...! பூமே...!' என்று கூறி மகிழ்ச்சி கொள்வான். பூமே...! பூமே...! என்ற சொற் களைக் கேட்டு பெற்றோர் உள்ளங்கள் மேலும் மேலும் நடுக்கமுறும் என்பதைக் குமரகுருபரன் அறிவானா! அவன் தான் அறியாக் குழந்தையாக அல்லவா இருக்கிறான். அந்த பூமே...! பூமே...! என்ற சொற்கள்தான் பெருங் காவியமாகத் திகழப் போகின்றன என்பதை பெற்றோர்கள் அறிவார்களா!

48 நாட்கள் அருந்தவம் அனுட்டித்தும் ஆலயத்தை பல முறைகள் வலம் வந்தும் பயன் காணாது வருந்திய பெற்றோர் கள் மனம் குழம்பினர்;- நிலைகலங்கினர். ஊமைக்குழந்தையை வைத்துக் கொண்டு உள்ளம் வெம்பி வாழ்வதைவிட உம்பர் தலைவன் ஆறுமுகப் பெருமான் திருச்சந்நிதியிலே உயிரைத் துறப்பது உத்தமம் என்று எண்ணி குழந்தைக் குருபரனை அணைத்துக் கொண்டு அலைபாயும் கடலை நோக்கி ஓடினார்கள். இவர்கள் செய்கையைக் கண்டு சீற்றம் கொண்ட பெருங் கடல், மலைகளைப் போன்று பெரும் பெரும் அலைகளை எழுப்பி கரையை நோக்கிப் பாய்ச்சியது. "மாண்டு போக முயலாதீர் கள்; மீண்டும் திருமுருகப் பெருமான் திருவடிகளையேதஞ்சம் என்று சரணமடையுங்கள்; முருகன் அருள் புரிவான்!" என்று வற்புறுத்தியது போல் தோன்றியது;

மனம் மாறுப் பெற்றோர்கள், துயரம் தாங்காது குழந்தைக் குருபரனையும் அணைத்துக் கொண்டு. "திருச் செந்தூர் திருமுருகா! தேவாதி தேவா!" என்று கூறியவாறு மலை போன்ற அலைகளின் நடுவே ஆவியை விட்டுவிடப் பாய்ந்தார்கள். மலை போன்ற அலைகளைக் கண்ட குழந்தைக் குருபரன் மகிழ்ச்சி மேலிட 'பூமே... பூமே' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே பெற்றோர்கள் கடலில் பாய்ந் தார்கள்!

சோதனைக் காலம் முடிவுக்கு வந்தது. நம்பினவர்களைக் கைவிடா ஞானநாயகன் அவர்களுக்குக் கருணை புரிய திரு வுள்ளம் கொண்டான்.

திருமேனியெல்லாம் வெண்ணீறுமணக்க, உருத்திராக்கம் அணிந்து, கடப்ப மலர்மாலை அசைந்தாட வயதான அர்ச்சகர் ஒருவர், திருமுருகப் பெருமான் திருச்சந்நிதியிலிருந்து, அலை வீசும் கடலை நோக்கி ஓடிவந்தார். ஆண்டவனின் கருணை தான் என்னே! சீற்றம் தணிந்த கடல் சிறு அலைகளால் அர்ச்சகரின் திருவடிகளுக்கு அபிஷேகம் செய்தது. குழந்தைக் குருபரனையும் பெற்றோர்களையும், அலைகள் அர்ச்சகர் திருவடி களிலே கொண்டு வந்து சேர்ப்பித்தன!

அருள் மிகுந்த அர்ச்சகர், கருணையோடு விளைகளைக் களையும் திருவெண்ணீற்றைப் பெற்றோர்கள், குழந்தைக் குருபரன் நெற்றிகளில் அணிவித்தார். பெற்றோரும் மற்றோரும் மகிழ்ச்சி கொள்ள குழந்தைக் குருபரன் கண் விழித்தான். தன் எதிரிலே நிற்கும் அர்ச்சகரைப் பார்த்து புன்னகை புரிந்தான். அர்ச்சகரின் அருள் பார்வை அக்குழந்தைக் குருபரன் மீது பதிந்தது; தன் கழுத்தில் இருக்கும் மலர் மாலையைக் காண்பித்து 'இது என்ன' என்று வினவினர் அர்ச்சகர். 'பூ' என்றார் குமரகுருபரர். "குமரகுருபரா......! முருகன் புகழ்பாடு!" என்று பணித்தார் அர்ச்சகர்.

பெற்றோரும் மற்றோரும் உவகைக் கடலில் மிதக்க கடல் அலைகள் பின்னிசை இசைக்க பூமே...! பூமே...!என்று கூறி ஊமையாய் இருந்த குழந்தைக் குமரகுருபரன் உலகம் உய்வு பெற "பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய......

பாமேவு தெய்வப் பழமறையும்'' என்று தொடங்கும் 122 கண்ணிகள் கொண்ட கந்தர்கலிவெண்பாவைப் பாடி முருகப் பெருமான் திருப்புகழை அள்ளிக்குடித்தார். 'பூமே' என்னும் இரு எழுத்துக்களே கந்தர்கலி வெண்பாவின் முதல் எழுத்துக ளாக அமைந்திருப்பதை அன்பர்கள் கண்டு அகமகிழ்வு கொள்வார்களாக!

பத்தாயிரத்துக்கும் அதிகமான இனிய தமிழ்ச் செய்யுட் களில் கந்தக் கடவுளின் பெருமையை கந்தபுராணமாக கச்சி யப்பசிவாச்சாரியார் என்னும் பேரருளாளர் பாடியுள்ளார். கச்சியப்பசிவாச்சாரியாரின் கந்தபுராணம் பரந்து விரிந்த திருப் பாற்கடலையொக்கும்! திருப்பாற்கடலைக் கடைந்தெடுத்த தித்திக்கும் அமுதத்தையொக்கும் குமரகுருபர அடிகளாரின் **கந்தர்கலி வெண்பா!**

தெய்வீக ஞானம் பெற்ற அடிகளார் சைவம் தழைக்க கன்னியாகுமரி முதல் கேதாரிநாத் வரை சிங்கத்தில் சவாரி செய்து, திருத்தொண்டு புரிந்தார். ஊமைக் குழந்தைகள் உள்ளவர்கள். திருமுருகப் பெருமான் திருவடிகளைத் தஞ்ச மடைந்து, சொற்சுவை, பொருட்சுவை, பக்திச்சுவை மிகுந்த இக்கந்தர்கலி வெண்பாவைக் கூறி முறையிட்டால். ஊமைத் தனம் நீங்க திருமுருகப் பெருமான் திருவருள்பாலிப்பான் என்பதில் சிறிதும் ஐயமில்லை. வாழ்க! குமரகுருபர அடிகளார் திருநாமம்! வளர்க நல்லோர்கள் நனி உள்ளம்.

**மேன்மை பெறத்**
**தெள்ளித் தினையாவும் தேனும் பரிந்தளித்த**
**வள்ளிக் கொடியை மணந்தோனே!**
**உள்ள முவந்து**
**ஆறுதிருப்பதி கண்டு ஆறெழுந்தும் அன்பினுடன்**
**கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே!**
**நாறு மலர்க்**
**கந்திப் பொதும்பரெழு காரலைக்குஞ் சீரலைவாய்**
**செந்திப் பதிபுரக்கும் செவ்வேளே!**

– *கந்தர்கலிவெண்பா (குமரகுருபர அடிகளார்)*

# கந்தன் தந்த அகவாழ்வு

திருமதி. ப, உமாதேவி அவர்கள்,
(ஆசிரியை)
9/49, திரௌபதி அம்மன்கோயில் தெரு,
அரியாங்குப்பம்-புதுவை-7

## 4. மனம் நிறைந்த திருமணம்

தலைவியுடன் இல்லில் செறிக்கப் பட்டத் தோழி மனம் வருந்துகின்றாள். தலைவியின் துயர்களையத் தான் மேற் கொண்ட தந்திரம் பலனளிக்காததோடு "கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது" போல் தானென்று செய்ப வேறு ஒன்றாய் முடிந்ததே என்று மனங் கவல்கின்றாள். அதனை யறிந்தத் தோழியின் தலைவி அவளைத் தேற்றுகின்றாள். அதுவும் எப்படி? "தோழி நீ வருந்தாதே. கிளி வளர்ப் போர் சிலபோது கவனக் குறைவால் கிளியைப் பறக்க விட்டு விட்டாலும் அது தங்கியிருந்த விலையுயர்ந்த கூட்டைப் பத்திரமாக வைத்துக் கொள்ளுவர். அதுபோல் நம்தாயர்கள் என் மனமாகியக் கிளியைத் தலைவனிடம் பறக்க விட்டு விட்டு என் உடலாகிய வெற்றுக் கூட்டைத்தான் காவல் செய்கின்றனர் என்று கூறித் தாயர்களின் பேதமையைப் பகடி செய்து அதன் மூலம் தன் வயிற்றெரிச்சலைத் தீர்த்துக் கொள்ள முயல்கின்றாள். தோழிக்குச் சற்று மகிழ்ச்சி. தன் தலைவி சிறிதளவு மலர்ச்சியுடன் இருக்கின்றாளே யென்று. ஆனால் மாலைப் பொழுது நெருங்க நெருங்கத் தலைவி சோர் கின்றாள்.

> "காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி
> மாலை மலருமிந்நோய்"

என்ற தெய்வப் புலவரின் வாக்குக்கேற்ப அவளும் நோயின் வசப்படுகின்றாள். அது கண்ட தோழி, தலைவியிடம் அவள் சோர்விற்கானக் காரணம் கேட்கின்றாள். உடனே தலைவி நெருங்கி வரும் மாலைப் பொழுதினைப் பற்றிக் கூறுகின்றாள். வெண் மணல் பரவிக் கிடக்கின்ற மலர்கள் செறிந்துள்ள கானற் சோலைகள் விளங்கும், தண்ணிய கடற்கரையை உடை

யவன் தலைவன். அவன் என்னைப் பிரியாதிருந்த காலத்தே தூய அணிகளையணிந்த மகளிர்கள் விழவுக்குரிய அணிகளைத் தம்பாற் சேர்க்கின்ற தன்மையுடைய மாலைக் காலத்தையே யறிந்திருந்தேன். அதனால் நானும் முன்பெல்லாம் அணி புனைந்து மகிழ்வுடன் மாலைப் பொழுதினை வரவேற்றேன். இப்போது அவ்வாறில்லை, முன்பு மகிழ்வு தந்த அந்த மாலைக் காலமே இன்று நிலம் பரந்தது போன்று, பரந்த துயரத்தோடு, தனிமைத் துயரம் தருவதாய் அமைந்தது. இவ்வாறு அக் காலம் துன்பம் தரக்கூடும் என்பதை நான் முன்பே அறிய வில்லை என்னும் பொருள்பட,

> வெண்மணல் விரிந்த வீததகை கானல்
> தண்ணந் துறைவன் தணவா ஊங்கே,
> வால்இழை மகளிர் விழவணிக் கூட்டும்
> மாலையோ அறவேன் மன்னே; மாலை
> நிலம்பரந் தன்ன புன்க ணொடு
> புலம்புஉடைத்து ஆகுதல் அறியேன் யானே!

என்னும் அழகிய பாடலாகப் பாடிக் கண்ணீர் வடிக்கின்றாள், கையறு தோழி அவள் கண்ணீரைத் துடைத்து ஆறுதல் அளிக்கின்றாள். அப்போது அவள் வாய் திறந்து தன் மனக் கசப்பை ஒரேயொருவரியில் கூறுகின்றாள்.

''நீ யழவே துறந்தனரால் நல்லர் நல்லர் அவ்வாடவரே'' என்று இகழ்ச்சியுடன் தோழி கூறிய சொல் தலைவியின் மனதைச் சுடுகின்றது. தன் தோழி தலைவனைக் கடிந்து கொள்வது தன்னால் தானே என்ற நினைவுடன் அடுத்தச் சில நாட்களுக்கு எவ்வித வருத்தத்தையும் வெளிக்காட்டாமல் இருக்கின்றாள்.

ஆனால், அயலவர் அவளை வாளாவிருக்க விடவில்லை. கண்களைக் கவ்வரும் பேரழகும், கருத்தைக் கவரும் இளமை யழகும் கொண்ட அவளை மகட் கொடை கேட்டு வருகின் றனர். அந்தச் செய்தி தலைவியின் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல் துன்பத்தைத் தருகின்றது. தான் கற்புக் கடம் பூண்டு வாழும் செய்தியைத் தாயர்கள் அறியவில்லையே என்று மனங் குமுறுகின்றாள். தோழியை நோக்கி! ''தோழியே! தன் இனமாகியதும், திரண்ட கூட்டத்தை யுடையதுமான

முசுக்கலை தன் இனத்தோடு சென்று மலைகளில் உள்ள பலா மரத்தில் பழுத்துள்ள கனிகளை யுண்ணும். அவ்வாறு உண்ணும் போது சில மரத்தால் செய்யப்பட்ட வில்லினை யுடைய வேட்டுவன், அங்கே வந்து நின்று, அம்பு தொடுக்க, அதனைக் கண்ட அம்முசுக்கலையானது, குறிபிழையாது அம்பு தொடுக்கும், அவ்வனது பகழித் தொடைக்கு அஞ்சியதாய்ப் போர்க்களத்தை யடைந்த குதிரையைப் போலப் பொங்கி யெழுந்து, தன் இனத்தோடு, மலைச்சாரலில் வளர்ந்துள்ள பெரிய மூங்கில் மரங்களின் நெடுங்கழைகள் அசையப்பாய்ந்து சென்று பதுங்கும். அத்தகைய தன்மையினையும், வளத்தினை யும் கொண்ட பெரிய மலைப்பக்கத்தினைக் கொண்டவன் என் தலைவன். அவன் அன்று போலவே என்றும் `என்பால் மாறுதலற்ற அன்பினையும் நட்பினையும் உடையவன். அவ் வாறிருக்க, ஆரவாரம் கொண்ட இந்த ஊர் மக்கள் என் மணங்குறித்துக் கவல்வதோ? அதன் விளைவாக என்னை மகட் கொடை கேட்டு நொதுமலர் வருவதும் எதற்காகவோ?' என்று சினமுடன் கேட்பதோடு நொதுமலர் வரவைத் தடுப்பாயாக என்ற உட்குறிப்பையும் தோழிக்குத் தெரியப் படுத்துகின்றாள்.

**பலவில் சேர்ந்த பழம்ஆர் இனக்கலை**
**சிலைவிற் கானவன் செந்தொடை வெரீஇச்**
**செருஉறு குதிரையின் பொங்கிச், சாரல்**
**இருவெதிர் நீடுஅமை தயங்கப் பாயும்**
**பொருவரை அடுக்கத்துக் கிழவோன் என்றும்**
**அன்றை அன்ன நட்பினன்**
**புதுவோர்த்து அம்ம, இவ் அழுங்கல் ஊரே.**

என்று தலைவி கூறியதனைப் புரிந்து கொண்ட அறிவுடைப் பாங்கி குழம்புகின்றாள். முன்பே குறிப்பாக உணர்த்தியும் புரிந்து கொள்ள மனமின்றியோ, அல்லது வெறுப்பாலோ கடுமையாகக் காவலில் செறித்திருக்கும்போது மீண்டும் உணர்த்துவதால் என்ன பயன் என்று எண்ணுகின்றாள். எனவே நன்றாகச் சிந்தித்துத் தலைவியின் கற்புக்கு ஏதம் வராமல், தலைவனுடன் அனுப்பிவிட முடிவு செய்து அவளை ஒருவாறு அதற்கு இசைவிக்கின்றாள்.

உலகத்தில் உள்ளோரை ஆட்டிப் படைக்கும் அருள் உள்ளம் கொண்ட வேட்டுவன் அரும்பாடுபட்டு தோழியினைச் சந்திக்கின்றான், தோழி இல்லத்தில் ஏற்பட்டுள்ளச் சிக்கலைக் கூறி அவனை மனதில் ஏற்ற நாள் முதலாகப் பிறை தொழு தலையும் தவிர்த்த கற்புடைச் செல்வியின் துன்பத்தைக் கூறி அவளை உடன் கொண்டு சென்று மணந்து கொள்ளுமாறு தூண்டுகின்றாள். அவனும் அதற்கு உடன்படவே அன்றிரவு வந்து அழைத்துச் செல்லுமாறு கூறியகல்கின்றாள்.

அன்று இரவு ஊரே ஆழ்ந்து உறங்குகின்றது. தலைவி யைப் பொன் போற் பொதிந்து காத்த தாயர்கள் கூட உறங்கி விட்டனர். தலைவியும், தோழியும், தலைவனின் வரவை எதிர்பார்த்துத் துடிக்கும் உள்ளத்துடன் அமர்ந்துள் ளனர். தலைவன் நள்ளிரவில் வந்து தோட்டத்தில் நின்று கொண்டு. தான் வந்ததற்கு அறிகுறியாகச் சங்கேத ஒலி எழுப்புகின்றான். அதைக் கேட்ட தோழி, தலைவியை யழைத்துக் கொண்டு புறப்படுகின்றாள். முதலில் உறுதி யுடன் நடந்தவளின் அடிகள் இடையில் துவள்கின்றன. குடிப்பிறப்பும், நாணமும், அவளைத் தடுக்கின்றன. எனவே தலைவனுடன் உடன்போக்குச் செல்லத் தயங்கியவளாய் நிற்கின்றாள். தலைவியின் மனம் தோழிக்குப் புரிகின்றது. தலைவனுடன் போக மனமிருந்தும். குடிப்பெருமையும், நாணமும், அவளைத் தடை செய்கின்றன என்பதையுணர்ந்து கொள்கின்றாள். ஆனாலும் அதனைக் காண்பித்துக் கொள்ளா மல் அவளிடம், ''நீ குன்ற நாடனாகியத் தலைவனுடன் சென்று விடுவதற்கு உடன்பட்டதனால். யான், அதனை அவனிடத்தேச் சென்று கூறினேன். அதனைக் கேட்ட அவனும், அதற் கிசைய வந்து நிற்கின்றான். உறுதியாகப் புறப்பட்டுச் செல்ல வேண்டிய நீயோ, அவன் குறியிடத்திலே, நினக்காக நிற்பதை யுணராது இன்றையப் பொழுதின் அளவு செல்லட்டும் என்கிறாய். இதனையவனிடம் மீண்டு உரைக்க என்னாலாகாது. நான் பொய் கூறி ஏமாற்றினேன் என்று அவன் எண்ணவும் கூடும். அவ்வாறு அவன் என்னை வஞ்சகி என்று எண்ணி விட்டால் என் செய்வது என்று நினைக்கும்போது நெருப்பி லிட்டத் தளிர் போல் என் கைகளும், கால்களும், நடுக்கத்

தாலும், அச்சத்தாலும் தளர்ந்து, ஒய்ந்து போகின்றது. எனவே நீ அவனுடன் சென்று விடுதலே நன்று. யான் இதன்கண் செய்தற்கு ஏதுவுமேயில்லை.

நீஉடம் படுதலின், யான்தரவந்து,
குறிநின் றனனே! குன்ற நாடன்:
இன்றை அளவைச் சென்றைசக, என்றி;
கையும் காலும் ஓய்வன ஒடுங்கித்
தீயுறு தளிரின் நடுங்கி,
யாவதும் இலை, யான செயற்குரிய துவே.

என்று கடுமையாகக் கூறியவளை யழைத்துச் சென்று காத்திருக்கும் தலைவனிடம் கையடை தந்து விடுக்கின்றாள். தன்னிடம் அடைக்கலப் பொருளாகத் தரப்பட்டத் தலைவியை யழைத்துக் கொண்டு தலைவன் செல்கின்றான். அவர்களை வாழ்த்தியும், இரவிடைத் தனிமையில் செல்லும் அவர்களைத் தெய்வம் காக்க என்று தெய்வங்களை வணங்கியவாறும் இல்லிற்குள் நுழைகின்றாள் தோழி.

வேடனாக இருப்பினும், தண்தமிழின் சுவையில் தோய்ந்தவனும், தந்தை வகுத்த அகப்பொருள் இலக்கணத்தைச் செயலில் காட்ட விரும்பிய மைந்தனுமான அவன், தோழியால் கையடை தரப்பட்டத் தலைவியுடன் செல்கின்றான். அவன் விரும்பியிருந்தால் யாரும் காணாவகையில் சென்றிருக்கவோ, அல்லது வேறு வழிகளில் இயங்கி வெற்றி பெறவோ முடியும்.

ஆனால் அதையவன் விரும்பவில்லை. களவில் அரும்பிய காதல், மறைவிலேயே மலர்ந்து மணம் வீசியது. அது குறிஞ்சி நிலப் பண்பாடு. எனவே, அந்தத் தமிழ்ப் பண்பாடு கெடாமலேயே நடந்து கொண்ட குறிஞ்சி நிலக் கிழவோன். அவளையழைத்துக் கொண்டு உடன் போக்கிலேயேச் செல்லுகின்றான். அவர்களை வழியில் பலர் காணுகின்றனர். அவ்வாறு காண வேண்டும். கண்டு போய் தலைவியின் பெற்றோர்களிடம் கூற வேண்டும் என்பதே யவன் விருப்பம் போலும். எனவே பகலிலும் கூட அவர்கள் பயணம் தொடர்கின்றது.

ஆனால், விடியலில் தலைவியின் இல்லமோ, கல்லெறி பட்ட நீர்க்குளம் போல் குழம்புகின்றது. தோழி, தன்

னுடைய தாயிடம் உண்மையைக் கூறுகின்றாள். தலைவியின் செவிலித்தாயும், தலைவியின் பாங்கிக்குத் தாயும், நற்றாய்க்குத் தோழியுமான அவள், தன்மகள் தெரிவித்த செய்தியைத் தலைவியின் தாயும், தனக்குத் தலைவியுமான நற்றாயிடம் மிகப் பக்குவமாகக் கூறுகின்றாள். "தோழி! அழகிய வீரக்கழலையும் செம்மையாகிய, இலைபோன்ற வடிவமைப்பும் கொண்ட, ஒளி பொருந்திய வேலையும் கொண்ட இளைஞனோடு, பல வகையான வளைகளைத் திரளாக அணிந்திருக்கும் முன்கைகளையுடைய நம் மகள் கொண்ட நட்பு, அவள், அவனோடு சென்றதால் உண்மையாகி விட்டது. அவ்வாறு அக்காளையுடன் சென்ற நம்மகள், பழைய ஆலமரத்தின் அடியில் உள்ள பொது விடத்திலே வைத்துக் கூறிய நன்மொழி பிழையாராய் வந்து தோன்றித், தங்குவதற்கமைந்து விளங்கும், நான்குஊர்களிலும் உள்ள கோசர்களது நன் மொழி போல, அவள் கொண்ட அன்பும், நட்பும் கெடாது, மணப்பறை முழங்கவும், சங்கம் ஒலிக்கவும் அங்கே அவனை மணந்து கொண்டது உண்மையேயாகும்.

**பறைபடப் பணிலம் ஆர்ப்ப, இறைகொள்பு**
**தொல்மூ தாலத்துப் பொதியில் தோன்றிய**
**நாலஊர்க் கோசர் நன்மொழி போல,**
**வாய் ஆ கின்றே—தோழி! ஆய்கழல்**
**சேயிலை வெள்வேல விடலையொடு**
**தொகுவளை முனகை மடந்தை நட்பே!**

என்று கூறித் தேற்றுகின்றாள். அதைக் கேட்டதும் தலைவியின் தந்தையும், தமையன்மார்களும் உற்றாரும், உறவினரும் படைதிரட்டிக் கொண்டு, கச்சையை இறுகக் கட்டிக் கொண்டு தலைவியைத் தேடிச் செல்கின்றனர். வழியில் எதிர்ப்படுவோரிடம் புலன் விசாரிக்கின்றனர். வரும் வழியில் உடன் போக்குச் செல்லும் காதலர்களைப் பார்த்து நெகிழ்ந்த உள்ளமொடு வரும் அவர்கள், சண்டைக்கு வந்திருப்போரை இகழ்ச்சியுடன் பார்ப்பதோடு, அறிவு புகட்டவும் முனைகின்றனர். அவர்களில் ஒரு பாணன் அழகாக,

**வில்லோன் காலன கழலே; தொடியோள்**
**மெல்லடி மேலன சலம்பே; நலலோா**
**யார்கொல்? அளியர்தாமே—ஆரியர்**

**கயிறுடு பறையின் கால்பொரக் கலங்கி**
**வாகை வெண்ணெற்று ஒலிக்கும்**
**வேய்பயில் அழுவம் முன்னியோரே.**

என்று எடுத்துக் கூறுகின்றான். மனமொத்த காதலரை மணம் புரியவிடாது, மூங்கில் காட்டில், நிலைகலங்கச் செல்லும் படி செய்த நல்லவர்கள் யாவரோ? அதாவது நீங்கள்தானா? என்று இகழ்ச்சியுடன் கேட்பவன் மேலும், தலைவியைக் கொண்டு செல்லும் தலைவன், தனிமையாக இருப்பினும் காலில் வீரக் கழலணிந்து, கையில் சிலையுடன், போர்க்கோலம் கொண்டவனாய் விழிப்புடன் செல்கின்றான். எனவே வீரமும், ஆண்மையும் கொண்ட அவனை எதிர்க்காமல் செல்லுதலே நல்லது என்று உணர்த்தி விட்டு மேலே செல்கின்றான்.

ஆனால், ஆத்திரக்காரனுக்கு அறிவு மட்டுதானே! எனவே தலைவனை, எதிர்த்துப் போரிட எண்ணங் கொண்டவர்களாய் அவனைச் சுற்றி வளைத்துக் கொண்டு தாக்குகின்றனர். வெந்திறல் வேட்டுவனோ அவர்கள் அனைவரையும் வென்று நிற்கின்றான். ஆத்திரமும், ஆணவமும், அடக்கப் பெற்றவர்களாய் நிற்கும் அவர்களிடம் அன்பும், அருளும் கொண்டு தன்னை யுணர்த்துகின்றான். பின்னர், தலைவியையும் மணம் புரிந்து கொண்டு செல்கின்றான். யார் இந்தப் புதுமையானத் தலைவன் என்று எண்ணுகின்றீர்களா? உயிர் தொறும் ஒளிந்து நின்று அகிலத்தையும் ஆட்டிப் படைக்கும் எம் பெருமானாகிய குமரப் பெருமானே.

இச்சிறு காவியத்தின் அரும்பெருந் தலைவன். அவன்தான், தான் கற்பித்தத் தெய்வத் தமிழ் கூறும் அகவாழ்க்கையை மேற்கொண்டு ஆடல் புரிந்தவன். குறமகளான வள்ளியின் வனப்பில் மயங்கி, அவள் மனங்கவர்ந்து இறுதியில் உடன் போக்கில் கொண்டு செல்வதன் மூலம் தன்னுடைய ஆற்றலையும், அருளையும் உலகுக்கு உணர்த்தியதோடு சிறப்புற மணம் புரிந்து கொண்டவன். அதனால் தான் அருணகிரிநாதர் தமது திருப்புகழில் அவனைப் பற்றிப் பாடுங்கால்,

**வரிசிலை மலைக்குறவர் பரவிய புனத்திதணில்**
**மயிலென இருக்கு மொரு வேடிச்சி காவலனே**

என்று போற்றிப் புகழ்ந்து துதிக்கின்றார்.

இத்தகையச் சிறப்புடையவனை ஊனுருக, உயிருருக, உள்ளமெல்லாம் உருகப் பாடிப் பரவினால், அருள் செய்யாமல் இருப்பானா என்ன? பண்டைக் காலத்தில் குரவைக் கூத்தின் மூலம் வழிபட்டனர். அவனுடைய அருள் கிடைக்கும் என்ற மனவுறுதி அவர்களிடையிருந்தது.

**வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து**
**நீலப்பறவை மேல் நேரிழை தன்னோடும்**
**ஆலமா செல்வன் புதல்வன் வரும்**

என்பதன் மூலம் அவர்களுடைய குலையாத நம்பிக்கையும் அசையாத பக்தியும் தெரிய வருகின்றது. ஆறுமுகனுடைய பன்னிருகரமும் அன்பர்களைத் தீமைகளினின்று காத்து வருகின்றது. சேவற் கொடி பிடிக்கும் செம்மலின் சேவடிதான் எத்தகு சிறப்புப் பெற்றது. அதையடைந்தோர்க்கு எவ்விதக் குறையும், துன்பமும் நேர்ந்ததாகத் தெரியவில்லை. சீர்தரும் பாதங்களாயிற்றே அவனுடையச் செந்தாமரைப் பாதங்கள். அந்தத் திருவடிகளே சரணம்! என்று அடைக்கலம் புகும் அன்பர்களுக்கு மனம் நிறைந்த, இன்பம் பொங்கும் அக வாழ்வை மட்டுமின்றி மறுமையிலும் இன்பத்தையளிப்பவனன்றோ. அவனைச் சரணடைந்து நலம் பல பெற்று வளமுடன் வாழ்வோமாக.

---


## "ஞானசம்பந்தம்"

**அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்'

உள்நாடு ரூ. 5-00 வெளிநாடு ரூ. 7-00

**செயலாளர், "ஞானசம்பந்தம்" அச்சகம்"**

தருமபுரம், மாயூரம் P. O.

# நலந்தரும் நாமம்

' செந்தமிழ்ச் செல்வன் '
புலவர்: திரு. சிக்கல், சி. சானகிராமன் அவர்கள்,
சிக்கல் (அஞ்சல்) நாகை [வட்டம்]

(சென்ற இதழ் 622ன் தொடர்ச்சி)

முருகப் பெருமானின் திருக்கரத்தில் விளங்கும் வேலின் மகிமை சாற்றவும் பெரிது. முருகனுக்கே உரிய படையாகிய இதனை ''படை அரசு'' எனப் பாம்பன் சுவாமிகளும், ''சக்தி படைத்தெய்வமே'' எனத் தண்டபாணி சுவாமிகளும் போற்றுகிறார்கள், திருவருள் சக்தி வடிவமான வேல்படை எண்ணில் வேதாகமங்கள் பகர்ந்த தெய்வத்துருவமெல்லாம் அது தானாக விளங்கிடும் உண்மையதே'' என்று வேல் அலங்காரம் கூறுகிறது. ''எங்கோன் படை வேல் துணையுண்டெமக்கொரு நாளும் பயமில்லையே'' எனச் சிதம்பர சுவாமிகளும் முழக்கம் செய்கிறார். வினைக்குன்றை அழிக்கும் ஆற்றல் வேலுக்கே உண்டு. 'வினை ஓட விடுங் கதிர்வேல் மறவேன்' என்று கந்தர் அநுபூதியும், 'அறுமுகவன் வேலும் திருக்கையும் உண்டே நமக்கு ஒரு மெய்த்துணையே' என்று கந்தரலங்காரமும் போற்றுகின்றன.

மாயையே உருவான கிரௌஞ்ச மலையைப் பொடியாக்கிய வேலைப் போற்றிப் பணிபவர்களுக்குத் துஷ்ட மிருகங்கள், பறவைகள் முதலியவைகளாலும், கொடுமையான வியாதிகளாலும், கிரகதோசம் முதலிய பாதங்களாலும் எவ்விதமான துன்பங்களும் எப்பொழுதும் ஏற்படாதென ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள் அருளியிருக்கிறார்.

வேலாயுதம் என்னும் தன் நாமத்தை முருகனுக்கு அளித்துப் பெருமை பெற்று விளங்கும் வேல் பக்தர்களுக்கு என்றும் உறுதுணையாக நிற்கும். அன்பர்களுக்கு யாராவது

கெடுதல் செய்ய முயல்வார்களேயானல் அவர்களது குலத்தையே நாசம் செய்து விடும். முருகனது நாமத்தையும், எம்பெருமானைப் போற்றும் திருப்புகழையும் ஓதுபவர்களுக்கு ஏற்படும் தீங்குகளை எல்லாம் அகற்ற வீறு கொண்டு பாய்ந்து வரும். அன்பர்கள் செல்லுமிடங்களுக் கெல்லாம் அவர்களுக்குச் சிறந்த துணையாக இடம், வலம், முன், பின் ஆகிய பக்கங்களில் தோன்றி இரவும் பகலும் பாதுகாத்தருளும்.

ஆகவே வேலுண்டு வினை இல்லை என எண்ணி எண்ணி மகிழ்ந்து வேல், வேல் என்றும், வேல் முருகனுக்கு அரோகரா என்றும் போற்றுகின்றனர், "தோகை மேல் உலவுங் கந்தன் சுடர்க் கரத்திருக்கும் வெற்றி வாகையே சுமக்கும் வேலை வணங்குவதே எமக்கு வேலை" என்று மகாகவிபாரதியாரும் பாடியுள்ளார்.

கடல் சூழ்ந்துள்ள இப்பரந்த பூமண்டலம் முழுவதற்கும் அரசனெனச் சிறப்புடன் வாழ வேண்டுமா? செல்வத்துக்கு அதிபதியாகிய குபேரனையும், தேவர்களின் அரசனாகிய இந்திரனையும் மிஞ்சிய போகங்களை எல்லாம் பெற விருப்பமா? பகையை முறியடிக்க வேண்டுமா? செந்தமிழ் புலமை வேண்டுமா? காலனை வெல்ல வேண்டுமா? மற்றுமுள்ள சித்திகள் பெற வேண்டுமா? என்றெல்லாம் நம்மை நோக்கி ஒருவர் கேட்டால் நாம் வேண்டாமென்ரு செல்வோம்! இவை அனைத்தும் கற்க என்ன வித்தை கற்க வேண்டும், வழி சொல்லுங்கள் என்று தானே கேட்போம். இவை அனைத்துமே பெற ஒரு சுலபமான வழியிருக்கிறது.

எந்த விந்தைகளும் பயன் தராது. அந்தச் சுலபமான மார்க்கம் முருகப் பெருமானது கையில் விளங்கும் வேலையும், அவனது வாகனமாகிய மயிலையும், அவனது கடைக்கண் அழகையும் நினைந்திருப்பதுதான். வீணுகக் காலம் கழியுமுன் வாருங்கள், இத்தனை இன்பங்களையும் பெற விழையுங்கள் என்று உலக மக்கள் அனைவரையுமே அன்புடன் அழைக்கிருர் கருணையே உருவான அருணகிரிநாத சுவாமிகள்.

சேவற் கொடியோன் என்ற சொல் சேவலைக் கொடியாக உடையவன் என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது. எம்

பெருமானது சேவற் கொடி பிரணவ மந்திரத்தின் நாத தத்துவத்தை விளக்கும் சேவலாகவே இருக்கிறது. இதனைக் கந்தரனுபூதி

**''ஆடும் பரிவேல் அணிசேவலெனப்**
**பாடும் பணியே பணியா அருள்வாய்''**

என்று உணர்த்துகிறது. திரு வேளைக்காரன் வகுப்பு ''வாளகிரியைத் தனது தாளிலிடியப் பொருது வாகை புனை குக்குட பதாகைக் காரனும், என்றும், திருப்புகழ் ''திக்கது மதிக்க வரும் குக்குடமும்'' எனவும், 'ஏழுலோகம் வாழ்வான சேவற்கொடி'' எனவும் போற்றுகின்றன. புற இருளை அகற்ற சூரியன் வருவதைச் சேவல் அதிகாலையில் கூவி நமக்கு உணர்த்தி ஊக்கத்தைத் தருகிறது. எம்பெருமானின் கொடியிலுள்ள சேவல் தன்னை வழிபடும் அடியவர்களின் அக இருளை அகற்றி, ஞான பாஸ்கரனாகிய முருகன் வருவதை முன்கூட்டியே அறிவித்து. ஆராத இன்பம் தரும் நாதரூபமாக அமைந்துள்ளது என்பர். சேவலின் பெருமையும் மிக மிகப் பெரிது. சேவலின் பெருமை சேவல் விருத்தம் மூலம் அறியலாம்.

எவ்விடத்துநினைத்தாலும் இறைவன் சேவற் கொடியுடன் காட்சியருள வேண்டுமென்பதை

**''சென்றே யிடங்கள் கந்தா வெனும் பொ**
**செஞ்சேவல் கொண்டு வரவேணும்''**

என்றும் ஏழு உலகங்களையும் சேவற்கொடி வாழ வைக்கின்றது என்பதை,

**''ஏழுலோகம் வாழ்வான சேவற் கொடியோனே''**

என்றும் அருணகிரியார் பாடியுள்ளார். எனவே சேவலின் குரலைக் கேட்டாலே முருகனின் நினைவு நம்மை ஆட் கொள்ளுமாக!

சிவ சிவ

# குறள் கூறும் "உடைமைகள்"

**திரு அ. சுவாமிநாதன், அவர்கள்**
துணை அஞ்சலகத் தலைவர்
அரியாங்குப்பம் 605007.

உலகம் முழுவதும் போற்றி வருவது "திருக்குறள்" எனும் அரிய தமிழ்நூல்தான் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். இன்னும் காலம் செல்லச் செல்ல அந்நூலின் சிறப்பை எங்ஙனமெல்லாம் உணர்ந்து பாராட்டுவர் என் பதைச் சொல்லத் தேவையில்லை. வெளிநாட்டவர்கள் எவ்வளவோ அரும்பாடுபட்டு மொழிபெயர்த்தும், குறட் பாக்களின் ஆழ்ந்த கருத்துக்களைச் செறித்துக் காட்ட முடிய வில்லை. "குறுகத் தரித்த குறள்" என்றாலும் அதில் அடங்கியது ஏழ் கடலுமே என்று நம் முன்னோர்கள் பாராட்டியுள்ளனர். ஒரு அளவான முறையில் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் எனும் உத்தியோடு அமைந்த மிக அருமையான நீதிநூல், குறள் ஆகும். இம்மாதிரியான நூலை யாத்தத் திருவள்ளுவர் எந்த பயனும் கருதாமல், எந்த அரசனும் கோராமல். உலகமே உய்யவேண்டி நம் தமிழ் நாட்டிலிருந்து வழங்கியது நாம் செய்த பாக்கியமே என்னலாம்.

சாதாரணமாக நாம் எழுதும் கட்டுரைகள், கதைகள், கவிதைகள் ஏன் கடிதங்கள் இவற்றில் கூடப் பிறகு யோசிக் கும் போது முக்கியமான, அருமையான, செய்திகள் விடு பட்டுப் போயினவே என்று நினைக்க இடம் உண்டாகிறது. இங்ஙனமிருக்க இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே எந்தவிதக் குறிப்பேடு கொள்ளும் சாதனமும் இன்றி, எந்த சிறு அம்சமும் விடுபடாமல் எல்லா விவகாரங்களுமே அடங்க ஒரு நூலை யாத்துப் போயினர் என்பதை உன்னும் போது உடலும், உள்ளமும் சிலிர்க்கக் காணலாம்.

ஆராய்ச்சியாளர்களில் பலரும் பல்விதமாகக் குறட் பாக்களின் தொகுதி பற்றிக் கூறிவருகின்றனர். சிதறிக் கிடந்த பாக்களை ஒருவர் பத்துப் பத்துப் பாக்களாகச் சேர்த்து அதிகாரங்கள் ஆக்கி வெளியிட்டார் என்றும், முதல் நான்கு

அதிகாரங்களும் வள்ளுவர் செய்தவை அல்ல என்றும், முரண் பட்ட குறட்பாக்களும் உள்ளன என்றும் பலவாறு செய்திகள் உலவி வருகின்றன. இங்கே நாம் அம்மாதிரி யான சர்ச்சை களில் இறங்கி அரிய நூலின் பெரும்பலன் இழக்கும் வாய்ப்பைப் பெற வேண்டாம். நேரிய முறையில் இப்போது இருக்கும் அதிகார வைப்பு முறைகள் உள்ளன. அதே முறையில் நாமும் சென்று அந்நூலின் அரும் போதனைகளை "அது கூறும் **உடைமைகள்"** என்ற பகுதியில் நின்று சற்றே தெரிய முற்படு வோம்,

மனிதர்களுக்கு "உடைமைகள்" என்று எதை எதையோ எல்லாம் உலகில் கூறக் காண்கிறோம். எதுவும் இறக்கும் போது கூட வருவது இல்லை. எல்லாம் அறிந்த வள்ளுவர் நமக்கு என்று பத்து "உடைமைகளை" எண்ணித் தம் நூலில் முறைப்பட வைத்துள்ளார். ஐந்து உடைமை களை அறத்துப் பாலிலும், இன்னும் ஐந்து உடைமைகளைப் பொருட்பாலிலும் பெய்துள்ளார், காமத்துப் பாலில் "உடைமை" என்று எதுவும் பெய்யாமையை ஈண்டு நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒருவனும், ஒருத்தியும் மனம் ஒன்றி காதல் வயப்பட்டு அதனால் அவர்களிடையே பரஸ்பர உள்ளுணர்வு உண்டாகிறது. குறைகாணுமல் நிறைவாகவே கொள்வதால் தனியே தனக்கென்று உடைமையாக எதுவும் கொள்ள வழியில்லை. அவர்களின் அன்பு, பொறுமை, பண்பு, அறிவு, ஊக்கம் யாவும் அவர்கட்குள்ளே நிரவி விடுகின்றன. இதனுலேயே வள்ளுவர் வெளி உலகம் வந்து கலக்கும் மனித ருக்கு என்றே உறுதியான உடைமைகள் பத்தைக் கூறி யுள்ளார்.

அவை முறையே வருமாறு.

**அறம்.**

1. **அன்புடைமை**
2. **அடக்கம் உடைமை**
3. **ஒழுக்கம் உடைமை**
4. **பொறை உடைமை**

} **இல்லறவியல்**

5. **அருள் உடைமை** — **துறவறவியல்**

பொருள்.

1. அறிவுடைமை
2. ஊக்கம் உடைமை
3. ஆள்வினை உடைமை
} அரசியல்

4. பண்புடைமை
5. நாண் உடைமை
} ஒழிபியல்

**1. அன்புடைமை:**

இஃது கணவன் மனைவி, தம் மக்கள் இவர்களிடமிருந்து மற்றும், விருந்து, நண்பர்கள் என்று தொடர்புபற்றி உண்டாகி வளர்வது. "அன்பின் வழியது உயிர்நிலை" என்று கூறும் வாக்கியம் எல்லாம் விளங்க நிற்கிறது. Leo Tolstoy என்னும் ரஷ்ய அறிஞர் "what men live by?" என்ற கதையில் "By Love" என்று முடிவு கூறியுள்ளார். "அன்பு உள்ளது" என்று ஒருவரும் சொல்லிக் கொள்ளத் தேவையில்லை. ஏன்? அதற்கு அடைக்குந் தாழ் இல்லை. புல்லிய கண்ணீரே எளிதில் வெளிப்படுத்தும். அன்பில்லாதவர்கள் மற்ற பொருள்களை எல்லாம் தம் உடைமையாகக் கொள்வர். அன்புடையோர் அவ்வாறின்றி தம் என்புகளையும் பிறர்க்கே உரித்தாக்குவர், உயிர்க்கு ஆதாரமாம் அன்பை முதல்தரமான உடைமையாக வள்ளுவர் கொண்டது எவ்வளவு நுண்ணறிவின் பாற்பட்டது என்பதை நுண்மாண் நுழைபுலம் கொண்டோர் உணர்வர்

**2. அடக்கம் உடைமை:**

"காக்க பொருளா அடக்கத்தை" என்று கூறுவதில், அவ்வடக்கத்தின் பெருமையை அறியலாம். செல்வர் படைத்தோர் அடக்கம் கொண்டால், அது அவர்க்கு மற்றுமோர் செல்வம் போலாம் என்று மெரு கூட்டிச் சொல்கிறார். "அடக்கம் அமரருள் உய்க்கும்" என்றதன் உட்பொருளும் தெளியலாம்.

**3. ஒழுக்கம் உடைமை:**

விழுப்பம் தருவதால் உயிரினும் மேலாக ஓம்பப்படுவது ஒழுக்கம். பரிந்தோம்பி காக்கவேண்டும். தெரிந்தோம்பித் தேரினும் அஃதே துணை ஆகும். "ஒழுக்கம் உடைமை

குடிமை'' என்று வரம்பிட்டுக் கூறியதன் நோக்கமும் உணர்வோம்.

4. **பொறை உடைமை:**

இல்லறத்தில் உள்ளவர்கட்கு என்று கூறப்படினும் எக் கருத்தும், எவருக்கும் பொருந்தவே கூறியுள்ளார். பொறை என்பது எளிதில் வராது. ஒழுக்கத்தின் அடிப்படையில் பொறை உண்டாக வேண்டும். நிலம் எத்துணை அகழ்ந்தாலும், அகழ்வாரைத் தாங்கும் மேம்பாட்டைச் சுட்டிக்காட்டி அறிவுறுத்துகிறார். பொறுத்தலைக்காட்டிலும், மிக்கவை செய்தவைகளை மறத்தல் மிகவும் மேலாகும் என்கிறார். நிறை உடைமை நீங்காதிருக்கப் பொறை உடைமை போற்றிக் காக்க வேண்டும். உண்ணாது நோற்கும் பெரியார்கள் கூட, பிறர் சொல்லும் இன்னாச் சொல் பொறுப்பாரின் பின்தான் என்று நயமாக வள்ளுவர் கூறியுள்ளார்.

5. **அருள் உடைமை:**

அருட் செல்வம்தான் உயரிய செல்வம், ஏனை பொருட் செல்வம் அற்பர் கண்ணும் உள என்று கூறியதை நோக்க வேண்டும். பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது தெளிவாவது போல, அருளை உடைமையாகப் பெறாதோர்க்கு அவ்வுலகம் இல்லையாம். தொடர்பு இல்லாது ஏனைய உயிர்கள் மாட்டும் செலுத்தும் கருணையைத்தான் தவறாமல் உடைமையாகப் பெற வேண்டும். ''அருள் என்னும் அன்பு ஈன் குழவி'' என்ற தொடரால் முதல் உடைமையாம் அன்பு இருப்பின் அருள் உடைமையும் தானே வரக் காணலாம்.

6 **அறிவு உடைமை:**

அற்றம் காக்கும் கருவி அறிவுதான். செறுவார்க்கும் உள் அழிக்கல் ஆகா அரண். அறிவுடையார் எல்லாம் உடையார். அறிவுடை யார் ஆவது அறிவார். கல்வி, கேள்வி அறிவோடு உண்மை அறிவு மேம்பாடு அடைய வேண்டும். உலகத்தோடு ஒட்ட ஒழுகும் அறிவு வேண்டும். எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதுவே நல் அறிவு உடைமையாகும்.

7. **ஊக்கம் உடைமை:**

"உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார் உடையது உடையரோ மற்று" "உள்ளம் உடைமை உடைமை" "உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை" என்றெல்லாம் கூறியன ஈண்டு தெளியற்பாலன. அசைவிலா ஊக்கத்தை உடைமையாகப் பெற்றவனிடம், ஆக்கமானது வழி கேட்டுச் செல்லுமாம். மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு. நாமும் உள்ளத்தைப் பெற்றதோடு அல்லாமல் அதன் வழியே ஊக்கத்தையும் பெற்று உயர்வு பெற வேண்டும்.

8. **ஆள்வினையுடைமை:**

பொறியின்மை யார்க்குமே பழியாகாது. தெரிந்திருந்தும் ஆள்வினையில்லாமையே பழியாகும். தெய்வத்தான் ஆகாது என்றாலும், முயற்சி மெய் வருத்தக் கூலி தரும். முயற்சி இருப்பின் ஊழையும் உப்பக்கம் காணலாம். ஆள்வினையில்லாத மனிதன் எது பெற்றிருப்பினும் என்ன பயனும் காணமாட்டான் என்பது முழு உண்மை.

9. **பண்புடைமை:**

பண்புடைமை என்னும் வழக்கை எளிய முறையில் கொள்ளலாம். உறுப்பொத்தல் மக்கள் ஒப்பாகாது. பண் பொத்தல்தான் வேண்டற்பாலது. இந்த மண்ணுலகமே பண் புடையார் மேற்றே உள்ளது. "பண்புடையார் பட்டுண்டு உலகம்." பண்பில்லாதவன் பெருஞ்செல்வம் பெற்றிருப்பின் அது நன்பால் கலந்தீமையால் திரிந்தது போலாகும் என்று வரும் கருத்தை நம் மனதில் இருத்தல் வேண்டும். அரம் போலும் கூர்மையராயினும் மக்கட் பண்பு இல்லாராயின் மரம் போல்வர்.

10. **நாண் உடைமை;**

இறுதியாகச் சொல்லப்படும் உடைமை நாண் ஆகும். பெண்களின் நாணம் வேறுபட்டது கருமத்தால் நாணுவது நாண் என்று உலகிற்குச் சொல்லுகிறார் வள்ளுவர். ஊண், உடை, உறக்கம், காமம் அனைத்தும் எல்லா மக்கட்கும் பொது. நாண் உடைமைதான் மாந்தர் சிறப்பாகும். சான்றாண்மை நாண் என்பதைக் கொண்டே பேர் விளங்குவது; நாண் உடைமையாகப் பெறுவது சான்றோருக்கு அணியாகும்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

[சிவ சிவ

# இந்துமதம் - ஒரு தத்துவ விளக்கம்

**வித்துவான் திரு நா. சங்கரராமன் பி. ஏ. அவர்கள்,**
மாஞ்சோலை
அம்பாசமுத்திரம் வட்டம். நெல்லை மாவட்டம்.

கல்தோன்றி மண் தோன்ருத காலத்திலே தோன்றியது தமிழ்மொழி என்பார்கள். அதைத் தோற்றுவித்தவர் அகத்தியர். அகத்தியருக்கும் முன்பே தோன்றி நின்று நிலவி வருவது இந்துமதம். உலகில் உள்ள மிகப்பழமையான மதங்களில் இந்துமதமும் ஒன்று. இந்துமதத்தின் தோற்றம் என்று ஏற்பட்டது யாரால் தோற்றுவிக்கப்பட்டது? என்பது யாருக்கும் இன்றுவரை புரியாத—அறிய இயலாத வினுக்களாகவே இருக்கின்றன.

பலவிதமான இடையூறுகளைத் தாங்கியும் இன்னும் நிலைத்து நிற்கும் ஒரே மதம் இந்துமதம். காரணம் யாது? பல முனிவர்களால் பல காலங்களில் யாத்து வைக்கப்பட்ட உபநிஷதங்களும் வேதவாக்கியங்களுமே காத்து நிற்கின்றன. அவை நித்தியமானவை. சிறப்பமைந்தவை—சத்தியமானவை. படையெடுப்புகளாலும், பசியின் கொடுமையினுலும் பய முறுத்தப்பட்ட மக்கள் பல்வேறு மதங்களைச் சார்ந்தனர். எனினும் அழியாமல் நிற்பது நமது இந்துமதம் ஒன்றுதான்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

நாணின்றி நடமாடின் அவர் உயிர், மற்ருேருக்குப் பிணி தருமே அல்லாது நன்மையைத் தாராது. நாணுல் உயிரையும் துறப்பர் நல்லோர்கள், பிறர் நாணத் தக்கதைத் தான் நாணுன் ஆயின்அறம் நாணத்தக்கதுடைத்து. நாணின்மை நின்றக்கடை நலம் சுடும். நாண் அகத்தில்லா உயிர் இயக்கம், மரப்பாவை கயிற்ருல் இயங்கும் செயலுக்கு ஒப்பாகும். **எல்லா உடைமைகளுக்கும் முடிபோல் இருப்பது நாணுடைமை.**

ஈண்டு கூறப்பட்டப் பத்து உடைமைகளிலும் வேறு ஏதேனும் உடைமையும் நமக்கு இனியும் தேவைப்படுமா என்று ஆராயின் **ஒன்றுமில்லை** என்ற பதில்தான் வரும். இது உறுதி. ''இல்லாத பொருள் இல்லை குறளில்'' என்பது எவ்வளவு உண்மை!

இந்து மதமே ஒரு தத்துவ விளக்கம் என்று கூறினல் மிகையில்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கேற்ப சிலவற்றைக் காண்போம்.

இந்துக்களாகிய நாம் முப்பெரும் தெய்வங்களென்று பிரமா, திருமால், சிவன் என்பவரை வணங்குகிறோம். வளம் பெறுகிறோம். மூவருக்கும் மூன்றுவித கடமைகள் வகுக்கப்பட்டிருக்கிறன்றன, மூவரின் மனைவிகளுக்கும் அப்படியே.

பிரமா ஆக்கும் கடவுள். அவர் மனைவி சரஸ்வதி அறிவுக் கடவுள், திருமால் காக்கும் கடவுள் அவர் மனைவி செல்வத்தின் கடவுள் இலக்குமி. சிவன் அழிக்கும் கடவுளானல் அவரது மனைவி சக்தியாவாள். இவர்களைப் போற்றுகிறோம். இந்த இடத்தில் சிறிது காண்போமானல் அதில் ஒரு தத்துவமே புதைந்திருப்பதைக் காணலாம்.

ஆக்கும் ஒருவனுக்கு அறிவு வேண்டும் என்பதையும் காக்கும் ஒருவனுக்கு செல்வம் வேண்டும் என்பதையும் மற்றவனை அழிப்பவனுக்கு சக்தி மிகவும் அவசியம் என்பதையும் விளக்கவே இந்த அமைப்பு ஏற்பட்டது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

மேலும் ஆராய்ந்தால் பிரமா தனது மனைவியை நாவிலும் திருமால் இதயத்திலும் சிவன் தனது உடலின் இடப்புறத்திலும் வைத்துள்ளார்கள் என்பதைக் காண்கிறோம் இதன் தத்துவம்தான் என்ன?

ஒருவனின் அறிவு அவனது நாவன்மையினல் நன்குபுலப்படும் என்பதை விளக்கவும். செல்வம் மிகுந்தவனுக்கு நல்ல இதயம் வேண்டும் என்பதையும் ஒருவன் உடலில் சக்தி ஒரு உறுப்பில் மட்டும் இருந்தால் போதாது. உடல் முழுதும் இருக்க வேண்டும் என்பதை விளக்கவுமே பிரமா, திருமால், சிவன் முதலியவர்கள் நாக்கு, இதயம், உடல் இவைகளில் தமது மனைவிகளை வைத்தனர்.

இதுபோல இந்து மதத்தில் உள்ள ஒவ்வொரு கதையும் வேத வாக்கியமும், சம்பவமும் ஒவ்வொரு தத்துவத்தை அடிப்படையாக கொண்டுள்ளதேயாகும். அவைகளையெல்லாம் நன்கு ஆராய்ந்து உண்மைநிலை அறிந்து தத்துவங்களைப் புரிந்து இந்துக்களாகிய நாம் நல்லிதயத்துடன் இனிது வாழ்வோமாக, இறையருள் கூட்டுவதாக.

# "ஒருவரையும் நம்புகிலேன்"

**திரு. புலவர்: எ. மாணிக்கம் அவர்கள்:**
''முருக நிலையம்'' விதூர்:

''யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம்
அம்மம்மா! பூமியிலே யாவும் வஞ்சம்''

''ஓ... கந்தனு..! வா தம்பி வா! ஏன் பாடலை நிறுத்தி விட்டாய்? காலத்திற் கேற்ற கவிதை. பாடு தம்பி பாடு''

''வணக்கம் சுவாமி! என்னை மன்னிக்க வேண்டும்''

''ஏன் தம்பி?''

''நீங்கள் இருப்பதைக் கவனிக்காமல் பாடிக் கொண்டே வந்து விட்டேன்.'' அதற்காக...!

''தவறு இல்லை தம்பி! அதனுல் என்ன?''

''இல்லைங்க சுவாமி! தேவாரம், திருவாசகம், திருப்புகழ் இவைகளைப் பாடாமல் எதையோ பாடி விட்டேனே!''

''தம்பி! அதுவும் தேவைதான், இதுவும் தேவைதான், ஆனுல் அதிக முக்கியத்துவம் பக்திப் பாடல்களுக்குத்தந்தால் அதுவே போதும்''

''நான் பெரும்பாலும் பக்திப் பாடல்கள்தான் பாடுவது வழக்கம் சுவாமி!''

''உன்னைப் பற்றித் தெரியாதா தம்பி? சரி...! போகட்டும். எங்கே நீண்ட நாட்களாக இந்தப் பக்கமே உன்னைக் காணுேம்''.

''ஊரில் இல்லை சுவாமி, நேற்றுதான் சென்னையில் இருந்து திரும்பி வந்தேன்.''

''ஓ...... அப்படியா?''

''ஆம் சுவாமி, தங்களைப் பார்க்காமல் இருக்க என்னுல் முடியவில்லை. எப்படியோ நாலைந்து மாதங்கள் ஓடி விட்டது''

''அதனால் என்ன தம்பி! எங்கிருந்தாலும் நலமாய் இருந்தால் அதுவே போதும்''.

''என்னவோ சுவாமி. செந்தில்நாதன் திருவருளாலும், தங்களின் ஆசியினாலும் இன்றுவரை நலமாகவே வாழ்ந்து வருகிறேன்''

''இன்று வரை என்ன தம்பி! என்றுமே உன் போன்ற நல்ல உள்ளங்கள் நலமாகவே வாழும்.''

''எங்கே சுவாமி! அப்படி நினைக்க முடியுது? நாளுக்கு நாள் ஏறிவரும் விலைவாசியைப் பார்த்தால் என்றுமே நலமாக இருக்க முடியும் என்று நம்ப முடியலையே!''

''உண்மைதான் தம்பி! அந்தநாள் வியாபாரிகளையும் இந்த நாள் வியாபாரிகளையும் எண்ணிப் பார்த்தாலே புரியும். அந்த நாளிலே கொடுப்பதூஉம் குறைகொடாது, கொள்வதூஉம் மிகை கொளாது வாழ்ந்தார்கள். மேலும், அந்த நாளிலே கடையிலே கண்ணியமாகக் கடவுள் படம் வைத்துப் பூசித்து மாசு இன்றிக் காசு சேர்த்தார்கள், ஆனால் இந்த நாளிலே...''.

''படம் இல்லை என்கிறீர்களா சுவாமி?''

''தம்பி! அந்த நாளைவிட இந்த நாளில்தான் படம் அதிகமாக இருக்கிறது. அதாவது கலப்படம்''

''நன்றாகச் சொன்னீர்கள் சுவாமி, நாட்டில் படமாடும் கோயில்கள் கட்டுபவர்களை அதிகம் காண முடியாவிட்டாலும் எதிலும் கலப்படமாடும் கயவர்களை அதிகம் காணமுடிகிறது. பாவிகள்; உலையாடும் அரிசிக்கே உலைவைத்து விட்டார்களே. இவர்கள் உருப்படுவார்களா சுவாமி''

''ஆத்திரம் கொள்ளாதே தம்பி! காலம்வரும்''

''வயிறு எரிகிறது சுவாமி, அரிசியை அநியாய விலைக்குத் தான் விற்கிறார்கள். போகட்டும், படியையாவது சரியாக அளந்து தொலைக்கக் கூடாதா? வீட்டிலே வந்து அளந்தால் படிக்குப் பாதிகூட தேறவில்லை. அந்தப் பாதியிலேயும் உமி, தவிடு, கல்லு போன்று இன்னும் எத்தனையோ வகைகள். ம்... இருக்கிற நிலையைப் பார்த்தால் எதிர்காலம் எப்படியோ என்று ஏங்கி ஏங்கிச் சாக வேண்டியிருக்கிறது. இந்த வேதனையில் குடிக்கின்ற அரைவயிறு கஞ்சிகூட உடம்பிலே ஒட்டலை''

''தம்பி, எதற்கும் எல்லை உண்டு. அநியாயம் நீண்டநாள் நிலைக்காது. மேலும், அருள் இன்றிப் பொருள்களைப் பதுக்கி வைத்துக் கொள்ளை லாபம் கருதுவதும் ஒருவகையில் சூதே ஆகும்.''

''ஆம் சுவாமி''

''இதனால் வரும் லாபத்தைப் பற்றி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வள்ளுவனும், வெற்றியே பெறுவதானாலும் சூதை விரும்பக் கூடாது. வென்ற வெற்றியும் தூண்டில் இரும்பை இரை என்று மயங்கி மீன் விழுங்கினாற் போன்றது என்னும் பொருள்பட,

> **''வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்**
> **தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று''**

என்று கூறியுள்ளான், கேட்டாயா தம்பி! என்றுமே பெரியோர்கள் வாக்குப் பொய்த்ததில்லை. எதனையும் பதுக்கி வாழும் பாவிகள், கடத்தி வாழும் கயவர்கள் நிச்சயம் அழிவார்கள், விரைவில் நல்ல காலம் வரும். ''தை பிறந்தால் வழிபிறக்கும்'' தம்பி.''

''தையும் பிறந்து விட்டதே சுவாமி''

''வழியும் பிறந்து விட்டது என்றுதான் பொருள். மேலும், நீ ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும் தம்பி! இன்று எவரையும் நம்பமுடியவில்லை என்றும் நல்லவர்கள் என்று யாரை நம்புகிறோமோ அவர்களிடம்தான் அதிகமாக ஊழலும், வஞ்சனையும் இருக்கிறது என்றும் கூறினாயே.''

''ஆம் சுவாமி''

''அதற்குக் காரணத்தைக் கேள் தம்பி! நேரமாகி விட்டதா?''

''பரவாயில்லை; கூறுங்கள் சுவாமி''

''தம்பி, அப்போதெல்லாம் மாந்தர்கள் தெய்வத்தை நம்பினார்கள். ''கடவுளை நம்பினோர் கைவிடப் படார்'' என்றபடி கவலையின்றிக் காப்பாற்றவும் பெற்றார்கள். ஆனால் இப்போதெல்லாம் தெய்வத்தை நம்புவதில்லை. மனிதனையே நம்பு

கிறார்கள். ஆகையினாலே வேதனையுற்று வாடுகிறார்கள் என்ன செய்வது?''

''அப்படியானால் தெய்வ பக்தி இல்லையென்கிறீர்களா?''

'தம்பி, தெய்வ பக்தி இருக்கிறது. ஆனால், தெய்வ நம்பிக்கை இல்லை என்றுதான் கூறுகிறேன்''

''சற்று புரியும்படி கூறுங்கள் சுவாமி''

''தம்பி! ''எல்லாம் அவன் செயல்'' என்ற தெளிவான அடிப்படையில் எவரும் வழிபாடு செய்வதில்லை. மேலும், ஒருமையுடன் அவன் திருவடியைச் சிந்திப்பதில்லை.

**''கையொன்று செய்ய விழியொன்று நாடக்**
**கருத்து ஒன்று எண்ணப்**
**பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப்**
**புலால் கமழும்**
**மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க**
**விரும்பும் யான்**
**செய்கின்ற பூசையெவ் வாறு கொள்வாய்**
**வினைதீர்த் தவனே''**

என்னும் பட்டினத்து அடிகளாரின் பாடலின் வழியேதான் இன்றைய வழிபாடு வளர்கிறது''

''நூற்றுக்கு நூறு உண்மை சுவாமி''

''தம்பி, பாஞ்சாலியின் துகிலை பகைவன் துர்ச்சாதனன் களைகின்ற போது தன்னைச் சார்ந்தவர்களை நம்பினாள். எவரும் காப்பாற்றவில்லை. தன்னையே தான் காத்துக் கொள்வேன் என்று நம்பி கைகளைத் தன் இடுப்பிலும் மார்பிலும் மாறிமாறி வைத்துத் துகிலைப் பிடித்துக் காத்துக் கொள்ள முயல்கிறாள். முடியவில்லை, பிறகுதான் தன் இருகைகளையும் தலைமேல் தூக்கி கண்ணா! கண்ணா! என்னைக் காப்பாற்று! என்னைக் காப்பாற்று எனக் கூக்குரலிட்டுக் கதறி, கடவுளை நம்பி அழைக்கிறாள். உடனே அவன் விரைந்து வந்து காப்பாற்று கிறான், இல்லையா தம்பி''

''ஆம் சுவாமி''

''இத்தகைய நம்பிக்கை இன்று எத்தனை பேரிடம் இருக்கிறது தம்பி''

"கடினம்தான் சுவாமி"

"கற்றுணைப் பூட்டி யோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்ற நம்பிக்கை எத்தனை பேருக்கு வரும்?"

"வருவது மிகமிகக் கடினம் சுவாமி"

"தம்பி! நான்தான் பெரிய மனிதன், என் கழுத்தில் முதலில் மாலை போடவில்லை. அந்தக் கோவிலில் எனக்கென்ன வேலை, இனி அந்தக் கோவிலுக்கே போகமாட்டேன் என்று கூறும் பக்தர்களையும் நீ பார்த்திருப்பாயே தம்பி"

"ஆம் சுவாமி! அதற்காக அந்தக் கோவிலையே இழுத்துப் பூட்டி விடுகிற ஆசாமிகளும் இருக்கத்தான் இருக்கிறார்கள்".

"தம்பி, அப்படியிருக்கும் போது நம்பிக்கை 'இல்லாத மனிதனை நம்பிக்கையோடு நல்லவன் என்று நம்ப முடியுமா?"

"நம்ப முடியாது சுவாமி"

"ஆகையினாலேதான் மனிதனை நம்புவதில் பயனில்லை, மனிதன் நம்பவைத்துக் கழுத்தை அறுப்பான். என எண்ணியே அடியவர் ஒருவர், உன்னைத் தவிர வேறு ஒரு வரையும் நம்பமாட்டேன் நம்பி அவர்பின் போகவும் மாட்டேன். உன்னையே நம்பி வந்தேன். நீயே என்துணை என்று தன்உள்ளத்தைத் திருச்செந்தூர் பெருமானிடம் ஒப்படைத்து அவன் திருவடிகளில் வீழ்ந்து வணங்குகிறார் '

"அவர் பெயர் என்ன சுவாமி"

"தம்பி, அவர் பெயர் விழையாத பெருந்தகையார் இன்று போல் "ட்யூப்" லைட்டைக் கோவிலில் போட்டுத்தந்து அதன் முழுவதும் தன் பெயரையும், ஊரையும் எழுதி அதன் ஒளியைக் குறைத்து விடுகின்ற புகழ் விரும்பியல்ல அவர். ஏன் தம்பி சிரிக்கிறாய்?"

"தாங்கள் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது சுவாமி"

"வேடிக்கை அல்ல தம்பி, சிந்திக்க வேண்டும்"

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# கல்வெட்டுக்களில் விளக்கு அறம்

திரு. K. ஸ்ரீதரன் M.A. அவர்கள்,
தஞ்சாவூர்-7.

திருக்கோயில்களால் சிறப்புற்றுத் திகழ்வது தமிழ்நாடு, "கோயில் விளங்க குடி விளங்கும்" என்பது பழமொழி. அப்பர் பெருமான் இவ்வுடலைப் பெற்றதின் பயன் என்ன என்பதை தம் திருப்பதிகத்தில் விளக்குகிறார்.

**"ஆக்கையாற் பயனென்-அரன்**
**கோயில் வலம் வந்து**
**பூக்கை யாலட்டிப் போற்றி யென்னுதஇவ்**
**ஆக்கையாற் பயனென்?"** — அப்பர்.

நம் உடலின் அமைப்பு ஆலயத்தை போன்று அமைந்துள்ளது. இதை திருமூலர்,

**"உள்ளம் பெரும் கோயில் ஊனுடம்பாலயம்**
**வள்ளற் பிரானுர்க்கு வாய்கோபுர வாசல்**

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

"உண்மைதான் சுவாமி, அந்த அடியவர் எழுதிய பாடலைக் கூறுங்களேன்"

"இதோ கூறுகிறேன், தம்பி"

**"உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்**
**பின்னை யொருவரை யானபின செல்லேன் பன்னிருகைக்**
**கோலப்பா! வானோர் கொடியவினை தீர்த்தருளும்**
**வேலப்பா! செந்தில் வாழ்வே"**

"அருமையான பாடல் சுவாமி" இன்று தங்களைச் சந்தித்தவேளை நல்லவேளை நிறைய செய்திகளை அறிந்து கொண்டேன். வருகிறேன் சுவாமி"

"எல்லாம் கோலமயிலேறும் "கு ம ர கு ரு ப ர ன்" திருவருளே ஆகும். சென்றுவா தம்பி"

"மிக்க நன்றி சுவாமி, வணக்கம்"

சரணம்! சரணம்! முருகா!

தெள்ள தெளிந்தார்க்குச் சிவன் சிவலிங்கம்
கள்ள புலனைந்தும் காளா மணி விளக்கே''

என்று தம் பாடலில் கூறுகின்றார்.

**திருவிளக்கு:**

விளக்கு ஒரு மங்கலப் பொருள், நாம் தவறான வழியிலிருந்து விலகி நல்லறிவு பெற்று நல்வழியில் நடக்க உதவுகிறது. புறத்திருளை நீக்கும் அகல் விளக்கு போன்று, அகத்திருளை நீக்குவதற்கு ஞானவிளக்காகிய இறைவன் நமக்கு துணை நிற்க வேண்டும். அத்தகைய இறைவனை நாம் எவ்வாறு காணுவது? இதற்கு அப்பர் பெருமான், உள்ளமாகிய தகளியில் உணர்வு என்னும் நெய்யை வார்த்து, உயிர்ப்பு என்னும் திரியை செவ்விதின் அமைத்து, ஞானம் என்னும் சுடரை ஏற்றி, அதைக் கொண்டு நோக்கினால் இறைவன் திருவடிகளை காணலாம் என்று கூறுகின்றார்.

''உடம்பெனும் மனையகத்து உள்ளமே தகளியாக
மிடம்படும் உணர்நெய் அட்டிஉயிர் என்னும் திரிமயக்கி
இடம்படும் ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே''

**ஞானவிளக்கு:**

இத்தகைய சிறப்பு வாய்ந்த இறைவனை, இறையருள் பெற்று புலவர் பெருமக்கள் பலரும், ''அரும்பெரும் ஜோதி'' வடிவாக வர்ணித்து பாடியுள்ளார்கள்.

''வையங் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக – செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே என்று''

என்று பொய்கையாழ்வாரும்,

''அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா – நன்புருகி
ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்''

என பூதத்தாழ்வாரும் பாடியுள்ளார்.

''சோதியே சுடரே சூழொளி விளக்கே''
''ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதி''
''சுடர்கின்ற கோலந் தீயேயென மன்னு சிற்றம்பலவர்''

என்றெல்லாம் மாணிக்கவாசகர் இறைவனை போற்றுகின்றார்.

## இலக்கியத்தில் விளக்கு;

இத்தகைய சிறப்பு வாய்ந்த தீபவழிபாடு நம் நாட்டில் தீபாவளி பண்டிகையிலும் கார்த்திகை மாதத்திலும் கொண்டாடப்படுகிறது. கார்த்திகை மாதத்தில் மகளிர் விளக்குகளை வரிசையாக ஏற்றி வைத்திருப்பர். இது பார்ப்பதற்கு இலவ மரத்தில் அடுக்காக மரம் முழுவதும் பூத்திருக்கும் சிவப்பு நிற பூக்களை போன்று தீப வரிசைகள் இருக்கிறது என்று ஒரு அகநானூற்று பாடல் குறிப்பிடுகிறது. (1)

''வானம் ஊர்ந்த வளங்கொளி மண்டிலம்
நெருப்புஎன சிவந்த உருப்பு அவிர் அம் காட்டு
இலைஇல் மலர்ந்த முகைஇல் இலவம்
கலிகொள் ஆயம் மலிபு தொகுபு எடுத்த
அம்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி''

— ஔவையார்

## திருவிளக்கு வழிபாடு:

சிவப்பிரகாச சுவாமிகள் கார்த்திகை மாத விளக்கீட்டின் பெருமையை தம் பாடலில் குறிப்பிடுகின்றார்.

''கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்தும்
கண்டவர் அகத்திருள் அனைத்தும்
சாய்த்து நின்றெழுந்து விளங்குறுஞ் சோன
சைலனே கைலை நாயகனே''　　— சிவப்பிரகாசர்

சிவ தர்மத்தில் உடலால் கோயிலுக்கு செய்ய வேண்டிய உதவிகளைப்பற்றி கூறும் பொழுது விளக்கிட வேண்டியது முக்கியமான ஒரு கடமையாகும் என்று சிவஞான சித்தியார் செய்யுளும், திருமூலம் திருமந்திரமும் நமக்கு தெளிவுறுத்துகின்றன.

''தாத மார்க்கஞ் சாற்றிற் சங்கரன்தன் கோயிற்
தலமலகிட்டு இலகு திருமெழுக்குஞ் சாத்திப்
போதுகளுங் கொய்து பூந்தார் மாலைகண்ணி புனிதற்குப்
பலசமைத்துப புகழ்ந்து பாடித் தீதில் திருவிளக்கிட்டுத்
திருநந்தவனமும் செய்து திருவேட்டங் கண்டாலடியேன்
செய்வது யாது பணியீரென்று பணிந்தவர்
தம் பணியுமியற்று வதிச்சரியை செய்வோரீ சனுலகிருப்பர்''

— சிவஞான சித்தியார்,

(1) தமிழ்நாட்டு விழாக்கள் — அ. மு. பரமசிவானந்தம்.

''எளிய நல் தீபமிட்டல் மலர் கொய்தல்
அளிநான் மெழுகல் அது தூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல் பன்மஞ்சன மாதி
தனிதொழில் செய்வதுதான் தாச மார்க்கமே''
– திருமந்திரம்.

**கல்வெட்டுக்களில்:**

இவ்வாறெல்லாம் போற்றப்படும் விளக்கை அக்காலத்தில் நமக்கு நல்வாழ்வு காட்டும் இறைவன் ஆலயங்களில் ஏற்றி வைத்தனர். செய்யும் தருமங்களில் ஆலயங்களுக்கு விளக்கு ஏற்றுவதற்கு அளிக்கப் பெற்ற கொடை மிகச் சிறந்ததாக கருதப்பட்டது. இதை ஆலயங்களில் உள்ள கல்வெட்டுதரும் செய்திகளின் மூலம் அறிய முடிகிறது. மேலும் விளக்கு எரிப்பதற்கு என்னென்ன பொருள்கள் கொடுத்தார்கள், என்னென்ன விளக்குகள் அளித்தார்கள் என்று கல்வெட்டுக்கள் தரும் செய்திகளை இனிக் காண்போம்.

கல்வெட்டுக்களில் மிகப்பல, கோயில்களுக்கு விளக்கு எரிப்பதற்காக அளித்த கொடையைப் பற்றிய செய்திகளை தருகின்றது. விளக்கு எரிப்பதற்கு நெய் அல்லது எண்ணெய் வேண்டும், நெய் பெறுவதற்கு பசுக்கள், ஆடுகள் ஆகியவற்றை அளித்தார்கள். மேலும் பசுக்களின் எண்ணிக்கை குறைந்து விடாமல் இருக்க எருதும் கொடுக்கப்பட்டதாக கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இதை தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது

''உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார்க்குத் திருவிளக்கு
நெய் அளக்கக் கடவர்களாக இடையர் வழி
திருவிளக்கு ஒன்றினுக்கு ஆடு தொண்ணூற் றுகவும்
பசு நாற்பத் தெட்டாகவும், எருமை பதிநாறுகவும்
இவையிற்றுடக்கு பசுவின் கன்றும், எருதும்,
பசுச் சார்த்திக் குடுத்தன பசுவாகவும்
ஆட்டுக் குட்டியுங் கிடாவும் ஆடுகார்த்திக் குடுத்தன ஆடாகவும்
எருமைக் கன்றுங்கிடாவும் எருமை சார்த்திக்குடுத்தன எருமையாகவும்
மாடடுத்து மாடுகொண்ட இடையரும் திருவிளக்கு ஒன்றினுக்கு
ஆடவல்லாநால் நிசுதம் நெய்
உழக்காக அளக்கக் கடவர்களாக கல்லில் வெட்டின படி''

**திருவிளக்கு குடிகள்:**

அவ்வாறு அளிக்கப் பெற்ற ஆடுகள், பசுக்கள் இவைகளை வளர்ப்பதற்கு கோயிலின் சார்பில் சிலர் பெற்றுக் கொண்டு, நிபந்தனைகளின்படி கோயிலுக்கு விளக்கு எரிப்பதற்கு நெய் அளித்து வருவர். அவர்கள் 'கோயில் மன்றுடிகள்' 'திருவிளக்கு குடிகள்' என்று கல்வெட்டுக்களில் அழைக்கப் படுகின்றனர்.

**திருவிளக்கு வகைகள்;**

கல்வெட்டுக்களில் நந்தா விளக்கு, சந்தி விளக்கு, சாதாரண விளக்கு, அரை விளக்கு, கால் விளக்கு. ஆகிய விளக்கு வகைகள் கூறப்படுகின்றன. 'நந்தா விளக்கு' என்பது இறைவன் அருகில் எப்பொழுதும் எரிந்து கொண்டு இருக்கும். 'சந்தி விளக்கு' என்பது 'காலை' 'மாலை' இரு நேரங்களில் மட்டும் ஏற்றப்படும் விளக்கு ஆகும்.

மேலும் என்னென்ன வகையான விளக்குகளை கொடுத்தனர் என இனிக் காண்போம். முதலாம் இராசராசனின் மனைவி உலக மகாதேவி திருவையாறு கோயிலுக்கு ஈழச்சியல் விளக்கு, மலையான்சியல் விளக்கு, சோழச்சியல் விளக்கு, அனந்தலை விளக்கு, ஆர்குடவி, நிலைவிளக்கு ஆகிய விளக்குகளை கொடுத்தாள் என அக்கோயில் கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளது. சங்கராந்தி நாட்களில் இறைவனுக்கு அபிடேகம் செய்ய நெய் வழங்கவும், விளக்கு எரிப்பதற்கு செம்பினால் ஆன 32 அகல் விளக்குகளும் கொடுக்கப்பட்டதாக திருச்சாற்றுரை கோயில் கல்வெட்டு கூறுகின்றது. முதலாம் இராசராசனின் கல்வெட்டு ஒன்று மாத்தூர் சிவன் கோயிலுக்கு ஐந்து நிலை குத்துவிளக்கு, மூன்று நிலை குத்துவிளக்கு ஆகியவை கொடுக்கப்பட்டதாக கூறுகின்றது. (485of1902) திருமனஞ்சேரி கோயிலுக்கு ஒரு பாத்திரம், தொங்கும் விளக்கு, ஒரு மணி ஆகியவை கொடுக்கப்பட்டதாக அக் கோயில் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது.

திருவிடைமருதூர் கோயிலில் உள்ள விக்கிரமசோழனின் 5ம் ஆண்டு கல்வெட்டு வளநாட்டைச் சேர்ந்த ஒருவனால் விளக்கு வைப்பதற்காக நிலம் கொடுக்கப்பட்டதாக கூறுகின்றது.

விளக்கு எரிப்பதற்கு என்னென்ன பொருள் கொடுத்தார்கள் என இனிக்காண்போம்.

இறைவன் அருகில் ஒரு நந்தா விளக்கு எரிப்பதற்கு ஒரு உழக்கு நெய் வழங்குவதற்கு 90 பசுக்கள் அளித்ததாக முதலாம் பராந்தகன் காலத்து உய்ய கொண்டான் திருமலை கல்வெட்டு கூறுகின்றது. (96 of 1892). புலியூர் நாட்டடிகள் என்பவர் 30 கழஞ்சு பொன்னை கோயில் விளக்குகாக அவ்வூர் சபையிடம் கொடுத்தார். அச்சபையும் ஒரு நாளைக்கு ஒரு உழக்கு நெய் வீதம் தரச் சம்மதித்து அதைப் பெற்றுக் கொண்டது. இவ்வாறு அந்தநல்லூர் கோயில் கல்வெட்டு கூறுகின்றது. திருவிடந்தை மணவாள பெருமாள் கோயிலில் விளக்கு எரிப்பதற்காக 30 கழஞ்சு பொன் அவ்வூர் சபையிடம் கொடுக்கப்பட்டது. சபையோரும் தினமும் ஒரு உழக்கு எண்ணெய் அளிப்பதாக சம்மதித்து பெற்று கொண்டனர், (உத்தம சோழன் 6–ஆம் ஆண்டு கல்வெட்டு 268 of 1910) மன்னார்குடி தாலுகா திருவீராமசுவரம் கோயிலில் மூன்று விளக்குகள் 7½ நாழிகைகள் எரிப்பதற்காக 19 காசுகள் நிபந்தம் செய்து கொடுத்ததாக முதலாம் இராசேந்திரன் கல்வெட்டு கூறுகின்றது. திருமனஞ்சேரியை சேர்ந்த திருக்கற்றளிபிச்சன் 16 கழஞ்சு பொன் சந்தன குழம்புக்காகவும்; ஆடை, மற்றும் விளக்குகளுக்கு வேண்டிய எண்ணெய்காக நிபந்தம் செய்து கொடுத்தான் என முதலாம் இராசராசன் கல்வெட்டு கூறுகின்றது. (906 of 1914). திருக்குவளை தியாகராச கோவிலில் குலோதுங்க கட்சிராயன் என்பவன் 100 காசுகள், ஆண்டு முழுவதும் விளக்கு எரிப்பதற்காக 91 நாழி எண்ணெய்க்காக நிபந்தம் செய்து கொடுத்தான். அதை சில பிரமணர்கள், தினந்தோறும் விளக்கு எரிப்பதற்கு எண்ணெய் கொடுப்பதாக சம்மதித்து பெற்றுக் கொண்டார்கள் என குலோத்துங்க சோழன் கால கல்வெட்டு கூறுகின்றது.

**சுத்த பண்டிகை:**

ஒரு ஊரில் அண்ணன் தம்பி இருவருக்கும் சண்டை, தம்பி அடித்து அண்ணன் இறந்து விட்டான். வழக்கு ஊரார்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

சிவ சிவ]

# செய்ந்நன்றி மறவா சீலர்

**திரு. புலவர் பி. ரா. நடராசன் அவர்கள்**
**தமிழாசிரியர், பிஷப் ஈபர் உயர்நிலைப் பள்ளி,**
**புத்தூர் – திருச்சி. 17.**

எல்லாம் வல்ல முருகனைப் பெருமானைப் போற்றிப் புகழாத புலவரில்லை. பைந்தமிழால் பாடுவாரின் துன்பங்களைப் போக்கும் தூயோன் அவன் வடமொழி வாணர்களும் பைந்தமிழ்ப் புலவர்களும் அவனின் அரும்பெரும் செயல்களைப் போற்றினர். புகழ்ந்தனர். வணங்கினர் எனினும் அவன் பெருமை ஒன்றினையே மட்டும் எடுத்தோதிய மாப்புலவர்களில் மிகவுஞ் சிறப்புடையவர்–சிறந்து விளங்குபவர்–அருணகிரியார் ஒருவரே! வாக்கிற் சிறந்த அருணகிரியார் எண்ண

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

சபை முன் வருகிறது. அண்ணனுக்கு பின் பெற்றோர்களை காப்பாற்றப் போகிறவன் தம்பிதான். அவனுக்கு மரண தண்டனை அளித்தால் அது அவனை நம்பியுள்ள பெற்றோர்களுக்கு துன்பம் அளிக்கக் கூடிய செயலாகும். ஆகவே அவ்வூர் கோயிலில் அரை விளக்கு எரிக்க பொருள் கொடுக்க வேண்டும் என்று சபையினர் தீர்ப்பு கூறினர்கள்.

இத்தீர்ப்பு முறைக்கு 'சுத்த பண்டிகை' என்று பெயர். இச்செய்தி வடஆற்காடு தாமரைப்பாக்கம் அக்னீசுவரர் கோயில் கல்வெட்டில் காணப்படுகிறது.

அப்பர் பெருமான் கோயில்களில் விளக்கிட்டவர்களுக்கு கிடைக்கும் பேறுகளைப் பற்றி தம் பாடலில் விளக்குகிறர்.

**''விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்நெறி ஞானமாகும**
**விரும்பி நல்விளக்குத் தூபம் விதியினல் இடவல்லார்க்கு**
**கரும்பினுல் கட்டி போல்வார் கடவூர் வீரட்டனுரே''**

– அப்பர்.

ஆகவே ''பொற்கழல் ஈசன்'' ஆலயங்களில்திருவிளக்கு ஏற்றி வைத்து அஞ்ஞானத்தை அகற்ற 'ஞான ஒளியைப்' பெற்று உய்வோமாக.

மும் பேச்சும் செயலும் பிறவும் முருகனைப் பற்றியவையே! குன்றுரையும் குமரனைத் தவிரப் பிறரைப் பற்றிப் பாடாத பெருநாவலர். அதனுல்தான் முருகவேள் அவரின் சொல்மாலை களையே தம் தோளில் அணிந்துள்ளான் என்பதனை 'பன்னிருவா குவிலென் சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே' என அப்பெருமானே கூறுவர், ஏன்? 'யாமோ திய கல்வியுமெம் மறிவுந் தாமேபெற வேலவர் தந்ததனுல்' என்பதனுல் இக் கூற்று மேலும் அரணுகின்றது, ஆம்! அவனருளால் அவன் தாள் வணங்கும் பெற்றியது போல அவன் புகழ் ஓதியே அவனை அடைந்தவர் அருணகிரியார் என உணரலாம்.

மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழியினர், ஆசிரியர் எங்ஙனயினரோ மாணுக்கரும் அங்ஙனயாய் இருப்பது போன்று முருகன் வழியினையே அருணகிரியாரும் பின்பற்றினர் என்க. என்னை? கந்தவேள் தோன்றியது விசாகநன்னில் ஆனுல் அவன் விசாகநத்தினும் கார்த்திகை மீனிலே மிகப் பொலிவுறுகிருன் என்பதனை, மக்கள் அவனிருக்கும் இடந் தேடி பெருந்திரளாகச் சென்று வணங்கி மகிழும் நிலையினுல் உணரலாம். ஏன்? தன்னை நன்முறையில் ஓம்பி வளர்த்த கார்த்திகை மாதருக்கே அவன் பெருஞ் சிறப்புத் தருகின்ருன் தன்னை ஈன்றதாயினும் வளர்த்த தாய்க்கே முதன்மை கொடுத்துத்தன் செய்ந்நன்றி மறவாமையை மன்பதைக்கு எடுத்துக் காட்டினுன்.

தெய்வப்பிலவரான திருவள்ளுவர் தாம் யாத்த திருக்குறளில் 'செய்ந்நன்றி அறிதல்' என்ற அதிகாரத்தை 11ஆம் அதிகாரமாக வைக்கக் காரணமென்ன? 'உதவி வரைத்தன்று உதவி' என்று கூறு மாற்ருனும் இதற்கு விடை காணலாம் ஆம். திருக்குறள் கற்க குறள் எண்களும், அதிகாரவைப்பும் துணையாகும்.

நாம் பிறரிடம் உதவி பெற்ருல் அதனை மறத்தல் கூடாது நன்றி மறப்பது நன்றன்று, எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டு. செய்ந்நன்றி கொன்ற பாவிக்கோ? அம்மம்மா உய்வே இல்லை ஆகவே பிறர் நமக்குக் காலத்தால் செய்த உதவிபோலவே நாமும் அவருக்குச் செய்ய வேண்டும்.

அதுவே அதற்கு ஈடாம், என்று நம்மனோருக்குத் தெரியப் படுத்தவே ஒன்றும் ஒன்றுமாக அமைந்த அதிகாரத்தில் 'செய்ந்நன்றி அறிதலே' செந்நாட்போதர் அமைத்தனர் போலும்! ஒன்றுக்குச் சமம் ஒன்றுதானே! ஓர் உதவிக்குச் சமமாவது அதனைப் போன்ற பிறிதொரு உதவிதானே! கொக் கொக்கக் கூம்பி அப்பொழுதினை நாம் எதிர்பார்த்தல் வேண் டும். என்னே தெய்வப்புலவரின் நுண்மாண் நுழைபுலம்!

அருணகிரியார் வணங்கிய தெய்வமும் செய்ந்நன்றியை மறக்கவில்லை: அவரைப் பின்பற்றிய அடியாரும் மறக்கவில்லை இனி நன்றியினையும் அதினை மறவாச் செயலையும் காண் போமா!

நாம் ஏன் இறைவனை வணங்க வேண்டும்? அதனால் அவன் பெறுவது யாது? அவன் அடையும் நன்மை என்ன? 'பலர் தம் திருக்கோயிலுக்கு வந்து வணங்கினர். இத்துணைப் பேர் என்னைப் போற்றினர்! எனவே நானே பெரியவன், என்று மார்தட்டுபவனே இறைவன் அல்லவே எல்லாவற்றை யும் கடந்தவன் என்பதினால்தானே அவன் கடவுள் எனப் பெயர் பெறுகின்றான். அவனுக்கு விருப்பும் வெறுப்பும் ஒன்றுதானே! பின் ஏன் நாம் அவனை வணங்க வேண்டும். மணிவாசகர் இதற்கு விடை கூறுகிறார். 'வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்' என்கின்றார். வானவரே தாம் வாழ வேண்டிப் பரம்பொருளை இறைஞ்சுகின்றனர். எனில் மக்கள்? நாம் நன்றாக இருக்க—வறுமைகளைந்து வளமாகவாழ-இன்னல் அற்றுவாழ—நல்லருள் பெற்ற வாழ-இருள் நீங்கி வாழ-அவனின் பெருமையை எடுத்தோதுகிறோம். நாம் கூறுவதை அவன் செவி மடுப்பனோ? இன்னலைக் களைவானோ? என்றால் மனம் பொறிவழி போகாமல் விரதம் முதலியவற்றால் உண்டியைச் சுருக்கி ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கி காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி அவன் நினைவினையே நிறுத்தி வாழும் போது நம் உரை அவனைக் கேட்கச் செய்யும். அப் போது கேட்டது கிடைக்கும் நினைப்பது நடக்கும். அப்படியா? சான்று உண்டா? உண்டு, இதற்கு நம் அருண கிரியாரையே சாட்சிக்கு அழைப்போம்.

அருணகிரியாரை வண்ணப் பணித்து வாவென்ற கூறிய வடிவேலவன் அவருக்குப் பாடும் ஆற்றலைக் கொடுத்தான். அவரும் பாடினர், 'சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை' போன்று வாடா வண்டமிழ் மாலையால் அலங்காரம் செய்தார் பின் அநுபூதி ஆயினர். அநுபூதியே பெறுநிலை. 'பேசா அநுபூதி பிறந்ததுவே என்பது நம் கோட்பாடு.

வேலவனின் பத்தித் திருமுகம் ஆறுடன் கூடிய பன்னிரு தோள்களில் கிளியாக அமையும் பேறு பெற்ருர் அருணகிரி யார் 'சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை' என்பதற்கேற்ப வேலவனின் வார்த்தைகளை ஒன்று விடாமல் கேட்டுத் தாம் பெற்ற இன்பம் இவ்வைகயமும் பெருவேண்டும் என்ற பெரு நோக்கால் அநுபூதியும் யாத்தனர். முருகனின்வார்த்தைகளே அநுபூதியாம். இப்பெருமை பெற்ற அநுபூதியில் ஒரே ஒரு தலத்தை மட்டும் குறிக்கின்ருர். நம் அருளாளர், ஏன் அத் தலத்தை மட்டும் பெருமானுர் குறிக்க வேண்டும்? அத்தலத் திற்குத்தான் அப்படி என்ன சிறப்பு? அருணகிரியார் தாம் பாடிய அலங்காரத்தில் கந்தவேளுக்கு ஒரு விண்ணப்பம் விடுகின்ருர். அவ்விண்ணப்பம்தான் யாது?

**தெய்வத் திருமலைச் செங்கோட்டில்**
**வாழுஞ் செழுஞ்சுடரே**
**வைவைத்த வேலபடை வானவ**
**னேமற வேலை உனை நான்**
**ஐவர்க்கு இடம்பெறக் காலிரண்டு**
**ஓட்டி அதிலிரண்டு**
**கைவைத்த வீடு குலையுமுன்**
**னேவந்து காத்தருளே** (28)

பொருளைக் காண்பதற்கு முன் உலகில் தெம்மாங்குப் பாட் டெனவும், சாதாரணப் பாட்டெனவும் கூறப்படும் பாடலின் பொருளையும் கண்டபின் அலங்காரத்திற்குப் போவோம்,

**நந்தவனத்தில் ஓராண்டி அவன்**
**நாளாறு மாதமாய்க் குயவனை வேண்டி**
**கொண்டு வந்தான் ஒருதோண்டி–அதைக்**
**கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி,**

இது பொருளற்றப் பாடலா? 'தழற்புரைச் சுடற் கடவுள் தந்த தமிழிலா பொருளற்றப் பழம் பாடல்கள், அல்லவே!

இவ்வுலகம் நந்தவனம் போன்றது, இவ்வுலகமாகிய நந்தவனத்தில் ஒருவன் தோன்றுவதற்காகக் குய்வனுன நான் முகனே வேண்டி குடம் போன்று உருவமான மானிடப் பிறவியை எடுத்தான், எப்படி எடுத்தான். நாலும் ஆறுமாக மொத்தம் 10 மாதங்கள். எண்சாண் உடம்பினுள் மலஞ் சோரும் ஒன்பது வாயில்களைக் கொண்டு. இவ்வழியும் உடம்பினைக் கொண்டு அழியாப் பேரின்பமான வீடு பேற்றினைப் பெற வேண்டும். அதனுல்தான் அழியும் உடம்பிற்கு அழியாதது என்ற பொருளில் 'மெய்' எனக் கூறிற்று தெய்வத் தமிழ். சிற்றின் பற்றி அழிகாமத்தால் மீதூர்ந்து தையலார் மையலிலே தாழ்ந்து கிடந்து வீணே அழிகிருன். எதுபோல 'கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி' என்பது போல, பெறற்கரிய மானிடப் பிறப்பு பெற்ற ஒருவன் அழியாப் பேரின்ப வீடுபெற வேண்டுமெனத் தத்துவம் கூறும் பாடலே நாம் மேற்கண்டது. அதுபோல அருணே முனிவர் கேட்கிருர் ஐவராகிய மெய், வாய், கண், மூக்கு. செவியோடு ஊந்தைய உடம்பினைச் சுமக்கத் தூண் போன்ற இருகால்களோடு இருகைகளையும் வைத்து வீடு போன்ற இவ்வுடல் அழியும்முன் என்னை நீ காக்க வேண்டும் இவ்வுடல் அழிபு முன் என்னை நீ உன்னிடம் அழைத்துக் கொள்ள வேண்டும். இதுவே அருணே முனிவரின் விண்ணப்பம். இவ்விண்ணப் பத்தினை யாருக்குப் போடுகிருர்? தெய்வத் திருமலை செங்கோட்டில் வாழும் செழுஞ் சுடரனுக்கு அல்லவா! ஏன் இப்படிக் கூறுகிருர்.

'திருமலை' எனமட்டும் தனித்துச் சொன்னுல் அது திருவேங்கடவன் உறையும் மலையைக் குறிக்குமோ அற்றேல் ஸ்ரீசைலத்தையும் கூறலாம். (ஸ்ரீமுஷ்ணம் என்பது திருமுட்டம் என்பது போல) அல்லாமலும் செங்கோட்டைக்கு அண்மையிலுள்ள பண்பொழி எனப்படும், திருமலையையும் குறிக்கும் (இங்கே முருகன் மலைமேல் உள்ளான்) ஆகவே 'திருமலை' எனத் தனித்துச் சுட்டாமல் 'செங்கோட்டில்' என்ருர். ஐந்தாம்படைவீடான குன்றுதோருடல் அல்லவா! ஆகவே மலைமீது முருகன் உறைவது இயல்பாதல் பற்றி 'தெய்வத் திருமலைச் செங்கோட்டில்' என்ருர். கோட்டம்

என்றால் வளைவு. வளைவு நிமிருமாம் செங்கோட்டில்! சோதி, சுடர், விளக்கு இம்மூன்றும் தனித்தனி நீர்மையின. இம்மூன்றினையும் ஒரு சேர வைத்து 'சோதியே சுடரே சூழ்மணி விளக்கே' எனப் பாடியுள்ளார் மணிவாசகர். சோதி-யாண்டும் பரவி நிற்பது. சுடர்-அழியாது நின்று பிறர்க்குத் துணைபுரிவது; விளக்கு—நம் இல்லங்களில் இருப்பது. அழியாமல் நின்று பிறர்க்குத் துணை புரிபவன் அதனால் 'சுடரே' என்றார். ஏனைய திருக்கோயில்களில் வேலவனுக்குத் தனியாக வேல் சார்த்த வேண்டும். ஆனால் செங்கோடனுக்கு அவன் திருமேனியிலேயே வேல் உள்ள அற்புதத்தைக் காணலாம் அதனால் அதனைச் சிறப்பிக்க வேல்படையெனக் கிளந்தோதினர்.

திருச்செங்கோடு திருஞானசம்பந்தராலும் பாடல் பெற்ற தலம். இறைவன் மங்கைபங்கனாய்க் காட்சி தருகின்றான். இத்தகு பெருமை பெற்ற செங்கோட்டில் வாழும் வேலவனைக் காண 'நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே' என்பர், அனுபூதி வள்ளல். இவ்வருள் வேலனைக் கண்டால் சாந்துணைப் போதும் தாழ்வில்லையாம். எனவே அடியேன் அழியுமுன் என்னை ஆட்கொள்ள வேண்டுமென விண்ணப்பம் விடுக்கின்றார். தொழுவார் கை துன்பம் துடைக்கும் பெற்றியனான தூயோன் அருணகிரியாரின் விண்ணப்பத்தினையேற்று அவர் விரும்பியவாறு அவர் உடல் அழியுமுன் அவரை ஆட்கொண்டான். இப்பீடு பெறு செயலைத் தாம் திருவாய் மலர்ந்தருளிய அநுபூதியில் அறிவிக்கின்றார். அருணை முனிவர். ஆம்! அநுபூதியில் திருச்செங்கோடு தவிர வேறு எத்தலமும் அப்பெருமகனால் குறிக்கப்படவில்லை, தனக்கு நல்லருள் புரிபாலித்தத் தலத்தைச் செய்ந்நன்றி மறவாமல் குறிக்கிறார் குமரன் அடியார். அதுவும் எத்துணையாவது திருப்பாட்டில் தெரியுமா? 11ஆம் திருப்பாட்டில், திருக்குறள் அதிகாரமான 'செய்ந்நன்றி அறிதல்' போல, ஆம்! திருச்செங்கோட்டிற்கு ஈடான தலம் திருச்செங்கோடே! அத்துணைச் சிறப்பா செங்கோடு. ஆமாம். மலைப் பெயரையும் அதில் உறையும் கந்தனின் பெயரையும் சேர்த்து மக்களுக்கு வைக்கும் பழக்கம் இத்தல மக்களுக்கே உரியது. 'செங்கோடன்', 'செங்கோட்டு வேலன்' முதலிய

பெயர்களே அடியேன் கூறியதை மெய்ப்பிக்கும். இனி அருணை முனிவருக்கு அழியாப் பேரின்பம் தந்த அநுபூதிப் பாடலைப் பார்ப்போம்.

**'கூகா எனஎன் கிளைகூ டிஅழப்**
**போகா வகைமெய்ப் பொருள்பே சியவா!**
**நாகா சலவே லவ! நாலுகவி**
**த்யாகா! சுரலோக சிகா மணியே'**

அழுது புரண்டாலும் மாண்டோர் வருவதில்லை. என் சுற்றத்தார் என் முன்னே கூடி கூகா என அறற்றிடாமல் என் உடல் அழியு முன்னே எனக்கு நல்லருள் பரிபாலித்த நாகாசல வேலவனே உன்னைப் பாட அருள் வழங்கும் வள்ளலே எல்லாம் அறிந்தவனுகை நாகசலம் என்னும் திருச்செங் கோட்டில் எழுந்தருளியுள்ள பெருமானே! என்கிறுர். நாகா சலம்-என்பது திருச்செங்கோட்டிற்கு வழங்கும் மற்றெரு பெயர். நாலுகவித்தியாகா. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனவும் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் அமைத்துப் பாடும் கவிகளையும் கொள்ளலாம்.

இப்படித் தன் வேண்டுகோளை ஏற்று நல்லருள் பரிபாலித்த செங்கோட்டு வேலவனின் செய்ந் நன்றியை மறவாமல் அநுபூதியில் வேறு எத்தலத்தினையும் கூருது செங்கோட்டினைக் கூறிய திறங்காண்க. இதனுல் அவரை செய்ந்நன்றி மறவா சீலர் என அழைக்கலாம் அல்லவா!

———

# இருவினையொப்பு

திரு; P. திருஞானசம்பந்தம் அவர்கள்;
கிராம அதிகாரி செஞ்சி

இறைவனை அடைய வேண்டுமானல் நாம் முன்னதாக இருவினையொப்பு அடைய வேண்டும். இருவினையொப்பு அடையவில்லையானல் இறைவனை அடைய முடியாது. இருவினையொப்பு என்பது நமது உள்ளக் கிடக்கையில் நல்வினையும் தீவினையும் ஒத்த ஆதல். பத்துத் தீவினைகளுக்குப் பத்து நல்வினைகள் சரியாய்ப் போயின என்கிற அந்த ஒப்பு அன்று. நல்வினைப் பயன் எந்த அளவில் ஈட்டிய பயனாகும்? அன்னவாறே தீவினை பயனும் கூட்டல் கழித்தல் என்கிற கணக்கில் அடங்காது. நல்வினை செய்தால் நல்ல பயன் அடையலாம். தீவினை செய்தால் அதற்கேற்பத் தீய பயனை அடைய நேரும் காரண காரியமாக அவ்வவற்றின் பயனை அடைந்தே தீரவேண்டும்; கையை நெருப்பிடை வைத்துச் சுட்டுக் கொண்டதற்குத் தண்ணீரிடை வைத்தல் சுட்டதை நீக்கியது ஆகுமா? சுட்டது சுட்டதே அதன் பயனையும் அனுபவிக்க வேண்டும் தண்ணீரிடை வைத்ததால் வெந்தது போகாது.

**காலத்தினாற் செய்தநன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.**

**பயன் தூக்கார் செய்தவுதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது.**

மேற்கண்ட குறட்பாக்களில் ஒருவகை நன்றி ஞாலத்தினும் மிகப் பெரியது. இன்னொரு வகை நன்மை கடலினும் பெரியது இவற்றுள் எது பெரியது, எவ்வளவு பெரியது என்று சுட்டிச் சொல்ல இயலாது. எனவே நல்வினைப் பயனையோ தீவினைப் பயனையோ ஒரு வரையறையிட்டுக் கூற இயலாது. சொற்ற இவற்றால் ஒவ்வொரு வினையின் பயனையும் தனித்தனியாக

அடைந்தே தீரவேண்டும். நல்வினையும் தீவினையுமாய இரு வினையும் பிறவியைத் தரும் ஆனதால் பிறவியற்று போவதற்கு இருவினையும் நம்மிடமிருந்து அகல வேண்டும் தெய்வப்புலவர் திருவள்ளுவர் 'வேண்டுதல் வேண்டாமை யிலான் என்று இறைவனைக் குறித்துக் கூறினர். இருவினையும் இருள் சேர்ந் தனவே பிறவியைத் தருவனவே ஆனதால் 'உனக்கிலாததோர் வித்து' என்று பிறவியைச் சுட்டினர் மணிவாசகரும். பிறவியற வேண்டும் நல்வினையும் தீவினையும் ஒக்க அறவேண்டும். சூனிய மாக வேண்டும். இந்தச் சூனியமாகும் நிலைதான் இருவினை யொப்பு என்பது. இதுவேதான் வேண்டுதல் வேண்டாமை யாகியநிலை. விருப்பு வெறுப்பு அற்றநிலை. இஃது தூயநிலை அசட்டுத்தனமன்று. அருள் சேர்ந்த நிலை இன்ப துன்பங்களை ஒன்ருக நோக்கும் நிலை. இன்பத்திடை நனி மகிழ்தலும் துன்பத்திடைப் பெரிதும் அழுங்கலும் கூடா. அறிவுகொண்டு அருளுடன் ஒன்ருக அவற்றைக் காண்பதுதான் இருவினை யொப்பு. பஞ்ச பாண்டவரில் தருமனும் அடியார்களும் ஆழ்வாராதிகளும் அடைந்த நிலை அது. கீழே காண்க.

தர்மபுத்திரன் ஒருநாள் அயர்ந்து உட்கார்ந்திருந்தானுக, வியாச பகவான் அவன் அவ்வாறிருந்ததேன் என்று வினவ. அவன் எங்களைப் போல எவரேனும் சூதாட்டத்தால் நாடு, நகரம், அரசு, செல்வம் அனைத்தும் இழந்தவர் உண்டோ எனக் கேட்டான். அதற்கு வியாசர் உண்டு என்று சொல்லி நளன் கதையை உரைத்தார் இந்த நிகழ்ச்சியை கூறுங் காலத்து நளவெண்பா பாடிய புகழேந்திப் புலவர்.

> "மெய்த்திரு வந்துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும்
> ஒத்திருக்கும் உள்ளத் துரவோனே சித்தம்"

என்று வியாசர் தருமனை விளித்துச் சொன்னதாக குறித் துள்ளார். இவ்வாக்கியத்தில் நிலையான செல்வங்கள் வந்த டைந்தாலும் வெம்மையான துயரங்கள் வந்தடைந்தாலும் விருப்பு, வெறுப்பு ஆகியவையின்றி ஒரே தன்மைத்தாகவே இருக்கின்ற உள்ளப் பண்பினையுடையன் எனக் கூறப்படு கிருன். இவ்வாறு சமநிலை உடையவன் தருமன் இந்த நிலைதான் இருவினையொப்பு.

இனி சேக்கிழார் பெருமான் தமது திருத்தொண்டர் புராணத்தில் அடியார் கூட்டத்தைக் குறிப்பிடும் போது.

> கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
> ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
> கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
> வீடும் வேண்டா விறலின் விளங்கினர்.

என்று அடியார் சிறப்பினைக் கூறுகின்றார்.

அடியார்களுக்கு ஓடும் செம்பொன்னும் ஒன்றுதான். பொதுவாக இந்த இலக்கணம் எல்லா அடியாரிடத்தும் காணலாம். ஆனால் சிறப்பாகச் சைவசமய குரவர் நால்வருள் ஒருவராகிய திருநாவுக்கசரிடத்து இவ்விலக்கணம் தெளிவுறச் சொல்லியிருக்கக் காணலாம். திருப்புகலூரில் இருந்த காலத்து.

> செம்பொன்னும் நவமணியும் சேணவிளங்க ஆங்கெவையும்
> உம்பர் பிரான் திருமுன்றில் உருள் பருக்கையுடன் ஒக்க
> எம்பெருமான் வாகீசர் உழவாரத்தினில் ஏந்தி
> வம்பலர் மென் பூங்கமல வாவியினிற்புக எறிந்தார்.

என்று சேக்கிழார் பெருமான் மிக அழகாக கூறுகின்றார் இந்த நிலைதான் இருவினையொப்பு நிலை. இந்நிலையில் எல்லாம் ஒன்றே.

இதே நிலையை கம்பர் தமது இராமாயணத்தில் தமக்கே யுரிய தனிப்பான்மையில் காட்டுகின்றார். சீதாபிராட்டி அசோக வனத்திலிருந்த போது இராமபிரானையே சிந்தித்த வண்ணமா யிருந்ததால் அப்போது எந்நிலையிலும் மலர்ந்திருக்கும் அவனது முகத்தை உன்னுவாளாயிருந்தாள் என்பதைக் கம்பர் பின் வரும் செய்யுளால் உணர்த்துகின்றார்.

> மெய்த் திருப்பதமே வென்ற போதினும்
> இருத் திருத்துறந்தே கென்ற போதினுஞ்
> சித்திரத் தினிலர்ந்த செந் தாமரை
> ஒத்திருக்கு முகத்தினை யுன்னுவாள்.

இதன் கருத்து இராமன் நாடு நகரம் ஆட்சியெல்லாம் தனவே எனச் சொல்லக் கேட்ட போதும், இத்திருவெல்லாம் துறந்து தான் காட்டுக்குப் போக வேண்டுமென்று சொல்லக் கேட்ட போதும் அவனது முகம் ஒரே நிலையினிலிருந்தது என்பது.

சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை போன்றிருந்தது அவன் முகம் என்னுமிடத்துப் பெரியதோர் உண்மையும் நயமும் காணலாம். செந்தாமரை எப்பொழுதும் மலர்ந்திராது பகலில் மலர்ந்தும் இரவில் குவிந்தும் இருக்கும். ஆக இராமன் முகத்தை வெறுஞ் செந்தாமரைக்கு ஒப்பாக சொன்னால் ஒரு வேளை மலர்ச்சியும் இன்னொருவேளை முகிழ்ப்பும் குறிக்கும் இயற்கையிலுள்ள தாமரையின் இயல்பு இது. ஆனால் சித்திரத்தில் எழுதிய தாமரையாயிருந்தால் எப்பொழுதும் அலர்ந்தே இருக்கும்.

இவ்வாறு இன்ப துன்பங்களை ஒக்க நோக்கும் இயல்பினை நாம் அடைதல் வேண்டும். இவ்வியல்பினை அடைவது எளிதன்று மிக அரிபது. உலக வாழ்க்கையில் உளவாகும் ஆக்கங்களை யெண்ணிக் களிப்படைதலும் கேடுகளை நினைந்து அவலமுறுதலும் எல்லோரிடத்தும் பொதுவாகக் காணப்படும் மன இயல்பாகும். இவ்வாறு செல்வக்களிப்பால் மையலுறு மலும் அல்லல் மிகுதியால் சோர்வடையாமலும் இன்பதுன்பம் இரண்டினையும் ஒப்பக் கருதும் நல்லறிவுடையவர்களே இரு வினையொப்பு உள்ளமுடையோராவர் இத்தகைய பெரியோர் களைக் 'கேடும் ஆக்கமுங்கெட்ட திருவினர்' எனப் போற்றுவர் சேக்கிழார்.

இருவினையொப்புடையப் பெரியோராகிய இவர்கள் எத்தகைய பேரிடர்கள் அடுக்கி வந்தாலும் அவற்றைக் கண்டு ஒருசிறிதுங் கலங்காத மனவுறுதியுடையவர்கள். இவர்களுக்கு இவ்வுறுதியை வழங்கவல்ல பேரருளாளன் முழுமுதற் பொருளாகிய இறைவனொருவனே யாவன் திருவாளனாகிய அப் பெருமான் தோன்றாத் துணையாய் நின்று தன் அடியார்களுக்கு வழங்கும் துளக்கமிலா மனச் செம்மையாகிய இத்தெளிவினையே 'திருநின்ற செம்மை' எனப் போற்றுவர் சான்றோர்.

இருவினையொப்பு அடைந்த மனம் மலபரிபாகம் இலேசில் கொள்ளும். கொண்டால், மும்மலப் பேய்கள் ஓடும், நாம் அவற்றினின்றும் நிவர்த்தி பெறுவோம். நம்மிடமிருந்து நான்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# உள்ளம் கவர் கள்வன்

திருமதி. ப, உமாதேவி அவர்கள்,
(ஆசிரியை)
9/49, திரௌபதி அம்மன்கோயில் தெரு,
அரியாங்குப்பம்–புதுவை-7

---

தலத்தாலும், தீர்த்தத்தாலும், மூர்த்தத்தாலும் மிகமிகச் சிறப்புற்று விளங்குவது மதுரை நகரமாகும். நான் மாடக் கூடல் என்று அழகுறப், பொருத்தமுற அழைக்கப் பெறும் அவ்வூரின் சிறப்பையும், அங்குக் கோயில் கொண்டுள்ள அண்ணலின் புகழையும் என்னென்று கூறுவது. உலக நாயகி யான உமையம்மை தடாதகைப் பிராட்டியாய்த் தோன்றி பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்ததும், இறைவன் தமது அறுபத்திநான்கு திருவிளையாடல்களைச் செய்ததும், சோம சுந்தரப்பெருமானாக வந்து அம்மையை மணங் கொண்டதும், அந்தப் பாண்டிய நாட்டின் கோநகரான மதுரையில் தானே! எனவே சீருக்கும், சிறப்புக்கும் செல்வ வளத்துக்கும், புகழுக் கும், பெருமைக்கும் காரணமான மதுரையின் அழகினை,

'மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரை
பூவொடு புரையுஞ் சீறூர் – பூவின்
இதழகத் தனைய தெருவம் இதழகத்
தரும் பொருட்டனைத்தே யண்ணல் கோயில்'

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

எனது என்னும் அகந்தையும் மமதையும் அகன்றுவிடும். அவை அகன்று விட்டால் இறைவன் திருவருள் சித்தி நன்கு நம்மிடத்துப் பதியும். இதுதான் சத்திநிபாதம் எனப்படும், நாம் இறைவனுள் பதிந்து, பிறகு சாலோக, சாமீப, சாருப, சாயுச்சியத்தைப் படிப்படியாக எளிதில் அடையலாம். ஆக இறைவனோடு இரண்டறக் கலக்கும் நிலைக்கு அடிப்படை யானது இருவினையொப்பு.

---

என்ற பாடல் வனப்புடன் எடுத்துக் காட்டுகின்றது. அழகிய பொகுட்டினைச் சுற்றி இதழ்கள் இருப்பது போன்று ஆலவாய் அவிர்சடைக் கடவுளின் திருக்கோயிலைச் சுற்றிலும் வீடுகள் நிரம்பிய வீதிகள் இருக்கின்றனவாம். அது கவினுற காட்சி தருகின்றதாம்,

இத்தகையச் சிறப்புடைய பழம் பெரும் மதுரை நகரில் உயர்குடியில் தோன்றிய, எழில்மிக்க நங்கையொருத்தி யிருந்தாள். தோழியருடன் ஆடிமகிழ்பவள். ஆடவர் முகம் நோக்கா நிறையுடையவள், அவள் ஒருநாள் தன் தோழியர் சூழ்ந்துவர, ஆலவாய் அண்ணலின் அற்புதக் கோலங் காண, அவன் ஆடும் திருமன்றினுக்குச் சென்றாள். முன்பே அவனைப் பற்றியும் அவன் புரிந்த விளையாட்டுகளைப் பற்றியும் அடியார் பாடிப் பரவுவதையும், தாயரின் மூலம் கேள்விபட்டிருந்தாள். அவள் மன்றினுள் சென்று சொக்கேசரைக் கண்டு வணங்கி யதும் வேறு ஒன்றும் செய்ய இயலாதவளாய் வாளா விருந்தாள்.

**குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்**
**குமிண் சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளமேனியில் பால்போல்**
**வெண்ணீறும்**
**இனித்தமுடன் எடுத்த பொற்பாதமும் கண்டால்**
**இவ்வுலகில்**
**மனித்த பிறவியும் வேண்டுவதே இம்மானிடர்க்கு.**

என்று அப்பரால் பாடப் பெற்ற சுந்தரவடிவும், சுமுகமான குணமும் கொண்ட கூத்தப் பெருமான் முன்பு முனிவர் களுடைய மனைவியரின் வளைகளைக் கவர்ந்தது போதாவென்று அள்ளங் கையின் மனதையுக் கவர்ந்து கொண்டான். இதனால் அவனிடம் தன் உள்ளத்தையிழந்து, பெண்மைக் குணங்களை யும் தோற்று, ஆற்றாமையுடன் இல்லந் திரும்புகின்றாள். தாயரின் அன்பும், பரிவும் கசக்கின்றன. உணவில், விளையாட்டில், இசையில், நாட்டமேயில்லை. தன்னை மறந்து, தன்னிலை மறந்து தன்னுள்ளங் கவர்ந்தவனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கின்றாள். தாயர்களுக்கே இந்நிலை புரியாத புதிராய் இருக்கின்றது, எனவே எப்போதும் அவளு

டன் இருக்கும் தோழியைக் கேட்க அவள் விளக்கம் தருகின்றாள். அவர்கள் திகைப்பதோடு, மனஞ்சலிக்கின்றனர் 'எட்டாப் பழத்துக்கு ஏங்குகின்றாளே' என்று நினைக்கின்றனர் என்ன செய்தும் அவளை மாற்ற முடியவில்லை. இவ்வளவு வம்பும் சுந்தர பாண்டியரால்தானே? என்று அவன் மேல் காய்கின்றனர். பேதைப் பருவத்தினளான இவள் தோழியருடன், வண்டலாடி, புனலாடி அம்மானையாடி மகிழ்ந்திராமல் இப்படிப் பித்துப் பிடித்தவள் போல் இருக்கின்றாளே! விளையாடா விட்டாலும் தொலைகிறது. விருப்பமில்லையென விட்டுவிடலாம். ஆனால் உண்ணாமல், உறங்காமல், அலங்காரமும் செய்து கொள்ளாமல், எந்நேரமும் அவனையே எண்ணி ஏங்குகின்றாளே! என்று கூறி குறைப்படுகின்றனர்.

ஏடார் புண்டரிகத் திருமான் முதுபாட
லெழுதா மறையோடு மிசைமுத் தமிழ்பாடப்
பீடார் கூடல்வளம் பாடா வாடல்செயும்
பெருமான் முன்சென்றாள் சிறுமா னென்சொல்கேன்
பாடா ளம்மனையு நாடா ளெம்மனையும்
பயிலா டண்டலை முயலாள் வண்டலையு
மாடாண் மஞ்சனமுந் தேடா ளஞ்சனமு
மயிலா ளன்னமுமே துயிலா ளின்னமுமே.

என்றெல்லாம் கூறுவதைக் கேட்ட தோழி அதனை வன்மையாக மறுத்துரைக்கின்றாள். "தாயே! நீ குறை கூறுதலோ, கண்ணுதற் கடவுளைப் பழித்தலோ தகாது. நின்னிள மகள், ஆலயஞ் சென்று அவனை வணங்கியதால் மட்டுமே இந்நிலை வந்துவிடவில்லை. முன்பே அவள் மனமும் சிந்தையும் அவன்பால் ஈர்க்கப்பட்டு விட்டது. அவனைப் பாரா முன்னமே, அவனுடைய திருப்பெயரைக் கேட்டாள். அவனுடைய புகழைச் செவியாரப் பருகி மகிழ்ந்தாள். அவன் வாழ்கின்ற மற்றைய ஊரான திருவாரூர் பற்றியும் கேட்டாள். இவைகளையெல்லாம் கேட்டுக் கேட்டு அவன் மேல் அளப்பரும் காதல் கொண்டாள். இன்று அவனை நேரில் கண்டதால் அக்காதல் முதிர்ச்சியுற, அதனால் பித்துப் பிடித்தவள் போல் இருக்கின்றாள். அவள் ஆடல், பாடல், ஊண், உறக்கம் ஆகியவற்றை மட்டும் ஒழிக்கவில்லை. உற்றார், உறவினர், பெற்றோர், ஆக எல்லாவற்றையுமே துறந்து விட்டாள். தன் மனதில் கோயில்

கொண்டுள்ள தலைவனுகிய எம்பெருமானின் திருவடிகளையே சதாகாலமும் எண்ணிக் கொண்டிருக்கின்ருள் என்று கூறினுள்.

**முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்**
**மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்**
**பின்னை அவனுடையப் பேரூர் கேட்டாள்**
**பெம்மான் அவனுக்கேப் பிச்சி யானுள்**
**அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்**
**அகன்ருள் அகலிடத்தார் ஆசாரத்தைத்**
**தன்னை மறந்தாள் தன்னுமங் கெட்டாள**
**தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.**

என்று கூறிய தோழியின் கூற்ருல் தாயர்கள் அமைதியடைகின்றனர்.

நாட்கள் சிலச் செல்லுகின்றன, ஒரு நாளிரவில் தலைவி மிகஅரிதாகத் துயில்கின்ருள். குவளை மலர்க்கண்கள் எழிலுற மூடித் துயில்கின்ற நிலையைத் தோழி கண்டு அவளுடைய ஆழ்ந்த உறக்கத்தினை அறிந்து கொள்கின்ருள். எனினும் இடையிடையே நங்கையின் இதழ்கள் நளினமாய் நாணப் புன்முறுவல் செய்வதையும், காற்றில்சையும் நாணல் போல் மலர் கொடி போன்ற உடல் நடுங்குவதையும் தோழி நுட்பமாக காணுகின்ருள். ஆயினும் அவளை யெழுப்ப விரும்பாமல் இரவினைப் பற்பலச் சிந்தனைகளினூடே கழிக்கின்ருள்.

மறுநாள் பொழுது பூவாய் மலர்கின்றது. இசையாய் ஒலிக்கின்றது பனியாய் குளிர்விக்கின்றது, அமுதாய் வாழ்விக்கின்றது. கதிரொளியில் கமல இதழ்கள் அழகுற விரிவது போன்று, தலைவியின் எழில் நயனங்கள் சிறிது சிறிதாக விழிக்கின்றன. மகிழ்வுடன் எழுந்து அமர்கின்ருள், ஆயினும் சிறந்த நித்திலக்கோவையினூடே தெரியும் மெல்லிய நூலிழை போல். கலக்க ரேகையும் முகத்தில் படர்ந்து இருக்கின்றது. அதைக் கண்ட தோழி அதுபற்றி கேட்கின்ருள். உடனே அவள்தான் இரவு உறக்கத்தில் கண்ட கனவினைப் பற்றிக் கூறுகின்ருள். அதனுலேயே இன்பத்தையும், துன்பத்தையும் தான் அடைந்ததாகவும், அதனுலேயே தோழி கண்ட

மாற்றங்களும், மெய்ப்பாடுகளும் நிகழ்ந்தன என்றும் சுட்டு கின்ருள்.

ஐயரியுண் கண்ணிறுய்! திருவால வாயுடை யான்
ஐயங் கொள்வான்
மையனகை செய்தென் தண்காந்தள் காமேல் செங்கை
வைத்தார் போலும்
மையனகை செய்தென் தண்காந்தள் கரமேற் கைவைப்ப
மாழ்கிச் சோர்வேன்
தையலிடங் கண்டு நடுநடுங்கி விழித்தாவி
தரித்தேன் போலும்.

அதனைக் கேட்டுத் தோழி நகைக்கின்ருள். ஈசன் உமையொரு பாகனுய் இருப்பது நாமறிந்ததுதானே! என்று தேற்றுகின்ருள் தலைவி மனம் வருந்துகின்ருள். அலகிலா விளையாட்டயரும் அம்மையைப் பிரிய மனமின்றித் தனது உடலின் இடப்பாகத் தில் ஏற்ற இறைவன் என்னையும் ஒரு பொருட்டாய் மதித்து அருள் செய்வரோ? என்று கவல்கின்ருள்.

தலைவியின் கலக்கத்தைப் போக்க விரும்பும் தோழி குறி கூறுவதில் வல்லவளான குறத்தியொருத்தியை அழைத்து வருகின்ருள். அவள் முறைப்படிக் குறிகூறி வரும்போது அவள் மனதிலுள்ள வடிவத்தைக் குறிப்பாகப் புலப்படுத்து கின்ருள்.

'அம்மை
நெல்லிட்ட குறிக்குநீ நினைந்ததொரு பொருளதுநித்
திலக்கச் சார்க்கும்
வல்லிட்ட குறியினெடும் வனையிட்ட குறியுளதே தார்
வடிவு தானே!

என்று குறத்தி கூறுவதைக் கேட்ட பின்னரும் தலைவி ஆறுதலடையவில்லை. எனவே குறத்தி மேலும் விரிவாகக் குறி சொல்ல ஆரம்பிக்கின்ருள். நங்கையின் கரமலரின் சிறப்பினை, விளக்குகின்ருள்.

மாருமல் இருநிலத்தில் அறம்வளர்க்குங் கையே
மனையறத்தால் அறம்பெருக்கித் திறம்வளர்க்குங் கையே
வீருக நவநிதியே விளையுமிந்தக் கையே
மேன்மேலும் பாலமுதம் அளையுமிந்தக் கையே

ஆருத சனங்கள்பசி ஆற்றுமிந்தக் கையே
அணங்கனையார் வணங்கி நித்தம் போற்றுமிந்தக் கையே
பேருக நன்னகரம் காக்கு மிந்தக் கைகோ
பிறவாத நெறியார்க்கே ஏற்குமிந்தக் கையே!

என்று குறத்தி சொல்லக் கேட்ட இளவஞ்சிக் கொடி போன்ற தலைவி மிகவும் நாணமடைந்து துவள்கின்ருள். "நீ கூறுவது எல்லாம் சரியே! மணம் நிகழ்வது எப்போது? ஈசனை நான் அடைவது எப்போது?" என்று கேள்விக் குறிகளை முகத்தில் தேக்கி குறத்தியைப் பார்க்கின்ருள் அவளுடைய எண்ணங் களை நொடியில் உணர்ந்த குறத்தி,

நன்னகரில் ஈசனுன்னை மேவவருவார் – இந்த
நாணமெல்லாம் நாளை நானுங் காண்வே போறேன்
கைந் நொடியிற் பொன்னிதழி மாலை வருங்காண் – இனிக்
கக்கத்தி லிடுக்கு வாயோ வெட்கத்தை யம்மே.

என்று கூறிப் பகடி செய்தவளாய்த் தன் குறியை முடித்துக் கொள்கின்ருள். மன மகிழ்ந்த தலைவி குறத்தியின் மனங் கொள்ளும்படி அணியும், மணியும், பட்டும், துகிலும் பரிசாகக் கொடுத்து அனுப்புகின்ருள். தலைவியின் மகிழ்வு கண்டு தோழி யரும், தாயரும் களிப்படைகின்றனர்.

கடம்ப வனத்திலுறையும், சுந்தர பாண்டியனுகிய ஆல வாய் அவிர்சடைக் கடவுள். அந்த நங்கையின் உள்ளத்தை மட்டுந் தாஞ கவர்ந்து கொண்டான். வழிவழியாக வரும் மக்களுள் எத்தனை பேருடைய இதயத்தைக் கொள்ளை கொண்டான். அதனுல்தானே திருஞானசம்பந்தர் எடுத்த வுடனேயே, அவனைப் பற்றிக் குறிப்பிடுங்கால் "என் உள்ளம் கவர் கள்வன்" என்று அன்போடு. உரிமையோடு குறிப்பிடு கின்ருர். எத்தனை எத்தனை நெஞ்சங்களைத் திருடிக் கொண்டான். எத்தனை எத்தனை இதயங்கள் அவன் அருட் பார்வைக்கு ஏங்குகின்றன? எத்தனை எத்தனை உயிர்கள் அவனைப் போற்றி, வழிபட்டு, வணங்கி வாழ்கின்றன. தான் மட்டும் எதிலும் பற்றில்லாமல், பிறர் மனதைக் கவர்ந்து கொண்டு மன்றிலாடும் திருவருட்கள்வனின் அன்பும், ஆதரவும் அடியார்களுக்கு மட்டுமன்றி ஆண்டு நிறைவெய்தும் 'குமரகுருபரனுக்கும்" உரியதாகுக.

# ‘தள்ளல் அறமாமோ’

திரு. கு. சோ. முருகன் அவர்கள்,
சர்வசன உயர்நிலைப்பள்ளி
கோயமுத்தூர்–64100 ;

1 ‘‘அறமேபுரி ஆசைமிக அரன்பால் இருநாழி
அளவுள்ளநெல் பெற்றங் கையால் முப்பத்திரண் டறமும்
திறமேபுரி செயல்கண் டறம் வளர்த்தாள்எனப் புகழ்வர்
திகழ்காஞ்சியில் சிவனைத்தொழும் சிவகாமியாம் தாயே!
அறமோபுரி யேன்நான்அரன் அடியோதொழு தறியேன்
‘அன்னைஅறம் வளர்த்தாள்உனைக் காப்பாள்வ ணங்’ கென்ற
அறவோர்அறி வுரையின்படி அன்பேமிக வந்தேன்
அடிமைஎன வந்தார்தமைத் தள்ளல்அற மாமோ?’’

2 நீயேஅருள் செய்யாவிடின் யாரேஎனைக் காப்பார்
என்றும்பிழை செய்யும்சிறு பிள்ளைமனம் மாறி
தாயேஎன அழைத்தால்வெறுத் தொதுக்கும்நிலை உண்டோ?
தள்ளாதெடுத் தணைக்கும்செயல் அன்றோஉல கியற்கை
நாயேன்புரி தீமைபல நல்லோர்எவ ருக்கும்
நன்மைஎன ஒன்றும்செயேன் ஆனால்உனை அடைந்தேன்
வா,ஏன்பயன் வேண்டாம்அருள் தந்தேன் எனக்கூறி
தாயாய்அணைத் தாயேல்பிழைத் துய்வேன்துணை இல்லேன்’’

3 ‘‘அன்றேல்அல மந்தேஅறி வழிந்தேஅலைக் கழிந்த
ஆசைச்சுழிப பட்டுச்சினத் தீயால்சுடு பட்டு
நின்றேவினை தள்ளத்துணை ஒன்றும்அறி யாது
நீரில்அகப் பட்டோர்சில துரும்பும்துணை ஆகும்
என்றே கையில் பற்றித்தளர் வெய்தும்திறம் போன்றே
என்றும்பிறர் ஆவார்துணை என்றேபலர் பின்னால்
சென்றேதினம் சிரமப்படல் ஒன்றேநிகழ் செயலாம்
செல்வீ!அழ காமோஉன தருளுக்கிது காப்பாய்’’

# மூன்றும் திருமுறையின்
## முதற்பாடல்கள் — உரை

திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

90: திருத்துருத்தியும் வேள்விக்குடியும் பண்: சாதாரி

ஓங்கிமேல் உழிதரும் ஒலிபுனல்
கங்கையை ஒருசடை மேல்
தாங்கினார் இடுபலி தலைகல
னாக்கொண்ட தம்மடிகள்
பாங்கினால் உமையொடும் பகலிடம்
புகலிடம் பைம் பொழில்சூழ்
வீங்குநீர்த் துருத்தியார் இரவிடத்
துறைவர் வேள் விக்குடியே.

பொழிப்பு: உயர்ந்து விண்ணில் சுழல்கின்ற ஒலிக்கின்ற நீராகிய கங்கை ஒப்பற்ற சடையின்மேல் தாங்கிக் கொண்டவரும், போடும் பிச்சையைத் தலைஓடே பாத்திரமாக ஏற்றுக் கொண்ட தமக்குத் தாமே முதலாக உள்ளவரும், சிறப்பினால் உமாதேவியோடு பகற் காலத்தே தங்குமிடமாக பசிய சோலைகள் சூழ்ந்த (காவிரியின்) பெருகிய நீருக்கு நடுவே உள்ள துருத்தி என்ற தலத்தையுடையவரும் ஆகிய சிவபெருமான் இரவுக் காலத்தே வேள்விக்குடி என்ற தலத்தில் தங்கி இருப்பார்.

மேல்-விண்; உழிதருதல்-சுழலுதல்; ஒரு-ஒப்பற்ற; பலி-பிச்சை உணவு; கலன்-உண்கலனாக; புகலிடம்-வாழும் இடம்; துருத்தி-ஆற்றுக்கு நடுவே எழுந்ததிட்டு. இதனை வடமொழியில் அரங்கம் என்பர், துருத்தி என்பது தற்போது தஞ்சை மாவட்டத்தில் குற்றாலம் என வழங்குகிறது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் காவிரி ஆற்றுக்கு நடுவில் உள்ள திட்டில் கோவில் இருந்தது. வெள்ளத்தால் கோவில் பாழ்பட்டிருந்ததால் பகலில் இங்குப் பூசை நடக்கும்; இரவில் இறைவன் திருமேனியை காவிரியின் வடகரையில் உள்ள வேள்விக்குடிக்கு எழுந்தருளுவித்துப் பூசை நடத்தினர். இவ்வாறு நடைபெறும் போது ஞானசம்பந்தர் இங்கு வந்து வழிபட்டு அந்நிகழ்ச்சியைப் "பகலிடம் புகலிடம் துருத்தியார் இரவிடத்து வேள்விக்குடி உறைவர்" என்று குறிப்பிட்டார். மீண்டும் ஞானசம்பந்தர் இங்கு இரண்டாம் முறையாக வரும் போது காவிரியின் நடுவிலிருந்த கோவில் முற்றும் சிதைந்து விட்டபடியால் தென்கரையில் புதுக்கோயிலில் இறைவனை

எழுந்தருளுவித்திருந்தனர். இந்நிகழ்ச்சியை ஞானசம்பந்தர் மற்றோர் பதிகத்தில், ''காவிரிக் **கரைத்தலைத்** துருத்திபுக்கிருப் பதே'' என்று குறிப்பிட்டார். இப்பதிகத்தைப் பாடுபவர் பழியிலராவர்,

**91, திருவடகுரங்காடுதுறை** **பண்: சாதாரி**

**கோங்கமே குரவமே கொழுமலர் புன்னையே**
**கொகுடி முல்லை**
**வேங்கையே ஞாழலே விம்முபா திரிகளே**
**விரவி எங்கும்**
**ஓங்குமா காவிரி வடகரை யடைகுரங்**
**காடு துறை**
**வீங்குநீர்ச் சடைமுடி அடிகளார் இடமென**
**விரும்பினரே.**

பொழிப்பு; கோங்கமரம், குரவமரம், செழித்த மலர்களை யுடைய புன்னைமரம். கொகுடி என்ற ஒருவகை முல்லைக் கொடி, வேங்கை மரம், ஞாழல் மரம், பருத்த பாதிரிமரம், என்பவைகள் எவ்விடத்தும் கலந்து உயர்ந்து நிற்கின்ற காவிரி யின் வடகரையைச் சார்ந்த குரங்காடுதுறை என்ற தலத்தை மிக்க கங்கை நீரையுடைய சடைமுடி தரித்த முதல்வராகிய சிவபெருமான் தாம் இருப்பதற்குரிய இடமென்று விருப்பம் கொண்டார்.

விரவி–கலந்து; அடைதல்-சார்ந்து இருத்தல்; அடிகள்–முதல்வர், வாலி என்ற குரங்கினத் தலைவன் வழிபட்டதாலும் காவிரியின் வடக்கே இருப்பதாலும் வடகுரங்காடுதுறை எனப் பெயர் பெற்றது. (இதேபோல் சுக்ரீவன் என்ற குரங்கினத் தலைவன் வழிபட்டதாலும் காவிரியின் தெற்கே இருப்பதாலும் மற்றோர் தலம் தென் குரங்காடுதுறை என வழங்குகிறது.) இப்பதிகத்தைப் பாடுவோர் கோழையுடன் தடுமாறிப் பாடி னும்கூட நீண்ட வானுலகத்தைச் சேர்வர். (தொடரும்)

(தொடரும்)

உ

சிவ சிவ

**சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி**
**அவாயம் அறவே அடிமைய தாக்கிச்**
**சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை**
**அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.**

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் திருமுறை வெளியீடுகள்

| | | ரூ. | பை |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ... | 2 | 50 |
| 2 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த காசிக்கலம்பகம் மூலமும் அரும்பதக்குறிப்பும் ... | 0 | 40 |
| 3 | ,, சிதம்பர மும்மணிக்கோவை ,, ... | 0 | 20 |
| 4 | ,, மதுரைக்கலம்பகம் ,, ... | 0 | 40 |
| 5 | ,, மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் ,, ... | 0 | 60 |
| 6 | திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா-மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்-மதுரைக்கலம்பகம்-நீதிநெறி விளக்கம்-மதுரை மீனுட்சியம்மை இரட்டைமணிமாலை மதுரை மீனுட்சியம்மை குறம் ... | 2 | 70 |
| 7 | திருவாரூர் நான்மணிமாலை-முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ... | 1 | 25 |
| 8 | திருவாரூர் நான்மணிமாலை உரையுடன் ... | 0 | 50 |
| 9 | சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ... | 1 | 00 |
| 10 | பண்டார மும்மணிக்கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ... | 1 | 00 |
| 11 | நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும், ஹிந்தியும் ... | 0 | 50 |
| 12 | ,, மூலம் ... | 0 | 10 |
| 13 | நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்-மூலம் ... | 0 | 15 |
| 14 | கந்தர்கலிவெண்பா மூலம் மட்டும் ... | 0 | 10 |
| 15 | கந்தர் கலிவெண்பா (புதிய பதிப்பு) ... | 0 | 05 |
| 16 | அபிராமியந்தாதி மூலம் ... | 0 | 15 |
| 17 | திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 5 | 25 |
| 18 | திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 3 | 75 |
| 19 | சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 2 | 75 |
| 20 | திருவாசகம் மூலம் (அச்சில்) | | |
| 21 | திருக்கோவையார் (பேராசிரியருரையும்பழையவுரையும்) ... | 4 | 50 |
| 22 | 9-ம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு மூலம் ... | 0 | 56 |
| 23 | ,, ,, தெளிவுரை ... | 3 | 25 |
| 24 | பெரிய புராணம் (மூலம்) புதிய பதிப்பு ... | 6 | 75 |
| 25 | பதினோராந் திருமுறை (புதிய பதிப்பு) ... | 3 | 50 |
| 26 | பேராயிரப் பனுவல்கள் ... | 0 | 10 |
| 27 | திருத்தொண்டர் புராணசாரம் ... | 0 | 40 |
| 28 | அம்மையார் அற்புதத் திருவந்தாதி ... | 0 | 25 |
| 29 | திருக்கைலாய ஞானவுலா-உரையுடன் ... | 0 | 50 |
| 30 | திருக்கயிலைத் திருமுறை ... | 0 | 37 |
| 31 | பழமொழித் திருமுறை ... | 0 | 25 |
| 32 | அப்பர் விழா வெளியீடு ... | 0 | 25 |
| 33 | Hymns and Proverbs ... | 0 | 35 |
| 34 | திருவாரூர்-திருப்பனுவல்கள் ... | 0 | 11 |

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No. 1485/57.

Regd No. M. 5574 குமாரகுருபரன்

| | | | |
|---|---|---|---|
| 35 | குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத் திரட்டும் | ... 0 | 30 |
| 36 | கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்) | ... 1 | 75 |
| 37 | திருவாசகம் தேனும் கனியும் | ... 0 | 15 |
| 38 | தேவாரம் பாடும்பயன் | ... 0 | 15 |
| 39 | காசிக்கலம்பகம் உரைநடை | ... 0 | 15 |
| 40 | தாழைத் திருமுறை | ... 0 | 15 |
| 41 | ஐந்து நீதி நூல்கள் | ... 0 | 10 |
| 42 | நவச்கிரகமாண்பு | ... 0 | 25 |
| 43 | ஸ்ரீ சைலம் | ... 0 | 10 |
| 44 | திருவுசாத்தனக் கல்லெழுத்துக்கள் | ... 0 | 37 |
| 45 | திருவெம்பாவை–திருப்பள்ளியெழுச்சி | ... 0 | 10 |
| 46 | செந்திலாண்டவன் மகிமை | ... 0 | 15 |
| 47 | திருக்குறள்–உரைக்கொத்து–அறத்துப்பால் (4–ம் பதிப்பு) | ... 2 | 00 |
| 48 | திருமுருகாற்றுப்படை | ... 0 | 15 |
| 49 | தேவார வைப்புத்தல விளக்கம் | ... 0 | 15 |
| 50 | திருக்குறள் மணக்குடவர் உரை (முப்பாலும் சேர்ந்தது) | ... 2 | 00 |
| 51 | திருக்குறள் | ... 0 | 35 |
| 52 | திருக்குறள்–அறத்துப்பால்–சிற்றுரை | ... 0 | 20 |
| 53 | திருக்குறள்–பொருட்பால்–பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் | ... 0 | 15 |
| 54 | முதுமொழிமேல்வைப்பு (குறிப்புரை) | .. 0 | 60 |
| 55 | திருக்குறள் அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழிபெயர்ப்பும் | ... 1 | 50 |
| 56 | திருக்குறள் பொருட்பால் | ... 2 | 50 |
| 57 | திருக்குறள்–காமத்துப் பால் ஷை 53, 54, 55, திருக்குறள் 2 புத்தகமும் | ... 4 | 00 |
| 58 | கந்தர்கலிவெண்பா சகலகலாவல்லிமாலை ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புடன் | ... 1 | 25 |
| 59 | திருவருட்பயன் மூலம் இந்தி, ஆங்கிலமொழிபெயர்ப்புடன் | ... 1 | 0 |
| 60 | சிவகொழுந்து தேசிகர் பிரபந்தம் | ... 3 | 00 |
| 61 | அகத்தியர் தேவாரத்திரட்டு (புதிய பதிப்பு) | ... 0 | 50 |
| 62 | மங்கலம் | ... 0 | 20 |
| 63 | திருஆணைத் திருமுறையும் உருத்திராக்க விதானமும் | ... 0 | 20 |
| 64 | கோதனத் திருமுறை | ... 0 | 16 |
| 65 | தோடுடைய செவியன் கோவண ஆடையன் | ... 0 | 15 |
| 66 | பண்டார மும்மணிக்கோவை உரைநடை | ... 0 | 15 |
| 67 | மகேசுவரபூசை | ... 0 | 15 |
| 68 | திருமந்திரம் (அச்சில்) | | |
| 69 | திருவிசைப்பா தேனும் கனியும் | ... 0 | 10 |

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்,
2. "தியாகராஜ விலாசம்" 53. பிள்ளையார் கோவில்தெரு, திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி. சென்னை-600005.

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம். 628601